உ

கணபதி துணை.

# விநாயகர் திருமண வைபவம்.

இஃது

அஷ்டாவதானம்

பூவை

கலியாணசுந்தரமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

சென்னை ஸ்ரீ கற்பகவிநாயகர்

நவராத்திரியுற்சவபரிபாலனபக்தசனசபையாரால்

சென்னை:

இந்து யூனியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

விஜய௵ மாசி

மீ௳ அனுஉ.

உ

கணபதி துணை.

# விநாயகர் திருமண வைபவம்.

## கணபதி வணக்கம்.

"அகரமென வறிவாகி யுலகமெங்கு மமர்ந்தகர வுகரமக ரங்கடம்மாற், பகருமொரு முதலாகி வேறுமாகிப் பலவேறு திருமேனி தரித்துக்கொண்டு, புகரில்பொரு ளைன்கிளையு மிடாநீர்த்தெய்தப் போற்றுநருக் கருட்கருணை புரிந்தல்லார்க்கு, நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டுகொள்ளு நிருமலனைக் கணபதியை நினைந்துவாழ்வாம்."

---

"சிவபெருமான் கட்டளையை மேற்கொண்டு பிரமதேவன் முறைமைப்படி சகலவண்டங்களையும் படைத்தவுடன் ஆன்மகோடிகள் பலவுமோங்கி நிலைபெற்றுவாழ்ந்தன. அக்காலத்து விநாயகமூர்த்தியானவர் கைலாயகிரியிலே சிவபெருமானுக்குப்புத்திரராக அவதரித்திருந்தார். அப்போது மகாதவசிரேஷ

டராகிய நாரதமுனிவர், அப்பிரமதேவன் புத்திரிகளாகிய சித்திபுத்திகளைத் திருமணஞ்செய்விக்கவெண்ணி நின்மலஸ்வ ரூபியாகிய கணேசமூர்த்தி எழுந்தருளியிருக்கும் கைலாயபர்வ தத்தைநோக்கி மிக்க ஆவலோடுசென்று, அப்பர்வதத்தின்கண் பொன்மயமாகவிளங்குஞ் சபாமண்டபத்தின முகப்பில் இரத் தினமயமாயோங்கிய சிங்காதனத்தின்மீது தேவகணங்கள் பு டைசூழ்ந்து போற்றுதல்செய்யவீற்றிருக்கின்ற விநாயகமூர்த் தியைக்கண்டு, அவரது திருவடிக் கமலங்களிற் சாஷ்டாங்கமா கப்பணிந்து, களிப்புடன்றுதித்து, வீணையிற்கட்டுண்டிருக்கி ன்ற நரம்புகளைத்தடவி, இசையாகிய புதியவமுதத்தை நிறை த்துக், கர்த்தன்புகழைப்பாடி, அவர்திருவருளைப்பெற்று, இத னை விண்ணப்பஞ்செய்வதாயினர். ஓ சர்வபரிபூரணகருணாசா கரமூர்த்தியே, தேவரீரிடத்தில் அடியேன் தெரிந்துகொள்ள வேண்டுவதொன்றிருக்கின்றது, அதனைவிண்ணப்பஞ்செய்யச் செவிகொடுத்தருளவேண்டும் அதாவது தாமரைமலரை ஆசன மாகக்கொண்ட பிரமதேவர், முன்னர்தமது தியானசித்தையி னின்றும் உதித்தவர்களாகிய இரண்டு கன்னியரைத், தேவ ரீர்க்குத் திருக்கல்யாணஞ்செய்வதான வோரெண்ணத்தையு டைத்தா யிருக்கின்றார். அன்றியும் அப்பிரமதேவரோ இலக் கணம் அமைந்த மைந்தர்களை இனிமையாகப் படைக் குங்காலத்தில், மும்மலக்குறும்புகளை நீக்கவல்ல தேவரீர் திருவுருவங்களை யெண்ணுவார், மாட்சிமைபெற்ற மங்கை யரைப் படைக்குங்காலத்தில், யாவருந் துதித்தற்குரிய அம் மாதர்கள் வடிவங்களை முற்றுங் கருதுவராயின், சுவாமிகள் வனப்பினுக்கேற்ற அவர்கள் பேரழகின் பெருமைகள் இவ் வளவினவென்று அடியேனு லளவிட்டுரைக்கற்பாலவோ, ஆயினும் எனதறிவிற் புலப்பட்டவாறு அவர்கள் பாதாதிகே சமுதலிய அவயவவிலக்கணங்களைச் சிறிது கேட்டருளவே ண்டுமென்றுபிரார்த்தித்துச்சொல்வதாவது, பருத்திடலுஞ் சு

ருங்குதலுமில்லாது, மிருதுவாகி, அனிச்சமலரின்மேல் வைப்பினுங்குழைந்து, வெப்பமடைந்து, கொடிரேகை,மச்சரேகை கவிகைரேகை, சங்கரேகை, சக்கரரேகை, முதலானபலரேகைகளைப்பொருந்தி, அழகியசெந்தாமரைமலரைவென்றுசிவந்திருக்கின்றஉள்ளங்கால்களையும்; நீளல்,குறுகல், நேர்தல்,முதலியகுற்றங்க ளின்றிச், சகலவிலக்கணங்களையும் வாய்ந்தனவாகி, மிக்கவொளிபொருந்திய பவளத்துண்டங்களைச்சிறுமையுற்றழியச்செய்துவிளங்கியிருக்கின்றபாதவிரல்களையும். செங்கழுநீர்மலரைக்கோபித்துத், தாளத்தைப்பங்கப்படுத்திச், சந்திரனைப்பயமுறப்பணித்துச், சிறிது சிவந்த நிறமுடையனவாய், வெளுத்து, வட்டமாகிக், குற்றமறமிக்கவொளிவீசுகின்ற பாதவிரல்களினது நகக்கூட்டங்களையும், களிப்பையுற்றகூர்மமானது தன்னுறுப்புக்களை யடக்கிக்கொள்ளவும், புலவர்கள் தங்கள்புத்தகங்களைச் சேமத்தின்மறைத்துவைக்கவுஞ்செய்து, இலக்கணவளவின்மேற்பட்டு, மிருதுவாகி, நரம்புகள்,உரோமங்கள், இல்லாமல், கோல்போல்வளர்தல்,மிக்குயர்தல், கோணல்,என்கின்ற குற்றங்களகன்றுபிரகாசிக்கின்ற புறவடிகளையும், கைப்பந்துக்கொப்பாகிமிகப்பருத்திடலும்,உயர்தலும், இல்லாது, விளங்குகின்ற குதிகால்களையும்; நரம்புதோற்றலும், உயர்ந்திருத்தலும்,இல்லாது, அழகுபொருந்தத் தசைந்து, செம்பொனிறுக்குஞ் சிறுதராசின் றட்டையொத்து வட்டமாயிருக்கின்ற பரடுகளையும்; கன்னிக்கதலியையொத்து, நரம்பு முரோமமுந்தோற்றாது சிறந்திருக்கின்ற தொடைகளையும்; வருந்திச்செய்த அம்பு பெய்தூணியை யொத்து, நரம்பு முரோமமுங்கலவாது விளங்குகின்ற கணைக்கால்களையும் வற்றுதலில்லாமல், வட்டமாகியதாளத்தையொத்துத், தசையைப் பொருந்தி, ஞெண்டினைமுழுதுஞ்சினந்து, மிக்க அழகுவாய்ந்திருக்கின்ற முழந்தாள்களையும்; மெல்லியதொடையைச்சேர்ந்துறுணையாகநெருங்கி, மதம் பொழிகின்றயானையினது பிடரியையும் ஆமையை

டம் வென்று, இருபத்து நான்கு அங்குலவளவுவாய்ந்திருக்கின்ற நிதம்பத்தையும்; தாமரைமலர்வாய்ந்த குளப்படிகளைமருட்டிச், சிற்றெலியுரோமம் போன்ற நெருங்கிய மிருதுவான மயிர்கள் உள்ளோங்கி, நெடுமையற்று, இடப்பக்கத்திற் பள்ளமான சுழிகளில்லாது, எழில்வாய்ந்திருக்கின்ற செவ்விதாகிய வயிற்றுமடிப்புக்களையும்; பருத்து உயர்ந்து மிக்கமேன்மை பொருந்தியிருக்கின்ற சகனத்தையும்; கொங்கைகளால் வருத்தமெய்தி மெலிவுற்றிருக்கின்ற மருங்குலையும். தக்கவடிவத்தோடும் அகன்று தாழ்ந்து வலஞ்சுழித்து நரம்பு முரோமங்கள் நீங்கி மிக்கவொளி பெற்றிருக்கின்ற உந்தியையும்; பலவகைப்பட்ட சுழிகளும் உரோமங்களும் நீண்டமடிப்புகளும் இல்லாமல், மூன்று நல்ல ரேகைகளைப் பொருந்திச், சிறந்த வாலிலை போல வாய்ந்து, சொல்லுக் கடங்காத வனப்பில் விளங்கியிருக்கின்ற வயிற்றினையும்; நலமாகவரைந்தொழுகியகொடிபோன்றவயிற்றுமயிரொழுங்கினையும். என்பு நரம்பு உரோமம்ஆகியஇவைகள் தோற்றாமல், நடுவுமாழாமல், மிருதுவாகி, இன்புறத்தக்க தசையைப் பொருந்திப், பதினெட்டங்குல வளவை யுடையதாய்ச் சீர்கொண்டிருப்பனவாகிய விலாப்புறங்களையும். புடை பரந்து மேலெழுந்து நீலமணி சேர்த்ததற்கொப்பான சிலீ முகம் வாய்ந்து இடை தோன்றாமல் நெருங்கிப் பெருமை பொருந்திய மார்பினிட முழுவது நிறைந்து தடையில்லாமற் பருத்துப் பூரித்துத் தம்முளிரண்டு மொத்து இடையினை வருத்தி நிமிர்ந்திருக்கின்ற சூசங்களையும்; பருத்தல் நீளல் நுதியாழ்தல் உருநேர்தல் நீங்குதல் நலமறல் ஒவ்வாதிருத்தல் கடினமுறல் ஆகியவிக் குற்றங்கள் பொருந்தாமல், வன்மையாகிய சக்கரம் போலப் பிரகாசித்து, அடிகனத்துத், தனக்குத்தானே யொப்பாகியிருக்கின்ற சூசுகங்களையும் நீளுதலும் குறுகுதலும் என்பு தோன்றுதலும் இல்லாத கழுத்தடியினையும்; என்பு நரம்பு உரோமம் ஆகிய இவைகள் தோன்றாமல், பெருக்காமல், அழகு

நிறைந்துதிரண்டிருக்கின்றவேய்போற் பிரகாசிக்குந் தோள்களையும்; தசை தோன்றாதனவாகிய மூட்டுகளையும். நீண்ட நரம்புகளும் உரோமங்களுந் தோன்றாது, வன்மைபொருந்திய மகர வீணையை யொத்த முன்னங்கைகளையும்; வரிசை யாகிய பலரேகைகள் தம்முனெருங்குதலும், மிகவு நீங்குதலும், பரந்து தோன்றுகின்ற நரம்புகள்மிகுதலும், உரோமங்கள்பொருந்துதலும், ஒட்டகம்,தவளை,செந்நாய்,பாம்பு,தேள்,கழுகு,பூனை கர்த்தபம்,நரி,ஈட்டி,இவைகளைப் போலிருக்கின்ற வெறுக்கப்பட்ட ரேகைகளுமில்லாமல் கவிகை,கூர்மம்,வலம்புரிச்சங்கு, மச்சம், பதுமம், நவக்கிரகசக்கரம், நுகத்தடி, துலாக்கோல், வண்டில், இடபம், யானை, குதிரை, தோட்டி, சாமரம், வச்சிராயுதம், நேமி, என்னும் இவ்வகை ரேகைகளைப் பொருந்தி, வனத்திற்றிரிகின்ற முயல் வயிற்றினு மிருதுவாகிச் செவ்வாம்பல் மலரைப்போல் பிரகாசிக்கின்ற உள்ளங்கைகளையும். சிவத்தலின்றி வளைந்திருத்தலும் இடை விட்டு நீங்குதலும் நரம்பு முரோமமும் பொருந்துதலும் நேர்ந்திருத்தலும்மிருதுவில்லாமன் மிக்க வன்மையாதலும் இன்றி நீலோற்பல முகையை வென்று, சிவந்த நல்ல ரேகைகள்வாய்ந்தகை விரல்களையும். பள்ளமாதலும் வெண்மையாதலும் குணமில்லாமல் சரசரத்திருத்தலும் புள்ளியாகிய வெண்மை தோன்றலும் பொன்னிறமாதலும் இல்லாது, கிளியின்வாயினை யொத்துச், சிவந்து பிரகாசிக்கின்ற கை விரல்களினது நகக்கூட்டங்களையும். என்பு தோன்றல் நரம்புமுரோமமுமருவுதல் வாழ்தல் உயர்தல் கூனியிருத்தல் முதலியனவன்றி, மிருதுவாகிய தசையினால் மறையப்பட்டு, எழுதற்கரிய வனப்பின் மிகுந்திருக்கின்றமுதுகினையும்;கோணுதல்நரம்புதோற்றல்மயிர்கிளைத்தல் நீளல் வற்றல் என்னுமிக்குற்றங்களின்றி, எழில்வாய்ந்திருக்கின்றபிடரியினையும்; குறுகலும் நீளலும்பருத்தலும் உரோமங்களையுடைத்தாதலும் நேர்ந்திருத்தலும் மடிப்புறலும்

இல்லாமல், கமுகமரத்தினை நாணச்செய்து, நான்கு அங்குலத்
தோடு மூன்றுரேகைகள்பொருந்தி, அழகுநிறைந்திருக்கின்ற
கண்டசதையும் இருபகுப்பாதலும் பள்ளமிசைதலும் நரம்புமு
ரோமமுமருவுதலும் குறுகுதலும் நீண்டிருத்தலும் வளைந்திருத்
தலும் வற்றியிருத்தலும் இல்லாமல், இருவிரலளவில் வட்டமா
ய்த், தசையையுடைத்தாய் எழில்கொண்டு இன்பந்தருவனவா
கிய மோவாயினையும். சிறந்தபவளத்துண்டுபோற்றிரண்டு, இரு
பக்கமுங்குவிந்து, அழகிய ரேகையொன்றுபொருந்திப் பிரகா
சிக்கின்ற கீழதரமும்; அதற்குமேற்சற்றுயர்ந்து வனப்புவாய்ந்
திருக்கின்ற மேலதரமும். மத்தியில் ரேகையாழ்ந்திருத்தல்,
வீங்கல், மதரறக்கருகியிருத்தல், வெளுத்திருத்தல், மருவு
றல், தொங்கல், உரோமமுறல், மேலுங்கீழும் ஒவ்வாது இடை
விட்டிருத்தல்,முதலியனவகன்று, பவளத்தையொத்துச் சிறந்
திருக்கின்ற வாயினையும்; பரவியும், உயர்ந்தும், அகன்றும்,
நீண்டும், பசுமையுற்றும், பொன்னிறமாகியுங், கறுத்துந், தன்
புறத்துகின்ற குற்றங்களில்லாமல், மயிலிறகினடிகளையும்,
வெளுத்தநாரங்களையும் முல்லைபரும்புகளையுமொத்து வெண்
மையாகவுந் திருத்தமாகவுமிருக்கின்ற முப்பத்திரண்டுபற்களை
யும், கடினமும் வெண்ணிறமுங் கருமையும் நீட்சியும் பருத
தலும் விலகலும் இல்லாமல், சிவந்தவண்ணமாய் மிருதுவா
யிருக்கின்ற, நாவினையும்; வெண்மையும் கருமையும் வன்மை
யும் உயர்வும் நீட்சியும் பொருந்தியிருத்தலாகிய குற்றங்க
ளின்றி, வெண்ணெயென்று சொல்லும்படி மிருதுவெய்திச்,
சாதிலிங்கத்தினுஞ்சிவந்து செழுமை பொருந்தியிருக்கின்ற
உண்ணாவினையும்; கண்கள் இடுகாமலும் கபோலஞ்சுழியாம
லும் பற்கடோன்றாமலும் வரிதுநகைபுரியாமலும மிகுநகை
செய்யாமலும் விளங்குகின்றமுறுவலையும்; வளைதல் கறுத்தல்
சிவத்தல் நுனியினும் இடையினும் பள்ளமுறல் இலக்கணவள
விற்குறுகுதல் முதலான குற்றங்களின்றித், துளைகள்சிறுத்து,

இருபக்கங்களுஞ் சற்றுயர்ந்து எள்ளின்மலரையொத்து, இர
ண்டு மூன்றுதரம், அதிசயமுறமெல்லெனத்தும்மலன்றிக், கல்
லெனப்பலகாற்றும் முதலில்லாத நாசியினையும் வன்மையுறலும்
பள்ளமாதலும் உரோமம்பொருந்துதலும் இல்லாமல், கண்ணாடி
யொன்றேயன்றி மற்றவை கட்கொப்பாகாது, வட்டமாய்த்,
தசையையுடைத்தாயமைந்திருக்கின்ற அழகிய கபோலங்களை
யும்; யானை ஆடு எருமை இவைகளினுடைய கண்களையொத்
திருத்தலும், வட்டமாதலுங் குற்றமுறவலஞ்சுழலுதலும் உய
ர்ந்திருத்தலும் மாறுநிலையுடைத்தாதலும் புறவின்கண்ணிற
மொத்தலும் இல்லாமல, தெளிந்த நீலமணிபோலச் சிறப்புறக்
கறுத்து, வெண்மையொளிகொண்டு கடையிற்செவ்வரிபரந்து,
நெருங்கிய கருமைவாய்ந்த மெல்லிய ரோமங்களைப்பொருந்தி,
விளங்குகின்ற நீண்டவிழிகளையும் உரோமம் இடைவிட்டிருத்
தலும் பொன்னிறமெய்தலும் பருத்தலும் நீளலும் இல்லாதக
ண்ணிமைகளையும்; உரோமம்பருத்திருத்தலும் நீண்டிருத்தலும்
பொன்னிறமுற்றிருத்தலும் வன்மையின்றிவணைப்பகன்று இ
டைவிட்டிருத்தலும்இல்லாமல்ஒன்றோடொன்றுநெருங்காமல்,
போர்செய்யும்வில்லைப்போன்றுவிளங்குகின்றபுருவங்களையும்.
இகழத்தக்க நரம்பும் உரோமமுமுண்டாகி மேல்வளைந்து உயர்ந்
திருக்கின்றகுற்றங்களில்லாமல், வள்ளைத்தண்டினைப்போலநீட்
சியுற்று, மலர்ந்ததைையொத்து, நற்சுழிகளையுடையனவாய்விளங்
கியிருக்கின்ற செவிகளையும். நரம்பு முரோமங்களுமில்லாமல், ந
வக்கிரக சக்கரரேகையைப்பொருந்தி, மூவிரலகலமாய், அர்த்த
சந்திரவடிவங்கொண்டு பிரகாசிக்கின்ற நுதலினையும், பூரணசந்
திரனைப்பழித்துக, குளிர்ச்சிபொருந்திய ஆகாயகங்கையிற் பூத்
ததாமரைமலரையொத்துச், சிமந்தரேகைகளைவாய்ந்து, நீண்டு
விளங்குகின்ற முகத்தினையும், வீங்கலும் நீளலும் விரிதலு
முறாமல், இளம்பூவரும்புபோலச் சிமந்தரேகைகளைவாய்ந்து;
முட்டறஉயர்ந்து, வட்டமாய், அழகுநிறைந்திருக்கின்ற பிடரி

மத்தகம் சென்னி ஆகியமூன்றினையும். இடையிடை, வெளி கடோற்றுதல் மிகக்குறுகுதல் நீளல் நுனியிற்பிளப்புற்றிருத்தல் சிவந்தபொன்னிறமாதல் வன்மையணுகுதல் வாட்டமில தாதல் சடைபற்றியிருத்தல் முதலியகுற்றங்களில்லாமல் வண்டினங்தொடர்ந்ததுபோன்றும், கருமைகொண்டிழைத்ததுபோன்றும், மேகங்கள் கண்படுத்திருப்பனபோன்றும், கூந்தற்பனையினைப் போன்றுமிருந்து, கண்டவர்கள் வியப்பெய்த, நீண்டு பரிமளித்து நெய்த்து இருண்டு தாழ்ந்து பூங்கொத்துகளைப் பொருந்தி இதனின்மிக்க கறுப்பில்லையென்று சொல்லத்தக்கதாக விளங்குகின்றகூந்தலினையும்; உடையவர்களாயிருக்கின்றார்கள். இஃதன்றி புருவமத்திலும், நாசிநுனியிலும் நிதம்பப்புறத்திலும், கைகளினிடத்திலும், கழுத்தினிடத்திலும், செவிகளிடத்திலும், கபோலத்தினிடத்திலும், இடப்பக்கத்திலும், கொங்கைகள் வலப்பக்கத்திலும், சிவந்தமருவைப்பெற்றிருக்கின்றோரும்; திரண்டு அழகுபொருந்திய நெற்றியிலே வடித்தெடுத்தமுத்தலைச் சூலரேகையைப்பெற்றோரும். கைகளிலும மார்பிலும், கொப்பூழிலும், நாசியிலும், முதுகுவலப்புறத்திலும், அல்குலடிப்புறத்திலும், வலஞ்சுழியைப்பொருந்தியிருக்கின்றோரும்; பிடரிவலப்புறத்தில் இரண்டுவலஞ் சுழியைப்பெற்றோரும்; அங்குலடிப்புறத்தில் வண்டிலைப்போலு நற்சுழிகளையுற்றோரும்; பிரமதேவனால் வளர்க்கலுற்ற அவ்விரண்டுமங்கையரது பாதபதுமங்களை முன்னர்வணங்கி யருள்பெற்றோராவர். நாசிநுனியிற்கறுத்த மறுவையுடையோரும்; புறங்காலிலும் அல்குலந்தத்திலும், சிறுமசகங்களைப்போன்ற வடுவைப்பெற்றோரும்; நிதம்பங்தொடங்கி யல்குல்வாயில் ஒருசுழியை நிறைந்திருக்கப்படைத்தோரும்; அல்குன் முதல்வயிறளவும் ஒருசுழியைப்பொருந்தினோரும்; நிதம்பமுதல்வயிறளவும் இருசுழிகளையடைந்தோரும்; விழிகளிற்சுழிமருவினோரும்; நீண்ட நெற்றியில் வலஞ்சுழியையுடையோரும்; கூந்தலில் வலமும்

இடமுமானசுழிகளை வாய்ந்தோரும்; அரையின் மத்தியிலும், செவிகளிலும், கண்டத்திலும், குழல்வளர்ச்சியினுச்சியிலும், சுழிகளைப்பெற்றோரும்; நித்திரைபுரியுங்காலத்திற் பற்களைக் கடிக்கின்றோரும்; பறவுமித்தன்மைத்தாகிய குற்றங்களையுடையோரெல்லாம், பிரமதேவனுடைய நற்றவப்பயனாய்த்தோன்றிச் சிறந்த அவயவங்களைவாய்ந்திருக்கின்ற அம்மங்கையரது வடிவங்களைக்கண்டு தரிசனஞ்செய்தோரல்லர். மனவாக்குக் காயங்கட்களவுபடாத பரிபூரணஸ்வரூபியாகிய கணேசமூர்த்தியே! ஒப்பற்ற அம்மங்கையருடைய வழகின் சாயல்கள் இத்தன்மையவென்றுரைத்தேனன்றி, உள்ளவிதத்தை யாவர்சொல்லவல்லவர்களென்று நாரதமுனிவர்சொன்ன மாத்திரத்தில் கொன்றைமாலிகையணிந்த பரமேஸ்வரர் புத்திரராகிய கணேசமூர்த்தி அங்கீகாரங்கொண்டு, அம்முனிவருக்கு அருள்வழங்கினார். அவ்வருளைப்பெற்ற நாரதமுனிவர் பின்னுந்திருவடிகளில்வணங்கிவந்தித்து விடைகொண்டு, அம்மங்கையரிடத்திற்சென்று பலமுறைதுதித்து, அவர்கள் இன்புறத்தக்கதாகவும், இவ்வையகமுய்யரதக்கதாகவும், இதனைச்சொல்வதாயினர். புண்ணியபூமியில்முளைத்து அறமுதலிய நாற்பொருள்களையும் பூத்துயாவர்க்கும் இம்மைமறுமைப்பயனை விளைவிக்கவல்லகொடிபோன்று விளங்கிய எனது அன்னைமீரே! யான்விநாயகக்கடவுளுடைய திருவடிகளை யன்போடுபணிந்து, அவரதுசமுகத்தின் முன்னர் உங்கள் வனப்புகளனைத்தையுமெடுத்துரைத்தேன், அவைகளையக்கடவுள் அங்கீகரித்து, உம்மைத்திருக்கலியாணஞ் செய்துகொள்ளமதித்திருக்கின்றனர், இதுநடந்தவிதந் தாங்களறியவேண்டியதென்ன, அக்கன்னியருமனமகிழ்ந்து, கணேசமூர்த்தியைவிவாகஞ்செய்துகொள்ள மிக்க ஆவல்கொண்டிருந்தார்கள். அப்பால் அந்நாரதமுனிவர் பிரமதேவனிடத்திற்சென்று, தாம் நடத்திவந்தகாரியங்களனைத்தையுமறிவிக்க, அப்பிரமன் மனக்களிப்படை[illegible]இனி நமது

புத்திரிகட்கு விரைவில் விவாகத்தினைச்செய்து, முடிக்கவே ண்டுமென்று தன்றுள்ளத்தின் மதித்தெழுந்தவனாய், உட னே கைலாயவரையிற்சென்று, சோமன் சூரியன் அக்கினி என்கின்ற மூன்றுவிழிகளையுடையவராகியும், ஈசானம், தற் புருடம் அகோரம் வாமம் சத்தியோசாதம் என்கின்ற ஐந்து முகங்களையுடையவராகியும், மூவர்முதல்வராகியும், வீற்றிருக் கின்ற சிவபெருமானைப்பணிந்து, பலமுறைதுதித்துநின்றான். உமாபதியாகிய பரமேஸ்வரர் அப்பிரமதேவனை நோக்கி, நீ இங் குவந்தகாரணமென்னென்றுவினவியருள, அதற்கப்பிரமதே வன் சொல்லுவான், எந்தையே பிரமன், விண்டு, உருத்திரரா கிய எங்கண்மூவரையும் ஈன்று, ஆக்கன்முதலிய முத்தொழில் களைத்தந்து ஆட்கொண்டருளிய கணேசமூர்த்திக்கு, இலக்கு மியுங்கண்டு நாணத்தக்கவனப்பினைவாய்ந்த எனது புத்திரிக ளைமணஞ்செய்துகொடுக்க ஆவலுற்றிருக்கின்றேன், அதற்குத் தேவரீரனுமதியைப்பெறுமாறு வந்தேனென்றான். அதனைச் சந்திரசேகரமூர்த்தியாகிய சிவபெருமான் செவியுற்றுக், கிரு பையோடும் உமாபரமேஸ்வரியினுடைய திருமுகத்தைநோக்க அவர்பிரமதேவன் முகத்தைப்பார்த்து, விநாயகமூர்த்திக்குத் திருக்கலியாணஞ்செய்வதால் யாவர்க்கு நன்மையுண்டாகுமா தலின், அதனைவிரைவின் முடிக்கக்கடவையென்றருள் சுர ந்தார். இவ்வாறு தாய்தந்தையரிசைதலும், பிரமதேவன் மன மகிழ்ந்து விடைபெற்றுவந்து, கருணைபொழிகின்ற யானைமு கத்தையுடைய கணேசமூர்த்தியையடைந்து, சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, ஓ சமானரகித நிகில சகத்காரணகர்த்த ராகிய விநாயகமூர்த்தியே! அடியேனிவ்வுலகங்களைச் சிருட் டிக்குமாறு சுவாமிகள் முன்னர் இரண்டு சத்திகளைக்கொடுத் திருக்கின்றதே அச்சத்திகளைத் தேவரீர் திருமணஞ்செய்த ருளவேண்டும், பூதபௌஷிய வர்த்தமானாத்மகமாகிய காலத் திரயத்திலும், பிருதிவியாதிபஞ்சபூதாத்மகமாகிய காரணத்

திரயத்திலும், உள்ளும்புறம்பும் வியாபித்து, அந்தர்யாமியாகிய பரமாத்மா வாகியும், சர்வசாக்ஷியாகியுமிருக்கின்ற சுவாமிகள் எவ்வாறுநடாத்திக்காட்டுகின்றதோ, அவ்வாறன்றி இப்பிரபஞ்சங்களில் வேறொன்று நடப்பதில்லாமையால், சுவாமிகள் அப்பெண்களைத் திருமணஞ்செய்துகாட்டாதவரையில் இப்பிரபஞ்சங்களிற் சுகங்காணமாட்டாது, அஃதன்றியும் ஆண்களோடு பெண்கள் மனங்கலந்து கூடினாலல்லது, சுவாமிகளடியேற்குக்கற்பித்தருளிய சிருட்டித்தொழில் பிரகாசமுறாதாதலால், சுவாமிகள் தயவுசெய்தெழுந்தருளி, அடியேனைமுற்றினு மாட்கொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு நிலம், நீர், தீ, கால், வெளி, சூரியன், சந்திரன், இயமானன் என்கிற அஷ்டமூர்த்தவடிவாகிய விநாயகக்கடவுளிசைந்து ஓ பிரமனே! நீயுனைத்தகலியாணத்திற்கு வேண்டியமுயற்சிகளை நடாத்திக்கொண்டிரு யாம் அவ்விடத்திற்கு யாவர்களோடும் இட்டமாகவருகின்றோமென்று விடைகொடுத்தருளப், பின்னரப்பிரமதேவன் கருணைநாயகராகிய விநாயகமூர்த்தியினது கிருபாநோக்கம்பெற்றுக்கொண்டுபோய் வைகுந்தத்தையடைந்து, திருமகள் கணவராகிய திருமாலைவணங்கித் தன்புத்திரிகளது திருக்கலியாணத்தையுணர்த்து, அவ்விடத்துநின்று நீங்கித் தனது சத்தியலோகத்தைச் சேர்ந்து, தேவதூதுவனைக்கூவி, அவர்களிடத்திற் சகலரிஷிகளும், சகலவேந்தர்களும், சகலதேவர்களும், அத்தேவர்கட்கரசனாகிய விந்திரனும் மற்றுமுள்ளயாவருந் தங்கடங்கள் குடும்பசமேதர்களாக விரைந்துவரவேண்டுமென்று திருமணப்பத்திரிகையைவரைந்தனுப்பிப், பின்னர் விசுவகர்மாவை யழைப்பித்து, எமதுகர்த்தராகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாணமகோச்சவத்தைத் தரிசிக்கவருகின்ற விண்ணாட்டினர் பூமண்டலவாசிகள் பாதலத்தினர் முதலானவர்கள் வீற்றிருப்பதற்கு, யோக்கியகரமான விடுதிகண்முதலியவைகளையுங், கல்யாண

மண்டபத்தையுஞ், சாத்திரவிதிப்படிக்குத் தீவரமாய்முடிக்கக் கடவையென்று ஆக்கியாபித்தான். அதற்கவ்விசுவகர்மா அதிகமகிழ்ச்சியையடைந்தவனாய், இப்பணிவிடைசெய்தற்கு யானென்னதவஞ்செய்தனனோவென்று ஆனந்தமுற்று, இந்நிமிடத்திற்றமதிட்டப்படி செய்யக்கடவனெனவிடைபெற்றுச்சென்று, ஒருநகரமுண்டாக்கி, அதனைச்சூழப் பருத்தோங்கியிருக்கின்ற மதில்களெழுப்பி, நாற்புறங்களினும் விசித்திரமுற்று விளங்குகின்ற கோபுரங்களைத்தூக்கி, அதனுட்புறத்திற்கல்யாணமகோற்சவத்தினைத் தரிசிக்கவருபவர்கள் மனவெழுச்சியுடன் வாசஞ்செய்யத்தக்க பலமாளிகைகளும் உப்பரிகைகளுமேற்படுத்தி,விசாலமுற்றிருக்கும் வீதிகளைப்பிரித்து இடைஇடையிற் சித்திரகூடங்கள் பளிங்குமண்டபங்கள் சந்திரகாந்தத்திண்ணைகள் முதலியவைகளை வரிசைவரிசையாகவகுத்துக், கல்யாணத்திற்குரிய பண்டங்களை வைக்கத்தக்க பண்டாரவறைகளைமுடித்துத், தாமரை அல்லிமுதலிய புட்பங்கள் மலிந்திருக்கின்ற தடாகங்கள் ஓடைகள் கேணிகள் முதலியவைகளைத் தக்கவிடங்களிற்றோட்டு, வானையளாவத்தழைத்தோங்கிக் குளிர்ந்த நீழலைப்பரப்பிக் கனிவருக்கங்களைக்கொண்டிருக்குஞ், சோலைகளுந் தோப்புகளு முண்டாக்கிப், பரிமளமிகுந்த பலபுட்பசாதிகள் மலிந்திருக்கின்ற நந்தனவனங்களையும் பூங்காவுகளையுஞ் சிருட்டித்துமுடித்தவுடன், அந்நகரத்தினடுவில், மணச்சடங்குகள் முடித்தற்கோர் கல்யாணமண்டபத்தை விசாலமாகப்படைத்து, அதன்மத்தியில் நவரத்நமயமாகிய சிங்காதனமொன்றைப் பலவிசித்திரங்களோடமைத்து, அதைச்சூழ்வரத்திருமாலாதியதேவர்களும் முனிவர்களுங் களித்திருக்கத்தக்க பீடங்களை அணிஅணியாகவகுத்துப், பலநிறப்பட்டுகளாற் சோடித்திருக்கின்ற விதானங்களினுஞ், சொர்ணமயமாய்த்தோற்றுகின்ற மண்டபத்தின் மேற்பரப்புகளினும், முத்துமாலைகள் புட்பச்சரங்கள் மயிற்பிஞ்சங்கள் முதலிய

வைகளைத்தொங்கவிட்டு, நவரத்தினங்களிழைத்திருக்கும் சுவ
ர்ப்புறங்களினும், பருத்தோங்கிநிற்கும் பலவிதத் தூண்களி
னும், பொற்பாவைகள் சித்திரப்ரதமைகள், நிலைக்கண்ணாடி
கள் முதலியவைகளைப்பதித்து, ஓமகுண்டத்தையும் விசாலமா
கப்படைத்துப், பிரமதேவனைக்கண்டு அறிக்கையிட்டான். உட
னேபிரமதேவன் விரைந்துவந்து, அவ்வவற்றின் சிறப்புகளைக்
கண்டு, அதிகசந்தோஷங்கொண்டவனாய், மேருவுங்கண்டு
நாணத்தக்க பிரகாசத்தோடு மிருக்கின்ற இந்நகரத்தினழகை
க்காண்பதற்குத், தேவேந்திரனைப்போல ஆயிரங்கண்களைப்
பெற்றிலனேயென்று ஆசையோடு வருத்தமுற்றானாயின், அ
த்தேவதச்சனால் நிருமித்த நகரத்தின்சிறப்புகள், எவர்களா
லும் அளவிட்டுரைக்கப்படுவனவோ. பின்னர் பிரமனானவன்
சிலகாரியக் காரரைத்துரத்தி, ஆகாய கங்கையைத்தருவித்து,
தருப்பை, மாவிலை, சமித்து முதலிய ஓமத்திரவியங்களைச் சே
கரித்து வாழை, கமுகு, தெங்கின்குலை முதலியசிறப்புகளை
வேண்டுமிடங்களில் அணிபெறநாட்டி, வீதிகடோறும் பனி
நீரையிறைத்துப், புழுதியையடக்கி, முற்றமெங்கணுஞ்சந்தன
க்குழம்பினான்மெழுகிப், பலவிசித்திரங்களான கோலங்களைய
மிடுவித்து, பாலிகை, கரக மாதியபல மங்கலத்தினுசுகளைவரு
வித்து, திருவிளக்கு, பலவிளக்கு, குடத்தீபமுதலிய சோதிக
ளையமைத்து, இன்னும் இத்தன்மையவாகிய எல்லாச்சிறப்பு
களையுஞ் சர்வசாக்கிரதையோடு நிறைவேற்றிக்கொண்டிருந்தா
ன். அச்சமயத்தில் தான் முன்னர்வரைந்தனுப்பிய திரும
ணப்பத்திரிகையைக்கொண்டுபோன தேவதூதர்கள், வாயுவே
கமுமனோவேகமுந் தங்கட்குப்பிற்படத்தக்கதாகவோடி, அவ்
வவர்கட்கறிவிக்க, உடனே அம்மணவோலையைவாங்கியாவரு
நிமிர்த்துவாசித்துச், சந்திரர், சூரியர், முதலியநவக்கிரகங்கள்,
முப்பத்துமுக்கோடிதேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள்,
கருடர், காந்தருவர், சித்தர், வித்தியாதரர், போகபூமியர், ஆகா

யவாசிகள், பாதலவாசிகள், சேடனுதிய நாகராசாக்கள்முதல், மற்றத்திபாந்தரங்களி லிருப்பவர்களுந், தங்கடங்கண் மனை மக்கள் சுற்றத்தினர்முதலிய கூட்டங்களோடு ஏகமாகத்திரண்டு, கடையுகத்திற் சத்தசாகரங்களுங்கரைபுரண்டு மேருவைச் சூழ்வதுபோல, தேவதேவோத்தமராகிய கணேசமூர்த்தியினுடைய திருக்கல்யாண சம்பிரமத்தைத்தரிசித்து ஈடேறுங்களிப்பினராய்ச், சயவுச்சாகங்களுடன் ஓவென்னுஞ்சத்தமெழ, நாற்புறங்களினுமிருந்து, தேவத்தச்சனுல் நிருமாணித்திருக்கின்ற நகரமெங்கணும் வந்து நெருங்கினுர்கள். பின்னர் பிரமதேவனுனவன், வந்தபரிசனங்கட்கெல்லாஞ் சகலவாபரணம் உணவுமுதலியவைகளை அவ்வவர்கட்குவேண்டுமட்டும் அளித்துவரும்படி. சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, பஞ்சதாரு, காமதேனு முதலானவைகட்காக்கியாபித்துத், தான் பின்னர் நடத்தவேண்டிய முயற்சிகளிற் பிரவேசித்தான். இப்பால் அக்காமதேனுமுதலியவைகள் பிரமனிட்டகட்டளையின்படி சகலசெல்வங்களையும் வந்தவர்கட்கெல்லாந் தந்துவர, அவைகளை இந்திரன்முதலியதேவர்கள் பெற்றுக்கொண்டு மனக்களிப்படைந்து, வேறொருதெய்வலோகத்தி லடைந்தவர்களைப்ப்போல அளவில்லாத ஆனந்தக்கடலுண் மூழ்கினுர்கள். அந்நகரத்துள்ளோர்களும் எந்தையாகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாணத்திற்குச் செய்துவைத்த நூதனவலங்காரங்களைக் கண்டு, முன்னர் காணக்கூடாதவுயர்ந்த பரகதியைப் பின்னரடைந்தவரை யொத்துக்களிப்படைந்தார்கள். அந்நகரத்தின்கண், பன்னிரண்டுகோடி சூரியர்களுஞ் சந்திரர்களும் உடுக்கூட்டங்களும் ஒருமிக்கக்கூடியிருக்கின்றமையால், அங்கு இராப்பகலென்னுங் காலவேற்றுமைகள் இல்லாது ஒரேதன்மையாகியிருந்தது. காமதேனுகொடுக்காநின்ற வுண்டிகளையுங், கற்பகதருவளிக்கின்ற ஆபரணங்களையும், அந்நகரத்துவந்திருக்கின்ற ஆடவர்களும் மங்கையர்களும் பெற்றுக்கொள்வதனுல், அவர்

கள் தங்கள் பெயரின் மாத்திரம் வேறுபட்டிருந்தார்களேயன்றி உருவத்தில் ஒருவரையொருவர் ஒத்தவராகி இருந்தார்கள் பாரிசாதம், மந்தாரம் கற்பகம், தேவதாரம், சந்தானம் என்கிற பஞ்சதாருக்கள் நெருங்கியசோலைகளானவை தம்முட்பலவதிசயங்களையுண்டாக்கச், சிலர் அவ்வற்புதங்களைப்பார்த்து அவ்விடங்களைவிட்டு நீங்காதவர்களாயிருந்தார்கள். இளமைப்பருவத்தையுடையமங்கையரும், பெருமைபொருந்திய மைந்தர்களும்; தாங்களிச்சித்தவண்ணங் கற்பகமுதலியவைகளாற்றப்பெற்று, மலர்பொதுளியசோலைகளிற்சென்று விளையாடல்செய்தார்கள். இரத்தினாபரணங்களையணிந்தகுசாரவிந்தங்களையுடைய மங்கையர்கூட்டங்களிற், சிலர் அம்மனையாடுவார்களும், சிலர் பந்தாடுவார்களும், சிலர் புனல்விளையாடுவார்களும், சிலர் ஊசலாடுவார்களும், சிலர் தங்கடங்களன்பினரையுவந்து தேடுவார்களும், சிலர் அவ்வன்பினரைக்கலந்து களிப்படைவார்களும், சிலர் கிளிப்பிள்ளைகளினுடையமெல்லியசொற்களால் நாகணவாய்ப்புட்களினுடைய மொழிகளைக்கீழ்ப்படுத்துவார்களும், சிலர் இந்நாகணவாய்ப்புட்களினுடைய சொற்களால் அக்கிளிப்பிள்ளைகளின் மொழிகளைத்தாழ்வுசெய்வார்களுமாகிச், சோலைகளெங்குமனங்களித்துலாவியிருந்தார்கள். கருப்புவில்லையேந்திய மன்மதனுங்கண்டு நாணத்தக்க வனப்பினைவாய்ந்த ஆடவர்களிற் சிலர் யானைகளோடு யானைகளையும், குதிரைகளோடு குதிரைகளையும், ஆடுகளோடு ஆடுகளையும், கவுதாரிகளோடு கவுதாரிகளையும், காடைகளோடு காடைகளையும், கோழிகளோடு கோழிகளையும், பொருதுவித்துச்சயங்கூறிக்களிப்படைந்தார்கள். வேதாகமமுதலியவைகளைத்துரிசறவாராய்ந்துணர்ந்து, இருவினைகளினின்றுநீங்கியமகாதவத்தையுடையவசிட்டர்முதலான ரிஷிபுங்கவர்களில் சிலர் தருமவாதஞ்செய்கின்றவர்களும், சிலர் அருத்தவாதஞ்செய்கின்றவர்களும், சிலர் காமவாதஞ்செய்கின்றவர்களும், சிலர் மோக்ஷவாதஞ்செய்

னென்றவர்களுமாகியிருந்தார்கள். சனகர்முதலிய யோகீஸ்வரர்கள், பரதத்துவஸ்வரூபியாகிய சிவபெருமானது ஆகமப் பிரமாணத்தினாலும், காட்சிப்பிரமாணத்தினாலுஞ், சிரேஷ்டமாகிய பதிபசுபாசங்களின் றன்மைகளைப் பேசிக்கொண் டிருந்தார்கள். அணிமாதியட்டமா சித்திகளினும் வல்லசித்தர்கள், தம்மை வணங்காரையெல்லாம் வணங்குவித்துப், பல வற்புத விளையாடல்களை நடாத்திக்கொண்டிருந்தார்கள். தேவர்கள், சங்களினத்தினருடன் பற்பல தர்க்கங்களைப்பேசி அவ்வவர்கள், ஆண்மைகளை யாதரித்துக்கொண்டிருந்தார்கள். இந்நகரவாடம்பரங்கள் இவ்வாறிருக்கப் பதுமநிதி, சங்கநிதி, கற்பகத்தரு, முதலியவைகளாற்றந்த ஆடையாபரணாதிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற கல்யாணமண்டபத்திற், பொன்னாற் செய்து நவரத்தினங்கள் பதித்திருக்கின்ற தூண்கடோறு நாட்டியிருக்கும் மரகதவாழைகளுங், கமுகமரங்களுங், கன்னற்றண்டுகளுங், கண்டவர்கள் அதிசயிக்கும்படிச் சொர்ணாபரணங்கள், பட்டாடைகள், அமுதுகள், சிற்றுண்டிகள், முதலானவைகளை யளவில்லாமற் கொடுத்துவந்தன. சுவர்த்தலங்களின் முறைமையாகத் தீட்டியிருக்கின்ற சித்திரங்களெல்லாஞ், சொற்கமத்திய பாதலமுதற் சகல தீபாந்தரங்களிலுள்ள வேறுவேறான பொருள்களை, வந்தவர்கட்கெல்லாம் வரையாது கொடுத்து எவல்செய்துகொண்டிருந்தன. அம்மண்டபத்தைப் புடைசூழ்ந்த சோலைகளி லமைத்திருக்கின்ற பல விசித்திரங்களான பிரதமைகளெல்லாங், கற்பகாதிகளைப்போல அவ்வவர்க்கு வேண்டுவனவற்றை ஆவல்தீரவளிப்பதன்றி, அக்கற்பகாதிகளையுங் கண்டு ஆசியஞ்செய்து அளவற்ற அற்புதங்களை நடாத்திவந்தன. சாயை தோற்றுந்தன்மையராகிய தேவர்கள் வடிவங்களை, அம்மண்டபத்திற் பதித்திருக்கின்ற ரத்தினங்கள் காட்டுவதனால், அத்தேவர்கள் அச்சாயைகளைப்பார்த்து, ஈதென்னகாரணமெனச் சந்தேகித்தார்கள். இவ்வாறு அளவுற்ற

பெருமிதங்களோடுந் தேவதச்சனால் நிருமாணித்த அம்மண்டபத்தின் சிறப்புகள் யாவராலளவிட்டுரைக்கற்பாலன. இப்பால் நாரதமகாமுனிவர் சகல சம்பிரமங்களையுங் குறைவின்றி நிறைவேற்றி யிருப்பதைப்பார்த்து மனங்களித்து, விரைந்தெழுந்து, வெள்ளியங்கிரியைச்சேர்ந்து, சிவபெருமான் சந்நிதானத்தை யடைந்து, மும்முறைவலம்வந்து, சாஷ்டாங்கமாக வணங்கி, ஓ தயாநிதியே, விநாயகப்பெருமான் திருக்கல்யாண மகோற்சவத்திற்குரிய சகல வலங்காரங்களுஞ்செய்து நிறைவேறின. அரசர்கள் தேவர்கள் முனிவர்கள்முதலாயினோர்வந்து நெருங்கி யிருக்கின்றனர். தேவரீர் அடியேங்கண்மீது கிருபைபுரிந்து எழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொள்ளலுஞ், சிவபெருமான் சந்தோஷித்து, விநாயகமூர்த்தியையழைத்து, ஐயனே, பிரமனால் வளர்க்கலுற்ற சித்திபுத்திகளைத் திருமணஞ் செய்வதற்கான கோலத்தைக் கொள்ளுகவென்று திருவாய்மலர்ந்தனர். அதுகேட்ட சுத்த தத்துவமூர்த்தியாகிய விநாயகக் கடவுளானவர், தெய்வகங்கையிலாடித், தேவர்களுடைய இமையாவிழிகளை இடைவிடாது இமைக்கச்செய்யும் வனப்பினை வாய்ந்த தமது திருமேனியினொளியைச் சிறிது தணியச்செய்பவர்போலப் பீதாம்பரத்தையெடுத்து அரையிற்சாத்தி, வாசனை வீசுகின்ற கூட்டுவெருக்கச்சந்தனத்தை மார்பினிடத்துந் தோள்களினிடத்தும் பூசிக்கொண்டார். சந்திரனை முடியிலணிந்ததைத் தெரிந்துகொண்ட மற்றக் கோள்களானவை, தாமும் அம்முடிமேலேறி யிருப்பதற்கெண்ணி அரியதவங்களைச்செய்ய, அவைகளையுந் தமது நன்முடியிற் சூட்டிக்கொண்டதற்கொப்பாக, மிக்க வொளிபொருந்திய நவமணிகளை வரிசையாகப்பதித்த பொன்முடியினைச் சூட்டிக்கொண்டார். சடைமீதிருக்கின்ற சந்திரன், அச்சடையை மறைத்திருக்கின்ற முடிமீதிருந்து திருமணச்சேவை செய்யானாயின், அவனுள்ளம் வருந்துமென் றெண்ணினவர்போல, அச்சந்திரனை அப்

பொன் முடியின்மீது பொருந்தவமைத்து, அவனைச் சூழ்வ ரக்கொன்றை மாலிகையினையணிந்துகொண்டார். பல்லாயிரங் கோடி யண்டங்களினுள்ள ஆன்மகோடிகளனைத்தையும், அரை நொடியிற்றகித்து நீறுக்கவல்ல தமது நுதல்விழியின்வெப்பத் தை, அக்கலியாணசபையிற் காட்டாதவண்ணம் அதனைத் தணிவிப்பவர்போல, அதன்முன்னர் கண்டவர் வியப்படையத் தக்க பிரகாசத்தினையுடைய இரத்தினப்பட்டத்தை யணிந்து கொண்டார். பொன்முடியிலணிந்த மூன்றும்பிறையினது நில வென்று சொல்லும்படி, ஒப்பற்றநெற்றியில் வெண்டிரு நீற் றையணிந்து, அதனடுவின் மிக்க வாசனைகலந்திழைத்திருக் கின்ற சிவந்த திலகமிட்டுக்கொண்டார். திருக்கரத்திலிருக் கின்ற கொடியாகியமீனும், ஆகாயத்திலிருக்கின்ற அருந்ததி யாகியமீனுந், தமது திருமுகமாகிய கருணைக்கடலில் இன்புற் றிருக்க வெண்ணிப், பக்கங்களில்வந்து பொருந்தியிருப்பன போல, அழகுநிறைந்த மணிகளாற்செய்யப்பட்ட மகரகுண்ட லங்களைக் காதிலணிந்துகொண்டார். முகமாகிய பதுமநிதி யைத் தாங்குகின்ற சங்கநிதியாகிய கண்டத்தில் சிந்தாமணி யைப்போலத், தாளமாலைகளையும் பொன்னுபரணங்களையுமணி ந்து, இடையில் உதரபந்தனந்தரித்து, கைகளிற் கடகங்களைப் பூண்டு, விரல்களின் மோதிரங்களைச்சூடித், திருவடிகளிற் சிலம்புகளையார்த்து, இன்னும் அளவற்ற ஆபரணங்களைச் சிறப்பெய்த வணிந்துகொண்டார். இவ்வாறு விநாயகக்கடவுள் திருமணக்கோலங்கொண்ட சிறப்பைச் சிவபெருமான் கண் களிக்கப்பார்த்து, ஈராயிரமருப்பினோடு மலைபோன்று பாரித் திருக்கின்ற அயிராவணத்தை அவருக்குத்தந்து, தாமும் உமா பரமேஸ்வரியும் ரிஷபவாகனத்திலெழுந்தருளினார்கள். கூரிய வேலாயுதத்தையேந்திய முருகக்கடவுள் மயில்வாகனத்திலேறி யருளினார். துவாதசாதித்தர், ஏகாதசருத்திரர், அட்டவித்தி யேஸ்வரர், அட்டவசுக்கள், அட்டதிக்குப்பாலகர்முதலிய எல்

லாத்தேவர்களுஞ், சர்வாலங்காரசோபிதராய் அவ்வவர் வாகனங்
களிலேறிப் புடைசூழ்ந்தார்கள். நிகும்பன், கும்பன், சங்கபா
லன், குமுதன், பானு, தனஞ்சயன், தசமுகன், காலபாசன்,
விசயன், முதலிய பூதகணத்தலைவர்களோடு, நந்திகேஸ்வரரும்
மற்றுமுள்ள கணநாதர்களும் நெருங்கினார்கள். யாவருந்துதித்
தற்குரிய முதன்மைபெற்றிருக்கின்ற பிரணவமந்திரம், 'வே
தங்கள், கலைகள், காலங்கள், இராசிகள், சப்தகோடி மகாமந்தி
ரங்கள், முதலியவைகளோடு, காமிகம், யோகசம், சிந்தியம்,
காரணம், அசிதம், தீபதம், சூட்சமம், சகத்திரம், அஞ்சுமான்,
சுப்பிரபேதம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம்,
வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம்,
புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானசர்வோத்தமம், பார
மேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம், என்கின்ற இருபத்தெ
ட்டாகமங்களும் ஒவ்வொரு தேவ வடிவங்களாகித் திரண்டுவந்
தன. இவ்வாறு சகலசம்பிரமத்தோடு யாவரும்புடை சூழ்ந்து
நெருங்கிய சமையத்தில், விநாயகமூர்த்தியானவர் அயிராவ
ணத்திலாரோகணித்துப், பூதகணங்கள் புகழ்பாடி வரவும், மா
தவர் வேதமோதிவரவும், சந்திரவட்டக் குடைகள் ஆகாய வெ
ளியை மறைக்கவும்,பலவித பட்டுக்கொடிகள் இருமருங்கினு
நெருங்கவும், சிலர் ஆலவட்டங்கள் வீசவும், சிலர் சாமரைகளி
ரட்டவும், தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்
கருவி, மிடற்றுக்கருவி, என்கின்ற பஞ்சவாத்தியங்கள் நாற்
றிசைகளினு முழங்கவும், இன்னும் அளவற்ற ஆடம்பரங்க
ளோடு, பெரும்புறக்கடல் பெருகுமாறுபோல, எள்ளிட இட
மில்லாமல், ஒருவரோடொருவர் அடர்ந்து, கிரீடங்களுடன்
கிரீடங்கள் புசங்களுடன் புசங்கள் ஊடுதாக்க, ஆகாய மார்க்க
மாகச் செல்லுமளவில், அட்டபுயாசலங்களையுடைய சிவபெ
ருமானோடு கணேசமூர்த்தி திருமணக்கோலங்கொண் டெழுந்
தருளிவருவதைப், பிரமன்விண்டு முதலிய தேவகணங்களாதி

யர்கண்டு, அளவளாவிய வானந்தத்தோடும் எதிர்கொண்டு சென்று, கற்பகமலர்களைத்தூவி யருச்சித்துச், சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, அந்நகரத்துள்ள இராசவீதியில் வலமாக வழைத்துக்கொண்டுபோய்த், திருக்கல்யாணமண்டபத்தி லெழுந்தருளச்செய்தார்கள். உடனே சரஸ்வதியானவள் சொர்ண கரக்கத்திற் றெய்வகங்கையை யேந்திவந்து, கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில் அபிஷேகிக்கப், பிரமதேவன் மிகுந்த வணக்கத்தோடும் அத்திருவடிகளைவிளக்கி, மெல்லிய ஆடைகொண்டொற்றினன். பின்னர் சிவபிரானும் உமாதேவியும் ஒராசனத்திலிருந்தனர். சுப்பிரமண்ணியர்முதலிய மற்றைத் தேவர்களெல்லாம் வெவ்வேறாதனங்களில் அமைந்தனர் விநாயக்கடவுள் அம்மண்டபத்தினடுவில் அமைத்திருக்கின்ற மாணிக்கசிம்மாசனத்தில் ஆரோகணித்துத் தேவமாதர்கள் நடிக்கின்ற ஆடலினும் பாடலினுந், தமது திருக்கண்ணைக்களைசாத்தியிருந்தனர். அளவற்ற தேவஸ்திரீகள், வெள்ளடை, பாகு, வாழைக்கனி, தெங்கின்கனி, மற்றுமுள்ள பலாதிகள, இரததிருபரணங்கள், பூமாலைகள், சித்திரப்பட்டுகள் முதலான மங்கலவரிசைகளைத், தனித்தனிப் பொற்றாம்பாளங்களில் நிரப்பித், தங்கடங்கள் கைகளிலேந்திக்கொண்டு, சாமரை, பூரணகும்பம், கண்ணடி, தோட்டி, முரசு, மணிவிளக்கு, கொடி, இணைக்கயல், என்கின்ற அட்டமங்கலத்துடன், பல வாத்தியங்களுமுழங்க, அந்நகரவீதியை வலமாகவந்து, விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்ற திருக்கல்யாணமண்டபத்திற் றெருகுப்பாகவைத்து வணங்கினார்கள். இப்பால் அந்தப்புரத்திலிருக்கின்ற சித்திபுத்தியென்னுங் கன்னியர்களைச், சரஸ்வதி, இந்திராணி, இலக்குமி, அதிதி, அனசூயை, அருந்ததி, என்கின்ற மாதர்களறுவரும், வணங்கி வாழ்த்துதல்செய்து, சிரோரத்தினங்களால் இழைத்திருக்கின்ற ஆதனத்தி லெழுந்தருளப்பண்ணி, அங்கு வந்திருக்கின்ற தேவமாதர்கட்கெல்லாம் வே

றுவேறு கனிவர்க்கங்களையும் வெள்ளடை பாகுகளையுந் தங்கள் கைமிதப்பத்தந்து, பின்னர் யாவரும் புடைசூழ்ந்து பற்பல எவல்களை இயற்றிவர, அக்கன்னியர்க்குத் திருமஞ்சன மாட் டுவதானார்கள். புனுகுசட்டம், கோட்டம், நாகப்பூ, முத்தக் காசு, சயிலேகம், விலாமிச்சம், இருவேரி, ஆரியக்கோட்டம், மாஞ்சில், மலையிருவேரி, பச்சிலை சச்சோலம், அதிமதுரம். தக் கோலம்,வாழைப்பூ,நன்னாரிப்பூ, கண்டில்வெண்ணெய்,மகிழம் பூ,தாவரிசி,எலம்,சாதிக்காய்,வெண்குங்கிலியம்,இலவங்கம்,நா கணம், மஞ்சட்டி, சண்பகமொக்கு, அரத்தை, சாம்பிராணி, தகரம், கருங்குங்கிலியம், வெட்டிவேர், மாலிகை, என்கின்ற முப்பத்திரண்டு பொருள்களோடு, கத்தூரி, குங்குமம், கர்ப்பூரம், அகில், சந்தனம், என்கின்ற ஐவகை வாசனைத்திரவியங்களும், நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, கோணைக்கிழங்கு, மாந்தளிர், என்கின்ற பத்து வகைத் துவர்ப்புச்சரக்குகளுஞ்சேர்த்து, வெள்ளிலோத்திரப்ப ட்டையையம் அரைத்தசந்தனவண்டலையுங் கலந்து, மிக்கபக் குவத்தோடு காய்ச்சப்பட்டிருக்கின்ற பரிமளமிகுந்ததயிலத்தை அம்மங்கையற்கூந்தலிற்றிமிர்ந்து, பின்னல்களைமெல்லெனச் சிக்கறுத்துப், பலமாதர்கள் மங்கலவாழ்த்துகளைச்சொல்ல நலங் கிட்டு, யானையின் பிடரியிற்கொணர்ந்துவந்த கங்காசலத்தினா ற்றிருமஞ்சனமாட்டிப், பனியைப்போன்ற மெல்லிய ஒற்று டைகளினால் இருவர்திருமேனிகளிலும் ஈரம்புலர்த்திப், பிறந் தபோதே பெண்ணென்று சொல்லற் கோரடையாளமாக வந்த உறுப்பினுக்குப், பல உபசாரத்தோடு முன்னதாகச்சிறப்புச்செ ய்வதுபோலப் பட்டாடையினைச்சாத்தி, அதன்பின்னருண் டான மற்றோரடையாளமாகிய தனங்கட்கு உடனே உபசரிக் கத்தக்கதென்று, இயற்கையிற்குளிர்ச்சியும் வெம்மையும்பொரு ந்திய அவைகட்குச், செயற்கையிற்றண்மையுங்கடுமையுஞ்செ ய்பவர்போல, மணமிகுந்தசந்தனச்சேற்றையருவருப்புண்டாக

வப்பி, மேருமலையிற்படர்ந்தமேககூட்டங்கட்கொப்ப, அகி
புகைமுதலியவாசனைப்புகைகளை யூட்டினார்கள். பற்பலம
கள்நெருங்கிப்பூத்திருக்கின்ற கானகத்தைப்போலவும், ஆகா
முழுவதும் உடுக்கூட்டங்கள் நிரம்பவருகின்ற இருளைநிகர்ப்
வும், சிப்பினால்வாரிப்பரவியிருக்கின்ற கூந்தலிற்பலவித ரத்
னமாலைகளைப்பொருத்த பன்னிறமலர்மாலிகைகளைச்சேர்த்து, எரு
த்தின் முரிப்பினையொப்பக்கொண்டையிட்டார்கள். மதம்பெ
ழிகின்ற யானையானது தன்மருப்பிற்றுதிக்கையைச் சுற்றிக்
கொண்டதுபோலக், கஸ்தூரிமணங்கமழ்கின்ற உச்சிக்கொண்
டையில் முல்லைமாலைகளைச்சூழ வணிந்து, மேகமானது வெ
ளியநீர்த்தாரைகளைச் சொரிவதுபோல, அவ்வுச்சிக்கொண்டை
யிற் பிரகாசிக்கின்ற முத்துமாலைகளைத்தொங்கவிட்டார்கள்
இந்திரன் தனதுவில்லைற் றன்வாகனமாகிய மேகத்தில்வைத்த
துபோலக், கரியகூந்தன் மருங்கடைந்திருக்கின்ற நுதலின்
மீது, அவ்விந்திரதனுசிலம்பு தொடுத்ததையொப்பநுதலணி
மாலையினையணிந்தார்கள். விநாயகப்பெருமான் திருமுடியின்
மீதுவிளங்கியிருக்கின்ற இளந்திங்களையுந், திருக்கரத்திலேந்
தியிருக்கின்றமயிற்கொடியையும், அவர்காதலியராகிய சித்தி
புத்திகளும் அணிந்துகொள்வது முறைமையென்று, சந்திரப்
பிறையையும்மயிலணியையும்முடியின்மீதணிந்தார்கள். இராகு
க்கோளானதுஇக்கூந்தல்முகிலென்று சைவலமென்றும்,முகம்பூ
ரணசந்திரனன்றுதாமரைமலரென்றுங்கருதியகலுமாறு, மகரத்
தினதுபேழ்வாயையொத்த சிவந்தநிறத்தையுடையமணிகளைய
ழகுண்டாக நெற்றியிலணிந்தார்கள். நாணின்றிவளைத்து அம்பு
தொடுத்திருக்கின்ற அழகியவில்போன்றநெற்றியில், அத்திரஞ்
சத்திரமுதலியஎவ்விதஆயுதங்களாலும்வெல்லப்படாதவிநாயக
க்கடவுளுடைய பிரசாபத்தைப் பொத்திவைத்ததுபோலச்,சிவ
ந்த திலதப்பொட்டினையிட்டார்கள், அமுதபானராகிய தேவர்
கள், விழிகளைப் பாற்கடலென்றும், அவையிற்படர்ந்த செவ்

வரிகளைப் பவளங்களென்றும், மயிர்களை மாயவனென்றும், கொங்கைகளை மந்தரகிரியென்றுங்கருதி, யேக்கமுறுதலெண்ணம், அவ்விழியிணைகளைக் காத்தற்கோ ரடையாளமாக அஞ்சனந்தீட்டினார்கள். இம்மங்கையர் கண்கள் ஆலத்தையும் அமுதத்தையும் அளிப்பனவன்று, சுத்த திருப்பாற்கடலேயென்றும், அவைகளிற்றீட்டப்பட்டது அஞ்சனமன்று, அதனையுண்பான் வந்தமேகமென்றுங்கருதி மயங்குதற்கேற்பனவாக, அக்கடலினிடத்துண்டாகிய சங்கந்தியாலீன்ற நீண்ட தரளமணியினை நாசியின்மீ தணிந்தார்கள். அம்மங்கையர் முகாரவிந்தமாகிய சகோரபக்ஷியானது, நெற்றியைச் சந்திரபிம்பமெனக்கருதி அமுதுண்ண வந்திருப்பதைப்போல, அம்முகாரவிந்தத்தில் விளங்கியிருக்கின்ற கண்ணிணைகளாகிய நீலோற்பல மலர்களின் அழகை, மற்றைய நீலோற்பலமலர்கள் கிரகித்துக்கொள்ளுமாறு இடந்தேடிக்கொண்டிருக்கின்றனவென்று சொல்லும்படி, மிக்க வொளிவிளங்குஞ் செவிகளின்மேல் அன்றலர்ந்த நீலோற்பலமலர்களை யணிந்தார்கள். தாய்தந்தையரைப்போல அம்மங்கையர்கள் வளர்த்த அன்னப்புட்களானவை அவர்கட்கு இரகசியஞ்சொல்லச் செவிகளினடுத்திருப்பனபோல, ஒளிமிகுந்த மணிகளை வரிசைபெறச் சேர்த்துப்பதித்த அன்னக்கொப்புகளை யணிந்தார்கள். உரோகணிமாது அம்மங்கையருடைய வொளிமிகுந்த வதனத்தினைத், தன்காதலனாகிய சந்திரனென்றுகருதி விருப்புற்றடுத்திருப்பதுபோலக், குளிர்ச்சியு மழகும்வாய்ந்த தரளத்தினாற்செய்த கன்னப்பூவென்னும் ஆபரணத்தினையணிந்தார்கள். இம்மங்கையர் முகமானது தேனையுமிழ்கின்ற தாமரைமலர்போல மலர்ந்து, அமிர்தமொழுகுகின்ற சந்திரனைப்போலக் குளிர்ந்து, நம்மைப்போலவுங்கிரணங்களைவீசிப் பிரகாசிக்கின்றதெனக்கருதி, சூரியனானவன் வணங்கவந்திருப்பதுபோலப், பதுமராகத்திற்செய்தபசியகுண்டலத்தினை யணிந்தார்கள். கன்னிக்கமுகினையொத்த கண்டத்

தில், கண்டோர்களது கண்ணெச் சிலடையாதிருக்கக் காப்புச் செய்ததுபோலக், கிரணங்களேயுடைய பல மணிகளாற்செய்த கட்டுவடத்தினை அக்கண்டத்தின்மீ தணிந்தார்கள். கல்யாண மகிழ்ச்சியினுல் அம்மங்கையர்க்குக் கொங்கைகள் பூரிப்பதனு லுந், தோள்கள் பருத்திடலாலும், இப்பூமியின்கண் இடமில் லாமற்போமென்று கருதி, அவைகள் பருத்தலேத் தடை செய் பவர்போல, ஒளிமிகுந்த தனங்கட்குக் கச்சினேயுந், தோள்கட்கு வாகுவலயத்தினேயுங், கைகட்கு வளேயினேயும், விரல்கட்கு மோதிரத்தினேயுமணிந்தார்கள். மிக்க மதர்ப்பினேயுடைய கொ ங்கைகட்குப் பல வரிசைகளேயளிப்பவர்போல, அக்கொங்கை களின் மருங்கெல்லாங் கிரணங்கள் வீசுகின்ற மாணிக்கமாலே, பவளமாலே, முத்துமாலே, வச்சிரமாலே, கோமேதகமாலே, முத லியவைகளோடு, அணிபெறக்கோத்த பூமாலைகளேய மணிந்தார் கள். கொங்கைகளினின்றும், பல மணிவடங்களாகிய நதிகள் ஒளிவிட்டு வீழ்கின்ற நிதம்பமென்னுங் கடலுக்கு நாணேய நிருமிப்பவர்போலப், பற்பலமணிகளாற் றெரிந்துகோத்த முப் பந்திரண்டு கோவையாகிய மணிவடத்தினேயும், அரைப்பட் டிகை முதலான ஆபரணங்களேயுமணிந்தார்கள். அளவற்ற நாள்தேடியுங் காண்டற் கருமையனவாயிருந்த திருவடிகளே, இன்று கண்டோமென்று நான்குவேதங்களு மனங்களித்து விடாமற் பற்றிக்கொண்டதுபோல, அம்மங்கையருடைய பாத பதுமங்களிற், பாடகஞ், சதங்கை, தண்டை, நூபுரம், பாத சாலம், பொன்மோதிரம், என்னும் ஆபரணங்களேயணிந்த செ ம்பஞ்சுக் குழம்புந்தீட்டினுர்கள். அம்மங்கையர், ஆபரணமுத லியவைகளாற் செயற்கையழகுவாய்ந்திருக்கும் ஏனையமாதர்க ள்போ லுருக்கொண்டிருப்பினும், இயற்கையிற்றுனே அளவற்ற வனப்புகளே வாய்ந்தவர்களென்று, இதுகாறுஞ்செய்த செய ற்கையழகைமறைத்துக் காட்டுவார்கள்போல, அரைதொடுத் துத் தோள்வரையில் மெல்லிய ஆடையினை யணிந்தார்கள்.

இவ்வாறு சித்திக்கு, இலக்குமி, அதிதி, இந்திராணி, என்னு மூவர்களும். புத்திக்கு, அனசூயை, அருந்ததி, இரதிதேவி, என்னு மூவர்களுமாக, மணக்கோலத்திற்குரிய வலங்காரங்களையெல்லாஞ் சிறக்கச் செய்துமுடித்து, அவ்விடத்தினின்று நீங்கிச், சிவபிரான் இடப்பாகத்தமர்ந்த பார்வதிதேவியாருடைய கடைக்கண்ணோக்கின் நேராகநின்று, அன்னையே, முன்னம் அடியோங்கள்செய்த தவப்பயனைத் தேவரீர் ஆக்கியபித்த பணிவிடைகளைக் குறைவின்றி நடாத்திவந்தனமென்றறிவித்து வணங்கி, அத்தேவியாருடைய வனுஞ்ஞைபெற்றுப், பின்ன ரவ்வறுவரும் அம்மங்கையரை நவரத்தினச்சிவிகைகளிலேற்றிப், பல விண்ணின்மாதர்களுந் தோழியர்களும் புடைசூழ்ந்து வரவும், வெண்பட்டுக்கொடைகள், மயிற்பீஞ்சங்கள்முதலிய வலங்காரங்களோடு பலவகைக் கொடிச்சின்னங்கள் விளங்கவும், குடமுழாமுதலிய பல வாச்சியங்கண் முழங்கவுமாக, அளவற்ற வைபவங்களோடு வீதியிலெழுந்தருளச்செய்தமாத்திரத்தில், முளைமுதலியவெல்லாம் முறைமையாகச் சேர்த்துவைத்திருக்கின்ற கல்யாணமண்டபத்தில், சனகமகாமுனிவர் ஆசிரியராகவந்து, தருப்பை, வெண்பொரி, முதலிய பலவகைப்பொருள்களையுஞ் சேகரித்து, முகூர்த்தத்தை பார்த்துக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் ஒருவர்க்கொருவரொப்பாவதன்றி, மற்றொருவரொப்பில்லாத அம்மணப்பெண்களிருவோரும், வீதியை வலமாகவந்து, திருக்கல்யாணமண்டபத்திலிறங்கிச், கற்பகதருவின் இருமருங்கிலும் படர்ந்திருக்கின்ற காமவல்லிக்கொடிபோலக், கணேசமூர்த்தியினுடைய பக்கத்திற் கலந்திருந்தார்கள். உடனே மணவில் வழுக்கிவீழ்ந்த தேவர்கள் மீட்டும் விண்ணிற்புக்கு மகிழ்வையடைந்ததுபோல, இதுகாறுங் கணேசமூர்த்தியை நீங்கியிருந்த அம்மங்கையர்மீட்டும் அவர் சமீபத்திற்கலத்தலும், முன்னர் வேறுபட்டு விளர்த்திருந்த நிறத்தினைப்போக்கித தங்கள் சுபாவவடிவத்தினையடைந்தார்கள். இப்பால் சகலகலை வல்லவராகிய சனகமகாமுனிவர் சங்கற்பஞ்செய்து, புண்ணியாவாசனம்புரிந்து, அம்மணப்பந்தரிலுள்ள பொருள்களையெல்லாந் தூய்மையாக்கிக், கணேசமூர்த்தியை வேதாகமங்களாற்றுதித்து, தேன்கலந்தபாலும் பழமுமளித்தது அருக்கியம், பாத்தியம், ஆசமனம், என்கின்ற மூன்று மந்திரசலங்களையுந்தந்து, மணப்பெண்களுக்குக் கூறைமுதலியவைகளை யணிவித்துப், பிரமதேவனைக்கூவினர். உடனே அப்பிரமதேவன் விரைந்துவந்து, தம்பதிசமேதரா யெழுந்தருளியிருக்கின்ற விநாயகக்கடவுளுடைய மணவணிக்கோலத்தை மனங்களிக்கக்கண்டு, கரங

களைச் மேறகூப்பித், தொழுது துதித்துத், தன்னருகினிற்கின்ற சரஸ்வதியைப்பார்க்க, அவள் பலதெய்வப் பெண்களுடன் துரிதமாகச் சென்று, திருமஞ்சனங், கற்பகமலர், தூபதீபமுதலாகிய பொருள்களைப் பொற்பள்ளயங்களிலேந்தித், தன்கணவன் சமீபத்து வந்துநின்றனள். அக்காலத்திற்சனக மகாமுனிவர் பணித்தருளியபடிக்குப் பிரமனானவன் வேதாகம விதிப்படிப் பாதபூசைசெய்ய யத்தனித்தவனாய்ப், பொற்றட்டினிடத்தில் விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளைச்சேர்த்துத், தன்தேவியானவள் தங்கக்குடத்தில் நிரப்பிவைத்திருக்கின்ற கங்காசலத்தையெடுத்து மெல்லமெல்லக் கவிழ்த்துவரத தான்சுத்திசெய்து, திருவொற்றுடையால் ஈரத்தைப்புலர்த்திக், களபகஸ்தூரிமுதலியவைகளைச சேர்த்திருக்கின்ற சந்தனக்குழம்பையப்பிப், பஞ்சதாருக்களினதுபுதியமலர்களைக்கொண்டருச்சித்துச், சாம்பிராணிதூபத்தைக்காட்டிக், கற்பூராஞ்சனங்கொடுத்துச், சோடசவுபசாரங்களோடும் பூசனைகளைநிறைவேற்றியவுடன், உடல் பொருள் ஆவி என்கிறமூன்றையும், அநாதிபற்றுனே தமக்கு அடிமையாகவுடைய கடவுளுக்குப், பரிபக்குவராயினோர் தங்கள் போதவொழிவினிமித்த மீட்டுமவைகளைச்சமர்ப்பிக்கு முறைமைபோல, விநாயகமூர்த்தியை அநாதிதொட்டுநீங்காத அச்சத்திகளைப், பிரமதேவனானவன்மீட்டும் பழமைபாராட்டியளிப்பவனாய்க், கணேசமூர்த்தியினுடைய திருக்கரங்களிற் றனதுபுத்திரிகளாகிய சித்திபுத்திகளின் திருக்கரங்களைச்சேர்த்து, சுவாமி அடியேன் அருமையாகவளர்த்தெடுத்த இம்மங்கையரைத் தேவரீர் அங்கீகரித்து என்னையாட்கொள்ளவேண்டுமென்று, சரஸ்வதிவிட்ட தெய்வநீர்த்தத்தால் தாராதத்தஞ்செய்து வணங்கினன். அவ்வாறே அத்திருக்கல்யாண மகோற்சவத்தில் வந்திருந்த நவகோள்கள்முதலிய சகலவுயிர்களுந்தாமாகவிருந்தும், அக்கன்னியரை ஏற்றுக்கொள்ளுநிமித்தம் அவைகளினின்றும் வேறாகிவீற்றிருக்கின்ற கணேசமூர்த்தியானவர் அவ்விண்ணப்பத்திற்கு அருள்சுரந்து, ஓர்தந்தை தன்கையிலிருக்கின்ற வெள்ளடையைச் சிறிய மதலைகையிற்றந்து, மீட்டும் அதைத்தன்வாயாற்கிரகித்துக்கொள்ளுமாறுபோல, முன்னர் அப்பிரமன் கடைத்தேறுமாறு கடாக்ஷித்தருளிய அம்மங்கையரை, மீட்டுமவனிடத்தினின்றுந் தாம் ஏற்றுக்கொண்டனர். இப்பாற்பிரமதேவன் தன்னிட்ட சித்தியைப்பெற்றுக் களித்தவனாய்ச், சிலகாரியக்காரரைத்துரத்தி, வாழைக்கனி மாங்கனி பலாக்கனி முதலிய கனிவர்க்கங்களையும், [illegible]குந்தகருப்பஞ்சாறு ஆவின்பால் தேன் சற்கண்டு முதலிய [illegible]ஸ்துக்களையும் பொலிவாக்த்

தருவித்துத், தங்கப்பள்ளயங்களினுங் கிணை பிக்கொண்டுவந்து கர்த்தனே தேவரீர் இவற்றினை அடியேனை ரக்ஷிக்கவேண்டுமென்று நிவேதித்தனன். பின்ன மங்கலபேரி முரசம் மத்தளம் டமா குடமுழா தக்கை வலம்புரி ச்சங்கம் வேய்ங்குழல் திருச்சின்னம் பூரி எக்காளை துத்தாரி சயகண்டை முதலியபலமங்கலவாத்தியங்கள், அண்டங்களதி ர்ந்து திசைகள்செவிடுபட்டுத் தக்கதாகத் தாம்தாமென்றுமுழங் கவும்; தேவர்கள் முனிவர்கள் கின்னரர் கிம்புருடர் சித்தர் வித் யாதரர் கருடர் காந்தருவர் முதலியசகலசனங்களும், மனவெ முச்சியுடன் தங்கடங்கள் கரங்களைக்கொட்டிச் சயசயவென்று போற்றவும், ஏகாதசருத்திரர் துவாதசாதித்தர் அட்டதிக்குப் பாலகர் முதலியயாவருஞ் சந்தோஷசாகரத்தின்மூழ்கி, இத்தி னஞ் சன்மசாபல்லியராய் முத்திக்காளாயினோமென்று பலவித ங்களிற்றுதித்து மங்கலவாழ்த்துகூறவும், அத்திரி ஆங்கிரசர் கௌதமர் சமதக்கினி பரத்துவாசர் முதலியரிஷிபுங்கவர்கள் வேதாகமங்களாற்றுதித்து வாழ்த்தவும், சமுத்திரகோடமும் அஞ்சும்படியாக ஆகாயத்னின்று தேவதுந்துபிகள் கணகண வென்று சத்திக்கவுமான இவ்விதவாடம்பரங்களோடு, சனகமகாமுனிவர் ஓமகுண்டத்தைச்சேர்ந்து, சுற்றிலும் அந்த ணர்களையிருத்தி, தருப்பைகளைப்பரப்பி, அக்ஷதைகளையி றைத்து, மந்திரமலர்களாற் பிரணவமுதலிய பிரதம தேவதைகளை வழிபட்டு, பூரண கும்பங் குடவிள க்கு முதலியவைகளை ஆங்காங்கு விதிப்படித்தாபித் துவைத்து, முத்தீக்களையுமந்திரபூர்வகமாக வோமகுண்ட த்திலெழுப்பி, விநாயகக்கடவுளையுஞ்சித்திபுத்திகளையும் அதன ருகில் எழுந்தருளச்செய்து, ரிஷிபுங்கவர்களும் அந்தணர்குழு உக்களும் வேதசாகைகளைச்சொல்லிச் சமிதைதுகளைக் கிரமப்படி ஓமகுண்டத்திற்போட்டுவர, ஆவினெய்யையூற்றி, இடை இடையிற்பொரியையும் பாலையுமிறைத்து ந[illegible]கிரகவோமமுத லிய கருமங்களை வேதாகமவிதிப்படி விநா[illegible]பெருமான்முன் னிலையில்நிறைவேற்றிப், பூரணாகுதியுங் [illegible]த்தவுடன், அத் தீயினிடத்தெடுத்த மைக்குழம்பைமாப்பிள்ளையினுடைய திரு நுதலிலிட்டு, பின்னர் அவரைக்கொண்டு கலியாணப்பெண் களுக்கிடுவித்து, நாரதமுனிவர் மும்முறைபொரியிட, அவை களை ஓமாக்கினிக்காகுதிசெய்து, மற்றைச்சடங்குகளையும்வரன் முறையாகமுடித்தனர். பின்னர் கல்யாணப்பிள்ளைக்கு மகா விஷ்ணுதோழராகவிருந்து, கைலாகுகொடுத்து பீடத்திலிருந் தெழுப்பலும், இலக்குமிமுதலிய அறுவர்களுந்தங்கள் நாயகிய ராகிய சித்திபுத்திகளைத்தழுவியெடுத்து, அவர்கள் சுண்டுவிரல்

களைச்சூழ்ம்மறகூட்பிடிய விநாயகப்பெருமானுடைய சுண்டுவிரல் கின்ற சரஸ்மிசெய்தார்கள். உடனே சகலரும் புடைசூழ்ந்து ஏ! நிற்வரும்படியாகக் கணேசமூர்த்தியானவர் அக்கினிகுண்டத்தை மும்முறைவலம்வந்து, வடபாரிசத்திற்சேர்ந்து, கல்யாணப்பெண்களின்றிருவடிகளைத்தமது திருக்கரத்தாற்றூக்கி றூக்கிகிலத்திலிட்டு, முடியில் அம்மியின்மீதுவைத்துப், பதிவிரதாசிரோமணியாகிய வசிஷ்டமுனிவர் பத்தினியை எதிரிலழைத்து, அவள்மீது தமது திருக்கண்சாத்தினர். இவ்விதமாக அக்கினிதேவன் தவத்தர் தேவர் வேதப்பிராமணர் முதலிய சர்வத்திராள் முன்னிலையிற்சாக்ஷியாகத் திருக்கல்யாண சம்பிரமங்களனைத்துங் கிரமமாகமுடிந்தவுடன் விநாயகக்கடவுள் தமது தேவியரோடுந் தாய்தந்தையர் திருவடிகளில்வணங்க, அத்தாய்தந்தையர் ஆசீர்வதித்து, மனப்பூரிப்படைந்து, நவரத்நமயமாயிருக்கின்ற ஆசனத்திலிருத்தித் திருமாலைநோக்க, அத்திருமால்சிவபிரானைவணங்கித், தேவேந்திரனெடுத்து நீட்டுகின்றதாம்பூலாதிகளை, அனந்தர்முதல் உருத்திரகணமீருயுள்ள எல்லாத்தேவர்கட்கும் வரன்முறையாகக்கொடுத்துவந்தனர். அவ்வாறே கற்பகவிருக்ஷமும், முனிவர் முதலாயுள்ளபரிசனங்கட்கு, வேண்டுவனவற்றை வரையாது கொடுத்துவந்தது. இவையன்றி அவ்வவர்கள் குறித்துக்கேட்டவரங்களையுஞ் சிவபெருமான் தமது பூரண கடாக்ஷத்தால் அனுக்கிரகித்துப், பார்வதிதேவியோடுஞ் சென்று மற்றோரிடத்திற்றனியாக வீற்றிருந்தனர். இப்பாற் சித்தி புத்திகளிருவரும், அழகிய மணிகளிழைத்தசிவிகைகளிலேறிவர, என்னை யடிமையாகவுடைய விநாயகமூர்த்தியானவர் ஈராயிரமருப்பினை யேந்திய அயிராவணமென்னும் பொருப்பில் ஆரோகணித்து, அடைத்த கடலையுடைத்ததுபோல அளவற்ற வாத்தியங்கள் முழங்கவும், மடைதிறந்துவிடுத்தலு போலமங்கலவாழ்த்துகள் சத்திக்கவும், தேவர்கள்புட்பவருடம்பொழியவும், சந்திரவட்டக்குடைகள் ஆகாயத்தைக் கவிக்கவும், பலவிருதுக் கொடிகள் அண்டமுகட்டை நெருங்கவும், இருமருங்கினும் வரிசை வரிசையாகச் சவரிகளிரட்டவும், ஒப்பற்ற ஆலவட்டங்களை நாற்புறங்களினுமசைக்கவும், கின்னரர் இசை பாடவும், அரம்பையர் நடமாடவம், மற்றும் இவை முதலியசகல வாடம்பரங்களோடு, நந்திதேவர்தமது வெள்ளி வேத்திரத்தால் நெருங்கியிருக்கின்ற சனங்களை விலக்கிவரும்படியாகப், பையப்பைய அயிராவணத்தை நடாத்திக்கொண்டு, வீதியிற் பவனிவருகின்ற சமயத்தில், சிலமாதர்கள் நீராஞ்சனம், பூரணகும்பம், மணிவிளக்கு, முளைப்பாலிகை முதலிய மங்கலப்பொருள்களை யேந்தியும், சிலமாதர்

கள்கன்னற்றுண்டுகதலிக்கனி, மாங்கனி
வர்க்கங்களைவீசியும், சில மாதர்கள் புட்பம், சந்த
பனிநீர், முதலிய பரிமளத்திரவியங்களைச்சொரிந்தும், தர்கள்வச்சிரம், வைடூரியம், கோமேதகம், புட்பராகம், முதலிய ரத்தினங்களை எறிந்தும், இவ்வாறு யாவரும் மிகுந்த பத்தி விசுவாசத்துடன் பற்பல சம்பிரமங்களைச்செய்து, கரங்களைக்கூப்பித்தொழுது, வாயாரவாழ்த்தினவர்களாயிருந்தார்கள். அவருட்சிலதருணமங்கையர் தேவதேவோத்தமாராகிய விநாயகக்கடவுளது அற்புதமாகியரூபலாவண்ணியங்களை நேத்திரோற்சவமாகக்கண்டு, தங்கடங்கள் சரீரமெல்லாம் பூரிய[illegible]பொருந்தச் சேவித்தமாத்திரத்தில், வேறொரு செயல்களுமற்றவர்களாய், அளவற்ற ஆசைப்பெருக்கென்னுஞ்சமுத்திரத்தின் மூழ்கியிருந்தார்கள். அவருள் ஒருத்தி தன்மையலைச் சற்றேதணித்தெழுந்து இவ்வாடவரையொப்பவர்யாவரிருக்கின்றார்களென்று தென்றற்காற்றிலுலைகின்ற இளங்கொடியைப்போலத் துவண்டுரைப்ப, அதனைக்கேட்ட மற்றொருத்தி, யான்தழுவ நினைத்திருக்கின்ற ஆடவர்க்கு நீ துன்பமுற நோக்கினையோவென்று கோபித்தனள். ஒருத்தி சகலஆபரணங்களும் இந்நாயகர் திருமேனியிலணிந்ததனால் அல்லவா அவைகட்கழகுண்டாயதென்று வியக்க, அதனைக்கேட்ட மற்றொருத்தி அவளையெதிர்ந்துச்சீறி, நீ உயிர்வாழ்தல் விரும்புவையாயின் இந்தவொப்பற்ற அழகருடைய நினைப்பையொழித்து விடக்கடவை, முன்னரே அவரிடத்து என் மனந்தூதுபோயிருக்கின்றதென்றனள். ஒருத்தி தன்முகத்தைநோக்கி நிமிர்ந்திருக்கின்ற கொங்கைகளைப்பார்த்து, ஓ தனங்களே இச்சித்திப்புத்திகள் தங்கள்முகத்தை நோக்கியிருக்கின்ற கொங்கைகளை விநாயகமூர்த்தி கைகளாற்றழுவும்படி அரியதவத்தைச்செய்தார்கள், அத்தனங்களைப்போலநீங்களும் என்முகத்தைநோக்குவதி லென்ன பயன், முற்பிறப்பில் யாமவரைக்கூடுமாறு நற்றவஞ் செய்திலோமேயென்று ஏககமுற்றுரைத்தனள். ஒருத்தி விநாயகக்கடவுண்மீதுகொண்ட பெருங்காதலால் தானோக்குமிடமெல்லாம் அவரைப்போலஉருவெளித்தோற்ற முண்டாகக்கண்டு, இவ்வயிரர்வணத்தில்வருகின்ற கட்டழகர் ஒருவரோ பலரோவென்று ஐயமுற்றுத், தன்கலைசோர்வதையு மதியாதவளாகி நின்றனள். இவ்வாறு ஆங்காங்கு காமுற்றுவருந்துகின்ற மங்கையர்கூட்டத்துள், விநாயகமூர்த்தியைக்கைகுவித்துத்தொழுகின்றவருடைய கரங்களும், கொழுகொம்பற்றகொடிபோலத் தாழ்ந்துவணங்கி மீளவும் எழுதலில்லாதவர்களுடைய நிதம்பங்களுமே, தத்தம் வளைகளோடுங் கலைகளோடுநிறைந்து விளங்கியிருந்தனவன்றி,

உ

சிவமயம்.

# இந்நூலச்சிட்டதற்குக் காரணம்.

---

இத்தமிழ் நாட்டில் பெரும்பாலோர் நமது விநாயகக்கடவுளுக்கு விவாகமே கிடையாதென்றும், தாயினைப்போல் தாரமவேண்டித் தீர்த்தக்கரைகடோறும் எழுந்தருளியிருக்கிறாரென்றும் பேசிவருகின்றார்கள். கற்றோர்கள் சிலருட் இதனையே யுண்மையெனக்கொண்டு பாடல்களிலும் அங்ஙனமே பாடிவருகின்றார்கள். இத்தகைய விஷயத்தை மறுத்து உண்மையை யாவருக்குந் தெரிவிக்குமபொருட்டு உலோகோபகாரமாக, உபபுராணங்களிலொன்றாகிய பார்க்கவபுராணம் என்னும் விநாயகப்புராணத்திலுள்ள திருமணப்படலத்தை யச்சிட்டு சுலபமான விலை யேற்படுத்தி வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதன் விலை அணா ௧.

வேண்டியவர்கள் சென்னைப் பெத்துநாயக்கன்பேட்டைத் தங்கசாலைவீதி அருணாசலயீஸ்வரர் தேரடியையடுத்த, இந்து சென்றல் ஸ்கூல் உதவி உபாத்தியாயர், ப-முனிசாமி ராஜு. இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

---

ஓம்.

சிவகணபதிதுணை.

சிவசாமிநாத சிவஞானதேசிகர் திருவடி வாழ்க.

[illegible]HANDAR KOVI[illegible]

# சன்மார்க்கவியல்.

இஃது

மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்தாபகரும்,

பாலவநத்தம் ஜமீன்தாரும்,

அக்கிராசனாதிபதியுமாகிய

ஸ்ரீமான்

பொ. பாண்டித்துரைசாமி வேந்தரவர்கள்

விருப்பத்தின்படி

மதுரைத் தமிழ்ச்சங்கத்து

ஒன்பதாமாண்டின் உத்ஸவம்

தஞ்சையிற் கூடியகாலத்து வித்வசபையின்கண்

உபயோகித்த பிரசுரம்.

ஆனந்த சண்முக சரணாலயன்,

சிவாநந்தானுபூதி நிலயம்,

தில்லைவளாகம்.

திருவாரூர்

"[illegible] அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பெற்றது.

1910-௵ மே ௴ 22௳.

MAHAMAHOPADHYAYA [illegible]

…களைச்…மேற்கூப்பித் …கின்ற சரஸ்வ… தம்பங்களும், அவ்வளைகள்சோர்ந்தனவாகளுடன் …வீழ்ந்தனவாகவுமிருந்தன. சிலமங்கையர் கைகளி… …இருக்கின்ற வளைகளெல்லாம், விநாயகப்பெருமானுடைய மார்பைப்புல்லாதகைகளில் நாமிருப்பதாலென்னபயனென்றாகூவிவீழ்ந்தன. சிலநங்கையர்முடித்திருக்கின்றகூந்தல்களெல்லாம், அவர்கள் உள்ளநெகிழ்ச்சியை அக்கணேசமூர்த்திக் கறிவிப்பதுபோல அவிழ்ந்துசோர்ந்தன. சிலகோதையர் ஆனந்தக்கூத்தாடினார்கள். சிலபேதையர் நயந்தெரிந்துபாடினார்கள். சில அரிவையர்குறிஞ்சி முதலியபண்களைப்பாடினார்கள், சிலதெரிவையர்பா…யிற்கலந்தாடினார்கள். இவ்வாறு பேதை பெதும்பைமங்கைமடந்தை அரிவைதெரிவை பேரிளம்பெண்என்னும் எழுவகைப்பருவங்களைப் பெற்றிருக்கின்ற ஸ்திரீசாதிகளெல்லாந் தெருக்களில்நிறைந்து நின்று காதல்கொள்ளத்தக்கதாக, என்னையாட்கொளபவராகிய விநாயகமூர்த்தியானவர் அலங்கரித்திருக்கின்ற வீதிகளைவலமாகவந்து, மீட்டும் அரமனையிற் பிரவேசித்தனா. அத்தருணத்தில் காமதேனு சிந்தாமணி பஞ்சதாரு சங்கநிதி பதுமநிதி என்னும் இவைகள் வேறுவேறுருவங்கொண்டு, வந்தவர்கட்கெல்லாம் பெருமைபெற்ற பலதிரவியங்களை அவ்வவர்கள் வெறுக்கும்படியாகமழைபோற்சொரிந்தன. இவ்வண்ணம் திருக்கல்யாண சம்பிரமங்கண்முழுவது நிறைவேறியபின்னர், தேவர்கள் முனிவர்கள் திக்குப்பாலகர் கணநாதர்கள் பூமண்டலவாசிகள் பாதலவாசிகள் முதல்மற்ற தீபாந்தரங்களிலிருந்து வந்தவர்கள்யாவருஞ், சிவபெருமான் பார்வதிதேவியாரோடும் வீற்றிருக்கின்ற சபையைச்சேர்ந்து, தீர்க்கதெண்டனசெய்து விடைபெற்றுத் தம்பதிசமேதரா வெழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்தியைக்கண்டு, பலமுறை துதித்துச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து அவரது திருவருளைப்பெற்றுத் தங்கடங்கள் பதவிகளிற்சேர்ந்தனர். இப்பால்சிவபெருமான் தம்மோடுவந்த கந்தவேள்முதலிய காரணர்களெல்லாம் புடைசூழ்ந்து வரும்படியாகச், சித்திபுத்திமணாளராகிய கணேசமூர்த்தியை யழைத்துக்கொண்டு, பார்வதிதேவியாரோடுங் கைலைக்கெழுந்தருளித் தமதுபஞ்சகிருத்தியங்களை நடாத்தியிருந்தனர். விநாயகக்கடவுளுந்தமது உலகத்திற்சென்றுமதன்னையராகிய சித்திபுத்திகளோடுங்கலந்து சகலபோகங்களையும் அனுபவித்திருந்தனர். சுபம் சுபம்.

# முகவுரை

அநாதி முத்த சித்துருவாகிய சிவபெருமான் திருவருட் காரியமாய்த் தோன்றுகின்று தொழிற்பட்டகிலத் திருநாமம் வகித்த இந்நிலவுலகத்தின் ஐந்திணைப்பொருளு மமைந்திபல்வளமை நந்தாதிலகு நாவலந் தீவில் எந்த நன்னாட்டினுஞ் செந்தமிழ்நாடே சிறந்த தாமென அக்காலத் தறிஞர்களாலும் இக்காலத் தேசத்தாராலும் புகழ்தற்குரிய இத்தமிழ்நாட்டின் கண் கல்வியறிவொழுக்கத்திற் சிறந்த வித்வான்கள் பல நகைப்பாரென நாணமின்றி அற்ப அறிவுங் கல்வியுமுடைய அடியேன் திருவாரூர் ஸ்ரீ கமலாம்பிகா விலாச சங்கம் ஆரம்பகாலத்தில் "அன்பிய" லென்னும் ஒரு வியாசமெழுதி யச்சிடுவித் துபயோகித்தும், ஷை சங்கம் வருஷோத்ஸவத்தில் கடவுள் வழிபாடென்னும் ஒரு வியாசமெழுதி யச்சிட் டுபயோகித்தனன். மேற்படி சங்கத்தி னங்கத்தினர் விரும்பியவண்ணம் விஜயஞ் செய்து அக்கிராசனம் வகித்த

செகமெலாம்புகழு முகவைமாநகரில்
நன்னய சுகுணப் பொன்னுச்சாமிமால்
பண்ணியமாதவப் புண்ணிய குமாரன்
அளக்கர்கோவென்ன வளக்கரு நிதியினன்
அனந்தனென்னுமா றனந்தநூலாய்ந்தோன்
அமிழ்தினுமினிய தமிழெனு நங்கை
ஆதரவின்றிப் பேதுறுங் காலை
அஞ்சேலென்னத் தஞ்சந்தந்தே
முச்சங்கங்களு மிச்சங்கத்துக்
கீடிலையென்னக் கூடலம்பதியிற்
சங்கம்வளர்த்திடும் புங்கவனுலகு
காண்டகுசீர்த்திப் பாண்டித்துரைவேள்

கல்வியிலாரும், செல்வமுளாரும், செல்வமிலாரும், அருளுடையாரும், அருளிலாரும் மெய்ஞ்ஞானியரும், அஞ்ஞானியரும், சாதகரும், சாத்தியரும் ஆகிய யாவரும் வேதாகமங்களினும் அதன் சாரமாய் ஆன்றோரருளிய நூற்களினும் விதித்துள்ள பேதமின்றிய நல்லொழுக்கத்திற் பொதுவகையா னொழுகற்பாலதேயாம். இது நோக்கியன்றே

**திருக்குறள்**

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி —எனவும்,

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறியுள்ளார். அவ்வாக்கையும் வேதாகமங்களோ டொப்பக்கொள்ளற் பாலதோ வெனின்

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவைத்
திருவாசகமுந் திருமூலர் சொல்லு
மொருவாசக மென் றுணர் —எனவும்,

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்
[தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்கச்சென்னி வாழ்த்துகநா னெஞ்சஞ்
சிந்திக்கக் கேட்கச்செவி. —எனவும்,

ஆன்றோர் கூறியவற்றினும் ஏனைய நூற்கள்போலன்றி திருவாலவாய்ச்செந்தமிழ்ச்சங்கத்தேறி தனியமரப்பெற்றதனாலும் அச்சங்கத்தனைவராலும் புகழப்பெற்றதனாலும் தற்காலத்திய எவ்வருணத்தரும் எம்மதத்தரும் கல்வியறிவுடையரும் பொதுவகையான் கைக்கொள்ளற்பாலதாய் வழங்கிவருதலாலும் பேதமன்றும். இன்னும்,

## தாயுமான சுவாமிகள்

காரிட்டவாணவக் கருவறையிலறிவற்ற
கண்ணிலாக்குழவியைப்போற்
கட்டுண்டிருந்தவெமை வெளியில்விட்டல்லலாங்
காப்பிட்டதற்கிசைந்த
பேரிட்டுமெய்யென்று பேசுபாழ்ம்பொய்யுடல்
பெலக்கவிளை யமுதமூட்டிப்
பெரியபுவனத்தினிடை போக்குவரவுறுகின்ற
பெரியவிளையாட்டமைத்திட்
டோரிட்டதன்சுருதி மொழிதப்பி னமன்விட
டிடருறவுறுக்கி யிடர்தீர்த
திரவுபகலில்லாத பேரின்பவீட்டினி
லிசைந்துதுயில் கொண்மினென்று
சீரிட்டவுலகன்னை வடிவானவெந்தையே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே.

எனச் சிவானுபவச்செல்வர்களா யெழுந்தருளியிருந்த ஸ்ரீ தாயுமானசுவாமிகள் திருவாக்கைச் சிந்திக்குமிடத்து

அநாதிமல முத்த சித்துருவாகிய பரசிவபெருமான் தனக்கு ஒருபிரயோசனமுங் குறியாது அநாதியே ஆணவமலத்திற் கட்டுண்டு யாதுமுணர்வின்றிக் கிடந்த ஆன்மாக்களின்மேல் வைத்த பெருங்கருணையினாலே அவ்வான்மாக்கள் மலத்துவ நீக்கமுஞ் சிவத்துவவிளக்கமுஞ் சித்திக்கும்பொருட்டு தனுகரணங்களையும் புவனபோகங்களையுங் கொடுத்து சிறிது அறிவைவிளக்கியும் அவர்களனைவரும் ஒழுகியுய்யுமாறு வேதாகமங்களை யருளிச்செய்தும் அதில்விதித்த நெறியொழுகும் ஆன்மாக்கட்கு மறக்கருணைபுரிந்து இரட்சித்து அரியவீட்டை யடைவித்தும் விதியின்றி நிடேதநெறியொழுகும் ஆன்மாக்கட்கு மறக்கருணைபுரிந்து சிட்சித்து சுவர்க்க நரக போகங்களைத் துய்ப்பித்தும் பின்னர் பலபிறப்பிலுண்டாம் புண்ணிய பரிபாகத்தாலும் விதிநெறி யொழுகுதலாலும் இருவினை யொப்பு மலபரிபாகம் சத்திநிபாதமுறுவித்து அரியவீ டடைவிப்ப னெனவும் விளங்குகின்றது.

ஆனால் இறைவன் கருணைசொரூபனானதால் மறக் கருணைபுரிதல் இயல்பாமோவெனின் அவையும் அறக் கருணையேயன்றி வேறன்றாம்! என்னெனின் தன்பால் இறைவனிரங்கி யருளியபேருதவியை ஆன்மாக்கள் மறந்து தனக்குபகாரணமாயிருந்த தனுகரண புவன போகங்களிலாழ்ந்தி யானெனதென்னுஞ் செருக்குற்றுப் பிறர்மாட்டுச்செய்யு மிதாகிதங்களாகிய வினையொழிதற் பொருட்டேயன்றி வேறன்றாம்.

இதாகிதமாகிய வினையாதெனின்: மாறுபாடுடைய மனம்வாக்கு காயங்களால் உயிர்க்குறுதியென வேதாகமங்களில் விதித்தவற்றைச்செய்தலே இதம்; அவற்று மறுதலையைச்செய்தலே அகிதம்; ஆதலால் அவ்விரண்டினையு மறியவல்ல முதல்வனே அவற்றைக்கைக்கொண்டு இவ்விடத்தில் இன்ப துன்பமாகிய பயனளிப்பன்.

ஆன்மாக்கள்செய்த கன்மத்தை முதலவனேற்றுக் கொடற்குக் காரணமியாதெனின்: யாண்டும் நிறைந்த அம்முதலவன் உயிர்கள் வீடுபேறடைதற்பொருட்டு வைத்த கருணையேயாம். கருணையாயினும் காரணம் இருவேறுவகைப்பட்ட நிகழ்ந்தமையின் பயனும் இருவேறு வகைப்படச் செய்யவேண்டுதலான் அறமிகுந்த இதமாகியவினையைச் செய்வோருக்கு அநுக்கிரகத்தைப் புரிவன். மறமிகுந்த அகிதமாகிய வினையைச்செய்வோருக்கு நிக்கிரகத்தைப் புரிவன். முதல்வன் அநுக்கிரகஞ் செய்தலேயன்றி அங்ஙனம் அகிதஞ்செய்தாரைக் கண்டித்தலும் கருணையினால் நல்வழிப்படுத்தற்பொருட்டேயாம். அக்கிரமத்தாற் செய்யப்பட்ட குற்றங்களைக் கண்டித்து நீக்குதலான் அச்சமுண்டாகச்செய்து இம்முறையா லிங்ஙனம் அறத்தினைச்செய்தல்வேண்டுமென வுணர்த்துவன். திரோபவித்தல், சங்கரித்தல்களுட்பட்ட எம்முறையாலும் இறைவன்செய்தி எஞ்ஞான்றுங் கருணையாதற்கிழுக்கில்லை. அவை உலகத்துத் தாய் தந்தையர் புத்திரர்கள் தங்கள் சொல்வழி யொழுகாராயின் உரப்பி மலாரினாலடித்து தீயவிலங்கு மிடுவாராக

லான இன்னோரன்னவை பார்க்குமிடத்து செயல்வகை
யான வெதுளிபோற்றோன்றினும கருத்துவகையான்
அருளேயாதல் முடிவில் அறியப்படும். எக்காலமு
முதலவனிக்கிரகமும இந்த இயல்புபோலு முறைமை
யாம.

இருவினை முதலாயின அழிவெய்துவன ஆதலானும
இறைக்கிருத்தியங்களெல்லாம சிவபிரானைப் பெறுதற்கேயாத
லானும அவனை அறக்கருணையாளனெனப்படும மறக்கருணை
யாற்றுன்பமும் ஈவனென்பதுபோந்தது. அதுவன்றி
வேதாகமங்கள் சிவபிரான் கற்பித்தருளியனவேயாயின்
பெரியராகாலாது அச்சொல்வழியொழுகாதாரைத் தண்டித்
தப்பிப் நடப்பின் அவனை அரசாங்கம் சிறைக்களைத்
தலைக்காலும் அருளொழிவழி நடப்போரை வாழ்வித்
தப்பிப் நடப்பின் அவனைத் தக்கபடியே தாராவே
களையும் உயிர்க்கு இன்பதுன்பங்கள் அவனாலேயே
வருதலாலனவேயாம

உலகத்தார் வேந்தர் ஆணையாற்கின்ற காவல் புரி
யொழுகு நடவாதாரை ஆணையினாலொறுத்தும் ஒறு
த்தலிப சிறைக்களைப்படவும் வையார். அவ்வொழு
வழி நடப்போரை பெரியபதவி, செல்வமும் ...
வாழ்வித்து தங்கீழ் அதிகாரமுந் செய்வையாரா.
அமைச்சா முதலாயினோமாட்டு அவ்வாறுகாணப்படும்
ஆணையும் அவ்வேந்தரது ஆணையேயாம. அதுபோல
முதல்வன்பாட்டுங் கண்டுகொள்க

இவ்வுலகத்துள்ளோர் பெரும்பாதகங்கள் செய்தி
டின் அரசனவன் கொடியதண்டஞ்செய்து மேலும்
பாவஞ்செய்யின் இத்துணையினன்றி இன்னுங் கொடுந்
தண்டஞ் செய்வலெனத்தண்டத்தை யெடுத்துச்சொல்லி அச்
சுறுத்தி ஒழிப்பன். அறிவுடையார் பின்புவிதிவழி
நடந்து நிரயத்தின் அழுந்தார். அந்த நரகதண்டமு மிவ்
வரசதண்டம்போல முன்னுதற் கேதுவாகின்ற தன்மை
யுடையதாம். இங்ஙனம் அரசதண்டம வைத்தது நரக

தண்டப்படாமற் பாதுகாத்தற்பொருட்டும் ஆகலான் அவ்வரசனாணையும் முதல்வனாணையின் வழித்தாவதன்றி சுதந்திரமன்று.

கருணையினாலுரைத்தருளிய வேதாகமநூல் வழி நில்லாதுபாவஞ்செய்யின் இருள்செறிந்த நரகத்திட்டுத் துன்பத்தினை நுகர்வித்துப் பெரியபாவத்தினை யொழிப்பன். அதிசயப்பொருள்கள் தங்கிய துறக்க முதலியவற்றின் வைத்து இன்பத்தினை நுகர்வித்து நூல்வழிநின்று அருள்வழி நில்லாமையாகிய புண்ணியத்தினையொழிப்பன் சிவபிரானாகியவைத்தியன். பந்த முறுதற்கேதுவாகிய பாவபுண்ணியமிரண்டும் உயிர்க்கு நோயாகலின் அந் நோய்தீர்த்தற்குரிய இன்பதுன்பங்கள் மருந்தாம்.

## போற்றி பஃறொடை.

இருவினையான் முன்புள்ள வின்பத்துன்பங்கள்
மருவும்வகையங்கே மருவி—யுருவுடனின்

றோங்குநுதலாய வோலக்கமண்டபத்திற்
போங்கருவியெல்லாம் புகுந்தீண்டி—நீங்காத

முன்னைமலத்திருளுண் மூடாவகையகத்துட்
டுன்னுமிருணீக்குஞ் சுடரேபோ—லந்நிலையே

சூக்கஞ்சுடருருவிற் பெய்துதொழிற்குரிய
ராக்கிப்பணித்த வறம்போற்றி—வேட்கைமிகு

முண்டிப்பொருட்டா லொருகாலவியாது
மண்டியெரியும்பெருந்தீ மாற்றுதற்கு—திண்டிறல்சோ

வல்லார்கள்வல்ல வகையாற்றொழில்புரித
லெல்லாமுடனே யொருங்கிசைந்து—சொல்காலை

முட்டாமற் செய்வினைக்கு முற்செய்வினைக்குஞ் செலவு
பட்டோலைதீட்டும் படிபோற்றி—நட்டோங்கு

மிந்நிலைமை மானுடருக்கேயன்றி யெண்ணிலா
மன்னுயிர்க்குமிந்த வழக்கேயாய்—முன்னுடைய

நாணாள்வரையி லுடல்பிரித்து நல்வினைக்கண்
வாணாளின்மாலா யயனாகி—நீணாகர்

வானாடர்கோமுதலாய் வந்தபெரும்பதத்து
நானாவிதத்தா னலம்பெறுநா—டான்மாள

வெற்றிக்கடுந் தூதர் வேகத் துடன்வந்து
பற்றித்தன் வெங்குருவின் பாற்காட்ட—விற்றைக்கு

மில்லையோ பாவி பிறவாமை யென்றெடுத்து
நல்லதோ ரின்சொ னடுவாகச்—சொல்லியவர்

செய்திக்குத் தக்க செயலுறுத்து வீரென்று
வெய்துற் றுரைக்க விடைகொண்டு—மையுறும்

செக்கினிடைத் திரித்துந் தீவாயினிட் டெரித்துந்
தக்கநெருப்புத் தூண் டழுவவித்து—மிக்கோங்கு

காரா சங்காய்ச்சிச் செவிமடுத்து நாவரிந்து
மீராவுன் னூனைத் தின்னென் றடித்து—பேராம

லங்காழ் நரகத் தழுத்துவித்தும் பின்னுந்தம்
வெங்கோப மாறாதே யட்டையா—மிங்கொருநா

ளெண்ணி முதற்காணாத வென்னாற்கொடு நரகம்
பண்ணெடுநாட் செல்லும் பணிகொண்டு—முன்றுயர

கண்டுடன் கறித்தல் காரியமோ மென்றெண்ணாக்
கொண்டு வருகோபினை நறிப்பறியார்—மண்டுயர

காய்ச்சிச் சுடவுறுக்கக் கண்றூரிக்க நன்னிதிய
மீந்ததுத் தாய்தந்தைதம ரின்புறுதல்—வாய்த்தமைய

யோடிய தேரின்கீ ழுயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவமின் றேறுகுமென—நாடித்தன்

மைந்தனையு மூர்ந்தோன் வழங்கே வழக்காற
றறிந்தனைய சிறைநமன் தூதர்—வெஞ்சினத்தா

லெல்லலுறுத்து மருநரகங்கண்டு நிற்க
வல்ல கருணை மறையோர்ந்தி—பல்லுயிர்க்கு

மன்னவகையா லிருவினைக ணின்றருத்தி
முன்னை முதலென்ன முதலில்லோ னல்வினைக்க

ணெல்லாவுலகு மெடுப்புண் டெடுப்புண்டு
செல்காலம்பின் னரகஞ்சேராமே—நல்லநெறி

யெய்துவதோர் காலந்தன் னன்பரைக் கண்டின்புறத்
துய்யும்நெறி சிறிதே யுண்டாக்கிப்—பையவே

மட்டாய் மலராய் வருநாளின் முன்னைநாள்
மொட்டாயுருவா முறைபோலக்—கிட்டியதோர்

நல்லபிறப்பிற் பிறப்பித்து நாமும் வினை
யெல்லை யிரண்டு மிடையொப்பிற்—பல்பிறவி

யத்தமதிலன்றோ வளவென்று பார்த்திருந்து
சத்திபதிக்குந் தாம்போற்றி.

எனச் சந்தானாசிரியர்களிலொருவராகிய உமாபதி சிவமருளிய திருவாக்கானும்—" சுருதிமொழி தப்பினமனைவிட் டிடருறவுறுக்கியிடர்தீர்த் திரவுபகலில்லாத பேரின்பவீட்டினி லிசைந்து 'துயில்கொண்மினென்று சீரிட்ட வுலகன்னை வடிவான 'வெந்தையே"—என ஸ்ரீ தாயுமானசுவாமிகளருளிய திருவாக்கானு முணரற்பாலது. இறைவன்செயு மறக்கருணையும் அறமேயாமென்பது தெற்றென விளங்கும்.

ஆகலான் அரியமானிட தேகத்தைப் பெற்றவர்கள் பெறுதற்கரிய பரமுத்திக்கு ஏதுவாயது சன்மார்க்கமொன்றும் ஞானமேயாயினும் ஞானசாதகரும் சாத்தியருமொழுகற்பாலதும் ஞானத்துக்கு ஏதுவாக முன்பு பாவநங் கைக்கொண்டொழுகற்பாலதும் சன்மார்க்கமென்னும் நல்லொழுக்கமேயாகலினானும் சிவபெருமானருளிய வேதாகமங்களின் விதித்த நெறியாதலினானும் அவனது மறக்கருணைக்குப் பாத்திரமன்றி அறக்கருணைக்குப் பாத்திரமாகலினானும் பொதுவகையான் மனிதப் பிறப்பையடைந்த யாவரும் ஒழுகற்பாலதாகலினானும் அதனை யொருவாறுரைப்பாம்.

நல்லொழுக்கமாவது:—பொறுமை, இரப்பார்க்கீகை, சர்வ பிராணிகளிடத்தும் இரக்கம், சத்பாத்திரமறிந்து தானஞ்செய்தல், உண்மை வசனம், தீயவிடயங்களிற் செல்லாது ஐம்பொறியடக்கல், தீய சிந்தனையின்றிக் கரணங்காத்தல், கோட்சொல்லாமை, உயிர்க்கொலை புரியாமை, பிறர்மனையிச்சியாமை, யாவரிடத்தும் அகிதவசனமுரையாமை, பிறர் செய்ந்நன்றி மறவாமை, காமம் வெகுளி மயக்கமென்னுமுக்குற்றங்களையகற்றல், சொன்மாறுதுகாத்தல், புண்ணியதீர்த்தமாடல், கடவுளர்பூஜையாற்றல், கிடைத்தவரை யுண்மகிழ்ந்திருத்தல், பிறர்பொருள் கவராதிருத்தல், கடூர வார்த்தையின்றிப் பேசுதல் கடவுளாலயத்தும் பெரியோரிடத்தும் வந்தித்து வழிபடுதல், தான் புரிந்த பாவச்செயல்களை யுரைத்துப் பெரியோராற் பிராயச்சித்தஞ்செய்துகொள்ளல், தான்

புரிந்த புண்ணியங்களை பிறர்பாற் பலகாலெடுத்துரையா திருத்தல், தங்கள் தங்கள் வருணாச்சிரமங்கட்குவிதித்த கன்மானுஷ்டானங்களை வழுவாதியற்றுதல், அக்னிகாரியம் தேவதாபூஜை தியான செபமாதிகளை முடித்துப் போஜனம் பண்ணுதல், தென்புலத்தார் தெய்வம் விருந்து சுற்றமுதலியவர்கட்கு அன்புடன் உபசரித்து வேண்டியவற்றையுதவல்—என அநேகமாம்.

அரிய பிறப்பாலாய பயன் நல்லொழுக்கத்தினிற்றலே யெனவும், அவை நீங்கின் உயர் வருணத்துதித்தவரேயாயினும் இழிகுலத்தவரேயாமெனவு மிருபிறப்பேயாமெனவும் ஆன்றோர் கூறியவற்றைக்காண்க.

### விநாயக புராணம்.

தாழ்ந்தவருணத் துதித்தவருந் தக்கோராவ ரொழுக்கத்தால்
வீழ்ந்தவொழுக்கத்தா ரிழிவர்மேலாம்வருணத்துதித்திடினுஞ்
சூழ்ந்த துணையாஞ் சிறப்பின்பஞ் சுரக்குமதனாலுயிர்தனினுமா
வாழ்ந்த வொழுக்க மோம்பிநக வழுக்கினிமைபையே தருமே

### இராமாயணம்.

தக்கவின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னலராயி னுயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின்னெறி
புக்கவே லவ்விலங்கும் புத்தேளிரே —எனவும்,

### நாலடியார்.

அறிவ தறிந்தடங்கி யஞ்சுவதஞ்சி
யுறுவ துலகுவப்பச்செய்து—பெறுவதனா
லின்புற்றுவாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்தலரிது.

பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலாரிற்கட் குருடனாய்த்—தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பனேல் யாது
மறங்கூற வேண்டா வவர்க்கு —எனவும்,

### சிலப்பதிகாரம்.

பரிவுமிடுக்கணும் பாங்குற நீங்குமின்
றெய்வந்தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்

பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் டுறமின் உயிர்க்கொலை நீங்குமின்
றானஞ்செய்மின் றவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் றீநட்பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்
இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா
வுளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீரீங்கென—என்பவற்றானு
முணர்க. இன்னும்,

செய்யாமொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யாமொழிக்கும் பொருளொன்றே—மெய்யா
மதற்குரியா ரந்தணரே யாவ
ரிதற்குரியா ரல்லாதா ரில். —என

ஆன்றோர் விதந்தோதப்பெற்ற திருக்குறளின் தெய்வப் புலமைத்திருவள்ளுவ நாயனார் வகுத்தருளிய முப்பாலின் முதற்பாலாகிய அறப்பாலி னுரைத்தவற்றையும் இங்கு விரித்துரைப்பாம். ஏனெனின் முற்கூறியநல்லொழுக்கத்திற்கு இன்றியமையா தெடுத்துரைக்கற்பாலதேயாம்.

அவை கடவுள்வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை,அறன்வலியுறுத்தல்,இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம்,புதல்வரைப்பெறுதல்,அன்புடைமை, விருந்தோம்பல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் என்னும் இருபத்துமூன்றுமாம்.

(க) அவற்றுள் கடவுள் வாழ்த்து என்பது (மூவர்க்கு முதலாயுள்ள மூர்த்தியை வாழ்த்துதல்) என்றால்-- விருப்பு வெறுப்பகன்று தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல் பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எண்குணத்தோடு தனக்குவேறொப்பற்றிருக்கின்ற கடவுள் யாதோ அதன் திருவடிகளைத் துதித்தலேயாம்.

(உ) வான்சிறப்பு என்பது (அக்கடவுளது ஆணையால் உலகமும் அதற்குறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற்கேதுவாகிய மழையினது சிறப்பு) என்றால் வானம் வழங்காதாயின் அறநெறியால் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடு தானங்கொடுத்தலாகிய இல்லறமும் மனம் பொறிவழிப்போகாது நிற்றற்பொருட்டுத் தவஞ்செய்தலாகிய துறவறமுங் கெடுமாதலால் அவ்வானம் வறுமையெய்தாவண்ணம் வேள்விகளையும் தருமங்களையுஞ் செய்துவரல் வேண்டுமென்பதாம்.

(ங) நீத்தார் பெருமை என்பது (முற்றத்துறந்த முனிவரது பெருமை) என்றால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையுந் தெரிந்து பஞ்சேந்திரியங்களை நிக்கிரகித்த முனிவர்கள் வேதியர் புலவர் பெரியோர் என்னும் இக்கூட்டத்தினரிடத்து அன்புகொண்டிருத்தல் வேண்டும். இவர்கள் ஒருகாற் கோபித்து ஒழுற் பொறியுதிர்ப்பாராயின் காத்தருளுகின்ற கடவுளுங் கலக்கமெய்தும்; ஆகலால் அப்பெரியோர்களை வணங்குவதேகடன். அவர்கள் பொறுப்பரென்று அவமதிக்கத் தகாது. தூயவர்களையும் பெரியோர்களையும் வேதாகமங்களையும் மேலாகவெண்ணிப் பாவத்தக்கதேயன்றி ஒளிக்கேனும் ஓர் நிந்தனையைக் கருதலாகாதென்பதேயாம்.

(௪) அறன் வலியுறுத்தல் என்பது (அம்மேலோராலுணர்த்தப்பட்ட உறுதிப்பொருள் நான்கனுள் அறமானது பொருள் இன்பம் வீடு என்னு மூன்றனையும் தருவதற்கேதுவாகலால் அதனை வலியுறுத்திக் கூறுதல்) என்றால் செல்வப்பொருளும் சொர்க்கலோக வின்ப முத்தி வீடும் ஆகிய மூன்றனையுந் தருவதான அறத்தினை மனம் வாக்குக் காயம் என்கின்ற முக்கரணத்தானும் ஒன்றுபட்டு நாடோறும் பரிந்து நடாத்திவரல்வேண்டும். அதனை நேர்ந்தபோது செய்யாது பின்னாற் செய்துமெனக்கருதிவழுவவிடலாகாது. அவ்வாறுவிடாமல் இயன்றவளவு செய்து வருங்காலத்திலும் பிறராக்கம் பொறாமையும் புலன்கண்மேற் செல்லுகின்ற அவாவும் அவையேதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும் அதுபற்றி வருங் கடுஞ்சொல்லும் ஆகிய நான்கனையுங் கடிந்து செய்தல்வேண்டும். அறத்தாலடிக்கு மின்பமேயின்பமன்றி மற்றையின்பங்களெல்லாந் துன்பத்தினையும் பழியையுந் தோற்றுவிக்கும்; அதனை மறந்தோர்க்கு எல்லாக் கேடும் வந்து உற்பவிக்கும் என்பதேயாம்.

(௫) இல்வாழ்க்கை என்பது (இல்லறத்தோடுங் கூடி வாழ்தல்) என்றால் பிரமசாரி வானப்பிரத்தன் சந்யாசி பிதிரர் குரவர் தேவர் விருந்து ஒக்கல் பெரியோர் மறையோர் இறந்தோர் ஏற்போர் உறுப்பில்லார் பிணியாளர் விருத்தர் பாலர் சிசுக்கள் மூத்தோர் என்னுமிவர்களையோம்பி இல்லறநெறியை வழுவாமற்செய்தலேயாம்.

(௬) வாழ்க்கைத் துணைநலம் என்பது (அவ்வில்வாழ்க்கைத் துணையாகிய இல்லாளது நன்மை) என்றால் ஒருவன் எய்தும் பொருள்களுள் மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடையவளாயும் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத்தக்க வாழ்க்கையையுடையவளாயுமிருக்கின்ற இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவையுள? அவளால் மேலானபுகழும் பிரயோசனமுமுண்டாவதன்றிப் பகைவரெதிரில் இடபத்தைப் போலமனக்கோட்டமின்றிநடக்கத்தக்க பெருமித நடை

யுமுண்டாகும். ஆதலால் அத்தன்மைத்தாகிய மனைவி யோடு உவப்புற்று வாழ்தலேயாம்.

(எ) புதல்வரைப் பெறுதல் என்பது (அந்தணர் முதலிய மூவரானும் இயல்பாக இறுக்கப்படுங் கடன் மூன்றனுள் முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும் தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லதுஇறுக்கப்படாமையின் அக்கடன் இறுத்தற்பொருட்டு நன்மக்களைப் பெறுதல்) என்றால். புதல்வரானவர் பிறப் பேழின்கண்ணும் பெற்றோருக்குத் தீவினை வளராது தேய்த்தற்குக் காரணமாகிய நல்வினைகளையும் தென்புலத்தார்க்குரிய கடன்களைச்சாலமுடிக்கு மாண்பினையுமுடையோராதலால் குற்றமற்ற தவங்களைச் செய்தேனும் புதல்வரைப் பெறவேண்டும். பின்னர் அப்புதல்வரை கற்றோர் அவையத்தின்கண் அவரினு மிக்கிருக்குமாறு கல்வியுடையவராக்கல்வேண்டு மென் பதேயாம்.

(அ) அன்புடைமை என்பது (இல்லறம் இனிது நடாத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள் பிறத்தலுமாம்) என்றால் யாக்கை யகத்தின்கணின்று இல்லறத்திற்கு றுப்பாகிய அன்புடையரல்லாதார்க்குப் புறத்தின்கண் இடனுள் பொருளும் ஏவல் செய்வாருமான உறுப்புக் களெல்லாம் அவ்வறஞ்செய்வதற்கண் என்ன உதவியைச் செய்யும்? ஒருவன் சோர்வுற்றகாலத்தும் அவ்வன்பின் வழுவாதிருத்தல்வேண்டும். அவ்வாறிருத்தலினால் நொதுமலுட் பகையுமுறவாகும். அளவிறந்த சிறப்பையும், மேற்கூறிய வாழ்க்கைத்துணையையு மைந்தரையும் தொடர்பின் வளர்த்துவருமென்பதேயாம்.

(க) விருந்தோம்பல் என்பது (பண்டை அறிவுடையாய்க் குறித்து வந்தாரையும் அஃதின்றிக் குறியாது வந்தாரையும் பேணி அவர்க் குபகாரஞ்செய்தல்) என்றால் பயன்வேண்டினோர் விருந்தினரைச் சேய்மையிற்கண்டுழி இன்முகமும் அவர் பற்றி நண்ணியவழி இன்சொல்லும் பின்னர் உடன்பட்ட வழி வஞ்சங் கல

வாத நன்றுற்றலும் என இன்றியமையாத இம்மூன்ற ுள் முதற் கண் இன் முகம் வேண்டும். அஃதில்லா விடின் மோந்துழியல்லாது வாடாத அனிச்சம்பூவினும் விருந்தினர் மெலியராதலால் அவர் செய்மைக்கண்ணே வாடி நீங்குவரென்பதேயாம்.

(௧0) செய்ந்நன்றியறிதல் என்பது (தனக்குப பிறர்செய்த நன்றியை மறவாமை) என்றால் இவர்க்கு இதுசெய்யின் இன்னதுபயக்குமென்று ஆராய்தலில்லா மல் ஒருவனுக்கு இறுதிவந்த எல்லைக்கண்செய்த உப காரந்தன்னை நோக்கச சிறிதாயிருந்ததாயினும் அக்கா லத்தைநோக்க அதற்கோரளவில்லை அல்லது பயனுமே லும் காரணத்தாலேனும் வருந்தும் பதத்திற்செய்த உதவியாயின் அதனை உலகத்தினும் பெரிதாகவிரும்பி மதித்தல் ஏற்போரது கடமையாம். மேலுந் தமக்கு முன்னொரு நன்மைசெய்தவர் பின்கொன்றுலொத்த இன்னாதவற்றைச் செய்தாராயினும் அவர்முன்செய்த நன்மையை மதித்துப் பின்செய்த தீமையைச் செய்த பொழுதே மறத்தல்வேண்டும். இல்லையாயின் அந்தனை ரைக்கொன்ற பிழையினுமேலானபிழை மலைபோலப் பெருகுமென்பதேயாம்.

(௧௧) நடுவுநிலைமை என்பது (அறத்தின் வழு வாது ஒப்ப நிற்குநிலைமை) என்றால் பகை, நொதுமல், நண்பு என்னு மிம்மூன்று பகுதியினும் சமனுகநின்று நோக்கும் நிலைமையுடையாற்குச் செல்வப்பேறு மக்கட் பேறும் உண்டாகும். இவ்விரண்டுபேறும் அம்மக்கள் வழியுள்ளாற்கும அழிவின்றி நிலைத்திருக்கும். அந் நிலைமையினை யடையாராயின் அஃது அவர்க்குத் தீவினை யாற் கேடும், நல்வினையாற் பெருக்கமுமாக முன்னர் அமைத்திருக்கின்ற பயன்களைப்போக்கிஇடையில் வேறு வேறன பெரும்பிழைகள் வந்துபொருந்தும்.

(௧௨) அடக்கமுடைமை என்பது (முக்கரணங் களும் தீநெறிக்கட் செல்லாது அடங்குதலுடையனு

தல்) என்றால் இல்லறத்திலிருந்து எல்லாப்போகங்களையும் பஞ்சேந்திரியங்கட்கு விருந்தூட்டி வாழ்கின்ற காலத்திலும் மெய், மொழி, மனம் ஆகிய மூன்றனையும் அவ்விந்திரியங்களின் வழிச் செல்லவிடாமல் அடக்கினோர் எழுவகைப்பிறவியினும் நல்வினைப்பயனையடைவர். அவர் அப்பிறவிகடோறுஞ் செய்துவருகின்ற வினைகளெல்லாம் நல்வினையேயாகும். எல்லாத்துன்பங்களும் ஒழியும். தருமதேவதையும் அடுக்கும். சுவர்க்கலோகத்தினையும் அடைவாரென்பதேயாம்.

(கங) ஒழுக்கமுடைமை என்பது (தத்தம் வருணத்திற்கும் நிலைமைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல்) என்றால் தாழ்ந்த வருணத் துதித்தவராயினும் ஒழுக்கமுடையவராயின் உயர்ந்தவராவர். உயர்ந்த குலத்திற் பிறந்தாராயினும் ஒழுக்கமில்லாராயின் இழிந்தவராவர். ஆதலால் அவ்வொழுக்கத்தினை எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாகிய உயிரினுமேலாக எண்ணிப் பாதுகாத்தல்வேண்டும். அஃது தன்னை யடுத்தோர்க்குத் துணையாகச் சூழ்ந்து எல்லாச் சிறப்பினையும் இன்பத்தினையும் சுரப்பிக்கும். தன்னை வழுக்கிவிட்டோர்க்கு இழுக்கினைத் தருமென்பதேயாம்.

(கச) பிறனில் விழையாமை என்பது (காமமயக்கத்தாற் பிறனுடைய இல்லாளை விரும்பாமை) என்றால் பிறனுக்குப் பொருளாயுள்ள தன்மையையுடையாளைக் காதலித்தொழுகுகின்ற அறிவீனர்களும் வரைவின்மகளிரோடும் இழிகுல மகளிரோடுங்கூடி இன்பத்தினை நுகர்வாரும் அறமும் பொருளும் இழத்தலேயன்றி அச்சத்தாற் றுங்கருதிய இன்பத்தையும் இழக்கின்றாராதலால் பிறனில்லாளைக் காதலிக்குந் தீங்கினைக் கைவிடல் வேண்டும். இல்லாவிடின் பகை பாவம் அச்சம் குடிப்பழி என்னும் நான்கு குற்றமும் ஒருக்காலும் நீங்காவாம். எல்லாப்பெருமைகளும் அழியும். அத்தீமையினையொழிந்தோர்கள் அறம் பொருள் இன்பம் என்னு மூன்றினோடுங் கூடி வாழ்வர். ஓர் விளையாட்டால் அத

லைக் கனவின்கண் கருதுவாராயினும் எல்லாத் தீங்கும் வந்தெய்துமென்பதேயாம்.

(கரு) பொறையுடைமை என்பது (ஒருவன் தமக்கு மிகைசெய்யின் அதனைத் தாமும் அவன்கட் செய்யாது பொறுத்தலை யுடையராதல்) என்றால் ஒருவன் காரணத்தாலேனு மடமையாலேனும் தாம் வெறுக்கும்படியாகச்செய்த பிழையைப் பொறுப்பதே பேரறமாகும். தமக்குத் தீங்கு செய்தானையொறுத்தார்க்கு உண்டாவது கருதியது முடித்தேமெனத் தருக்கியிருக்கும் பொய்யின்பமாகிய அவ்வொருநாளை யின்பமே யன்று, அதனைப் பொறுத்தார்க்கு உலகு அழியுமளவு முண்டாகும் புகழும் நிறைவும் அவருக்கில்லை. அறிவுடையாரு மகிழ்ச்சிகொண்டு பொறையுடையாரைப் பொன்போலப் பொதிந்துகொள்வர். மிகைசெய்தவனைப் பகைசெய்தலால் வருவதொன்றுமில்லை யாதலால் பொறுமையை உயிர்த்துணையாக எண்ணல்வேண்டுமென்பதேயாம்.

(கசு) அழுக்காறுமை என்பது (பொறாமை செய்யாமை) என்றால் ஒருவன் தன்னெஞ்சத்தின்கண் அழுக்காறென்னும் பெரும்பிழையை யுடையானாயின் அது அவனுக்குரிய ஒழுக்கநெறிகளைக் கெடுக்கும். எல்லாப் பொருள்களையு மொழிக்கும். இம்மைக்கட்செல்வத்தை க்கெடுப்பதன்றி அவன் சுற்றத்தினர்க்கும் உண்ணப்படுவன, உடுக்கப்படுவனவின்றிக் கெடுத்து மறுமைக்கண் நரகத்திற் செலுத்திவிடும். ஆதலால் அவ்வழுக்காறென்னும் பெரும்பகையைத் தேவர்களிடத்தும் செலுத்தாதிருத்தல் வேண்டுமென்பதேயாம்.

(கஎ) வெஃகாமை என்பது (பிறர்க்குரியபொருளை வெளவக்கருதாமை) என்றால் பிறர்க்குரியன கோடல் நமக்கு அயனன்றென்று நடுவுநிலைமையின்றி அவர் நன்பொருளை ஒருவன் கரவக்கருத்துறுவனாயின் அக் கருத்து அப்பொழுதே அவனுக்குப் பல குற்றங்களைக் கொடுத்து அவன் குடியையுங் கெடச்செய்யும்; என்றும்

அழியாத பெருந்துன்பத்தினையும் விளைக்கும்; வசையுற்ற பழிச்சொற்களையும் வளர்க்கும். பழமையாயுள்ள நீரைப் புதியவெள்ளங் கொண்டுபோவதுபோல அவனுக்கு முன்னுள்ள பொருள்களும் அழிந்துபோம்.

(கஅ) புறங்கூறாமை என்பது (காணாதவழிப் பிறரை இகழ்ந்துரையாமை) என்றால் ஒருவன் எந்நாளும் அறமென்பதைக் கொன்று பாவங்களைச் செய்வானாயினும் தம்மெதிர்நின்று மாளவுரைத்தானாயினும் அவனைக்காணாதவழி இகழ்ந்துரைப்பதை மறந்தும் செய்யாதிருத்தல்வேண்டும். செய்வாராயின் சுற்றத்தினர் பிரிவார், நட்பினர் நாடார். யாவரும் நேர்நின்று வசைகூறுவர்.

(க௯) பயனில் சொல்லாமை என்பது (தமக்கும் பிறர்க்கும் அறம்பொருளின்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை) என்றால் பயனிலவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைப்பானாயின் அஃது அறிவுடையார்க்கு வெறுப்பைச் செய்வதன்றி எல்லாராலும் இகழ்ந்து நகைக்கப்படும். வெளிற்றறிவன் என்னும் பெயரையுண்டாக்கும். விழுப்பத்தினையும் மதிப்பினையு நீக்கிவிடும். அறம் முதலிய நான்கு உறுதிப் பொருள்களும் பயக்காது. ஆதலால் யாவரிடத்தும் பயனில சொல்லாமைவேண்டும்.

(உ௦) தீவினையச்சம் என்பது (பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல்) என்றால் இப்பூவுலகத்தின்கண் பலவகைகட்குந் தப்பிப்பிழைத்தல் எளிதாகும். தீவினைப்பகையானது எக்கதியிற்செல்லினும் பின்றொடர்ந்து நன்றென்பன வனைத்தையுங்கொன்று அருந்துயரைப் பலவாறளிக்கும். ஆதலாற் கொடிய தீவினையால் யாதொன்றுஞ் செய்யாதிருத்தல்வேண்டும்.

(உக) ஒப்புரவறிதல் என்பது (உலகநடையினையறிந்துசெய்தல்) என்றால் ஒருவன் தனது முயற்சி

யாற் பெருக்கிய பொருள்களையெல்லாம் ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங்குளம் நீர் நிறைந்தாற்போலும் பயன் படு மரம் ஊர்நடுவே பழுத்தாற்போலும் யாவர் மாட்டும் செலுத்தி ஒப்புரவினிற்றல்வேண்டும். அவ்வொப்புரவு செய்தலால் அவனுக்குப் பொருட்கேடு வருமாயினும் அக்கேடு தன்னை விற்றாயினும் கொள்ளுந் தகுதியை யுடையது.

(உ௨) ஈகை என்பது (வறியாரோயேற்றற்கு மாற் றாது கொடுத்தல்) என்றால் ஒருவன் தன்னிடத்தில் இரக்கவந்தானாயின் அவன் வீணிற்செல்ல யான் இது பொழுது பொருளுடையேனல்லேன் எனக் கரப்பாற் சொல்லுஞ்சொல்லை யுரையாது அவன் இரப்பினை நிரப் புதலும் யான் வறியேனென்று சொல்லும் இளிவரவை பிறர்பாற் கூறுகவென்று இரப்பினும் அதனையவ்வாறு கூறாது இரக்கமோ டீதலும் இரப்பானிலனென்று சொ ல்வதன்முன் குறிப்பறிந்தீதலும், அதுபோதாமைபற்றி ப்பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவனுரையா வகை கொடுத்தலும் எக்காலத்தும் வறியனென்னுவகை அளவின்றி யளித்தலும் ஆகிய இவ்வைவகை ஈகையும் ஒன்றுக்கொன்று மேலான புகழோடு விளங்கிநிற்கும். அன்றியும் இவன் நலமிகுந்த செல்வத்தைப்பெற்றுந் தரித்திரரைக் காக்குந் தன்மை இலன். அறமாதி புரு ஷார்த்தங்களு மிலனென்று பிறர் கூறும் பழியுரைக் கஞ்சியேனும் புகழும் பிரயோசனமும் வேண்டினேன் இரப்பானை வறியானென்று அவமதிக்காது தனது ஆக் கையையுமளித்தல்வேண்டும்.

(உ௩) புகழ்—என்பது (இல்வாழ்க்கை முதல் ஈகை ஈறாகச்சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார் க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகத்தின்கண் இகழ்ந்து இறவாதுநிற்குங் கீர்த்தி) என்றால் பூதவுடம்பிறக்கினும் பூதலமழியுங்காறும் புகழுடம்பிருக்குமாதலால் அப்புக ழுடம்போடு வறியார்க்கு வரையாதுகொடுக்கும் கொ டையால் உண்டாகின்ற செல்வத்தைப் பெற்றுவாழும்

பேற்றினையுடையவரே வான்செல்வத்தையுந் தமக்குக்
கீழாக்கும் நீர்மையையுடையார்—எனவும் கூறிய திரு
வள்ளுவநாயனார் திருவாக்கானு மெய்ம்மை யுணர்ந்து
விதித்த நல்லொழுக்கத்திற் பயிற்றலே இவ்வரிய பிறப்
பாலாய பயனும்.

## திருக்குறள்.

தன்னைத்தான் காதலனாயி னெனைத்தொன்றுந்
துன்னற்கத் தீவினைப்பால்.

என்றதனானே ஒருவன் நல்லொழுக்கத்திற் பிரவர்த்தித்
தொழுகானாயினும் தீயொழுக்கத்திற் பிரவர்த்தியாதிரு
த்தலே மிகுந்த புண்ணியமாம். தீயொழுக்கம் இன்ன
வெனவுணரவேண்டுபதின்றேயெனின் அவை நல்லொ
ழுக்கத்திற்கு மறுதலைப்பொருளேயாயினும் அவற்றிற்
சிலவற்றைக் கூறுவாம்.

கொலை, களவு, கள், காமம், பொய், குருநிந்தை,
தெய்வநிந்தை முதலியனவும் குருபத்தினி கற்புடைமக
ளிர் முதலியவரைக் கலக்க விச்சித்தலும், பிரமஹத்தி,
கோஹத்தி, ஸ்ரீ ஹத்தி, சிசுஹத்தி முதலிய செய்த
லும், இல்லத்திற் றீவைத்தல், தேவாலயம், மடம், சத்
திரம், சாவடி முதலியவற்றைச் சிதைத்தலும், ஆறு,
ஏரி, குளங், கூபம் முதலியவற்றைத் தூர்த்தலும், பூஞ்
சோலை முதலியவற்றை யழித்தலும், வருணாச்சிரம
தன்மங்களை வழுவி நிற்றலும், அபயமென்றவரை ப[illegible]
றல், தாய், தந்தை, ஆசிரியர், பெரியோர் முதலியோருக்
கிடுக்கண்செய்து உபசரியாதிருத்தலும் இன்னும் பல
வாம். விரிப்பிற் பெருகும்.

இன்னுஞ் சிலவற்றை வருஞ்செய்யுட்களா லுணர்க.

## பிரபுலிங்க லீலை

குரவர்த முறைகடக்குங் கொடியனுந் துறந்துளார்தம்
வரவெதிர் கண்டெழாத மறவனுமறிந்தான் போன்று
கரவினிலருநூல்கற்குங் கயவனும் புதியராகி
பிரவினில் வந்த நல்லோர்க் கிடங்கொடா தகற்றுவானும்.

முன்புகழ்ந் துரைத்துப்பின்னர் முறுவல்செய் திகழ்வான்று
னுந், தன்பெருங்கிளை நல்கூர்ந்து தளர்வுற வாழ்கின்றுனு
மன்புகொண்டொருவன்வைத்த வரும்பொருள் கவர்கின்று
னுந், துன்புறுந் தொழில்செய்வித்துச் சொல்பொரு ளிலை
யென்பானும்,

உறவுசெய்தறிந்த சொல்லை யுவர்த்தழிக்கூறுவானும்
பிறர்பிழைதனையேநாடிப் பிறரொடு பேசுவானு
முறைவழு வுறுகொடுஞ்சொன் முனிவிடை மொழிகுவானு
மறிவழி மனைவிசொல்லின் வழிநிற்கு மறிவிலானும்

## இராமாயணம்.

நாரங்கொண்டார் நாடுகவர்ந்தார் நடையல்லா
வாரங்கொண்டார் மற்றொருவர்க்காய் மனைவாழுந்
தாரங்கொண்டா ரென்றிவர் தம்மைத்தருமந்தா
னீருங்கண்டாய் கண்டகருய்ந்தா ரெவரையா

உய்யநிற்க பயமென்று னுயிரைத் தன்னுயிரினேம்பாக்
கையனுமொருவன்செய்த வுதவியிற் கருத்திலோனு
மையறநெறியினேக்கி மாமறை நெறியினின்ற
மெய்யினைப் பொய்யென்றுனு மீள்கிலாநரகில் வீழுவார்

## சீவகசிந்தாமணி.

மல்லன்மலையனைய மாதவரை வைதுரைக்கும்
பல்லவரேயன்றிப் பகுத்துணைப்பாவிகளு
மல்குல் விலைபகரு மாய்தொடியா ராதியா
வில்பொருதோண்மார்பா விலங்காய்ப் பிறப்பவே.

கொல்வதே கன்றிநின்றூர் கொடியவர் கடியநீரா
ரில்லையேயிம்மையல்லா லும்மையு முயிருமென்பா
ரல்லதுந்தவமுமில்லை தானமுமிழவென்பாருஞ்
செல்பவுந் நரகந்தன்னுட் டவினைத் தேர்களூர்ந்தே

## வளையாபதி.

பொய்யன்மின் புறங்கூறன்மின் யாரையும்
வையன்மின் வடிவல்லன சொல்லிநீ
ருய்யன்மி னுயிர்கொன் றுண்டுவாழுநாள்
செய்யன்மின் சிறியாரொடுதீயன.

கள்ளன்மின் களவாயினயாவையுங்
கொள்ளன்மின் கொலைகூடிவருமற
மெள்ளன்மின் னிலரென்றெண்ணி யாரையு
நள்ளன்மின் பிறர்பெண்ணொடு நண்ணன்மின்.

## திரிகடுகம்.

தன்னைவியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னேவெகுளி பெருக்கலு—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றுஞ்
செல்வமுடைக்கும் படை.

நன்றிப்பயன்றூக்கா நாணிலியுஞ் சான்றோர்முன்
மன்றிற் கொடும்பாடுரைப்பானு—நன்றின்றி
வைத்தவடைக்கலங் கொள்வானு மிம்மூவ
ரெச்சமிழந்து வாழ்வார்.

## திருக்குறள்.

தீயவைதீய பயத்தலாற்றீயவை
தீயினுமஞ்சப்படும்.

மறந்தும்பிறன்கேடு சூழற்கச் சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன்கேடு.

வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம்
பூதங்களைந்து மகத்தேநகும்.

## தசலோபாக்கியானம்.

ஓங்குபெருஞானியர்போற்பேசுவா ரவருண்மைவேடம்போலப்
பாங்குபெறவுடற்புனைவார் சற்கருமஞ்செய்வார் தம்பக்கமேகி
நீங்குகவென்றொழிப்பா ரிங்கிலைமேலாம்பிரமத்தி னிலையே
[யென்பா
ங்கிவர்கடாங்கெடுவதன்றி மற்றோரையுங்கெடுக்கு மெண்ண
[ம்பூண்டோர்.

பொன்முதல பொருளிடத்து மிச்சையற்றோர்
போற்றுறவு பூண்டுபின்னர்
வன்மைசெறிமனத்த பக்குவர்க்குபதேசமு
நவிற்றி வருவதெல்லா

நன்மைதருமுன்னோ ரெண்காரொழுகப்
பள்ளியென நயந்தோராயன்
புன்மையறப் பற்றியஃ துடனழிந்தா
னென்றகதைபோலு மாதோ.

மிக்கவறிவுடையாரைப் போன்றுமுடற்
பற்றனைத்தும் விடுத்தார்போன்றும்
தக்கவழக்கிடத்தி லுயர்திணைவினை
யஃறிணைவினையாச் சமைய்ச்சொற்றும்
தொக்கபடர்க்கைப் பெயர்முன்னிலைப் பெயராக்
கிடவுரைத்துஞ் சூழ்வதெல்லாம்
பக்குவமின் மடவோரை மயக்கியவர்கைப்
பொருளைப் பறித்தற்கன்றோ.

இதுகாறுங் கூறியவை சிவபெருமானருளிய வேதாகமோக்தசாரமாய் ஆன்றோர்களருளிய விதியாகிய நல்லொழுக்கமின்னவெனவும் நிஷேதமாகிய தீயொழுக்கமின்னவெனவு முணர்தற்பாலனவேயாம். நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டொழுகுதலால் இம்மையிற் புகழும் புண்ணியமும் மறுமையிற் பின்னர் பரமுத்திக்கேதுவாகிய ஞானமு முளவென்பதையுந் தீயொழுக்கத்தைக் கைக்கொண்டொழுகுதலால் இகழ்வும், பாவமும், துன்பமுமா நரகாட்சியுமுளவென்பதையுங் கருதி மேலாகிய நல்லொழுக்கத்தைப் பற்றிப் பயிற்றலே அரிய பெறற்பாலாய பயனாம். கூறிய புறவொழுக்கத்தினிற்றலினால் பின்பு அகவொழுக்கஞ் சித்திக்கும்.

அகவொழுக்கமாவது யாதெனின்:- மனாதி கரணங்களைத் தத்தம் வழியிற் செல்லவொட்டாது தடுத்து தம்வயப்படுத்தி உண்மை வழியிற் செலுத்துதல். புறவொழுக்கம், அகவொழுக்கம் என்னுமிரண்டும் ஒன்றற்கொன்று பரஸ்பர சம்பந்தமுடையனவேயாம். இன்னும் அகவொழுக்கத்திற்குப் புறவொழுக்கமே காரணமாகின்றது. எப்படியெனின் வித்து எவ்வளவு நலமுடையதாயினும நிலஞ் சீர்திருத்தஞ் செய்யாவிடின் தக்க பயன்றராததுபோல முன்னர் புறவொழுக்கத்திற் பயின்று பின்னர் அகவொழுக்கத்தினிற்றல் பெருமையுடைத்தாம்.

அகவொழுக்கமும்—இந்திரிய வொழுக்கம், கரண வொழுக்கம், சீவவொழுக்கம், ஆன்மவொழுக்கம் என நால்வகைப்படும். இவற்றுள் இந்திரியவொழுக்கமாவது: கடவுட்கினிய விசையோடு பிறர்பாடுந் தோத்திரங்களை யுற்றுக்கேட்டல், அபசுரங்களைக் கேளாதிருத்தல், கடுஞ் சொற்கள் செவிபுகாமனிற்றல், அசுத்தங்களைத் தீண் டாதிருத்தல், கொரோமாகப்பாராதிருத்தல், உருசிகள் மீது விருப்பின்றியிருத்தல், சுகந்தாதிகளை விரும்பாதி ருத்தல் என்னுமிவைகள் ஞானேந்திரியவொழுக்கமாம்.

இயாவரிடத்து மினிய வார்த்தையாடுதல், பொய் பேசாதிருத்தல், பிறவுயிர்கட்கு இடர் நேருங்கால் எவ் வித வுபாயத்தானும் தடைசெய்திரட்சித்தல், கடவுளா லயத்திடத்தும் பெரியோரிடத்தும் கால்வருந்தச் செல் லுதல், பிரதக்ஷணமாதியசெய்தல், பிறர்கட்குபகாரமாக ஒன்றனையீதல், மலசலபாதை அளவு மீறுமலுங் கிரமங் குறையாமலும் ஔஷதிகளாலும், ஆகார பக்குவத்தா லும் நியமப்படுத்திக்கொள்ளுதல் என்னுமிவைகள் கன் மேந்திரிய ஒழுக்கங்களாம்.

எல்லா மனிதரிடத்திலும் ஜாதி, சமயம், குலம், கோத்திரம், சூத்திரம், சாத்திரம், உயர்வு, தாழ்வு முத லிய பேதமற்று ஆன்ம ஒருமை நேயமுற்றிருத்தல் ஜீவ வொழுக்கமாம்.

சர அசரமாகிய சகல சீவர்களிடத்து இரக்கம் பொருந்திஆன்மாவேசனையாகவும் அதனுள்ளொளியே சிவமாகவுங் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் ஆன்ம வொழுக்கமாம்.

இந்நால்வகையான ஒழுக்கங்களில் இந்திரிய வொழுக்கம், கரணவொழுக்கம் என்னுமிரண்டும் தனது ண்மை யறிவானும் சத்துக்கள் சாகவாசத்தானு முயர்ச் சித்தொழுகுதல் கூடும். ஜீவ வொழுக்கம், ஆன்ம வொழுக்கமென்னுமிரண்டும் திருவருட்சகாயம் பெறற் பின்னரன்றிக் கைக்கூடற்கரியதேயாம்.

தப்பினவர் மேலாகிய பதமுத்திகட்கிட்டப்பட்டபுண்ணி யத்தலைவராய் ஆண்டுவைகி இன்பத்தினை நன்குறவனுப வித்து இறைவனுணையால் அவைகளை நீங்கி இவ்வுலகத் தின்கண் உயர்குலத்திற்றோன்றிய த்துணையானே ஆசிரி யன்பாற்கேட்டன் முதலிய நெறியான் ஞான நிட்டை யினைத்தலைக்கூடி வீடுபெறெய்துவர்.

பதிபசுபாசங்கட் கிலக்கணமியாதெனின் :—அநா தியே மலபெந்தமின்றி நித்திய ஞானனந்த சொரூபத் தையுடையவனே பதியாகிய இறைவன். அநாதியே மல பெந்தமுற்ற ஞானக்கிரியையுடையவர்களே பசுவாகிய ஆன்மாக்கள். இருளாகிய ஆணவ மாயை கன்மமாகிய பாசங்கள் மூன்றுமே அநாதியே கட்டுக்களாயுள்ளவை. ஆகையான் மலமாயாகன்மங்கள் பக்குவப்பட்ட விட த்து ஒப்பிலாத அநாதிமுத்தனுகிய கடவுளாலே அநாதி பெத்தராகிய ஆன்மாக்களை அநாதியே பந்தங்களாகிய பாசங்கள் விட்டு நீங்கும்.

எதுபோலுமெனின்:—செம்புடன் சகசமாயிருக் கும் களிம்பு தானே செம்பினைவிட்டு நீங்காது. அச் செம்பினுக்குமக்களிம்பினைத் தானே நீக்கிக்கொள்ளு மாற்றலில்லை. அக்களிம்பை யகற்றவல்ல சித்தியை யுடையவனுமுண்டு. அவனுல் களிம்பைப் போக்கவல்ல மருந்துமுளவாம்.

இன்னும் விளக்குத் தன்னைத்தானே யுண்டாக்கிக் கொள்ளவல்ல தொழில் தன்னிடத்தில்லை. அவ்விளக்குக் குக்காட்டாகிய கண்ணுக்குந்தானே யுண்டாக்கிக்கொள் ளுந்தொழில் தன்னிடத்தில்லை. ஆதலால் விளக்கென் றொரு சுடரையுண்டாக்கி கண்ணின் சோதியைத் தடுத்த இருளைநீக்கிப் பொருள்களின் விகற்பங்களையறிவிப்பவ னேடொப்பானவன் முதல்வன். கண்களோடொப்பன வுயிர்கள். விளக்கினேடொப்பாகுங் கலாதிதத்துவமாகிய சரீரம்.

அச்சரீரமானது தூலசரீரமென்றும் சூக்குமசரீரமென்றும் இருவகைப்படும். அவற்றுள் தூலசரீரம் பிருதிவிமுதல் ஆகாயமீறாகிய ஐந்து பூதங்களின் பரிணாமகாரியத்தாலுண்டாகும். ஏனைச்சூக்குமசரீரம் காலதத்துவமுதல் நிலமீறாகிய முப்பத்தொரு தத்துவத்தாலுமுண்டாகும் தத்துவங்களும் இறைவனுடைய திருவருளின் பிரேரகத்தினால் மாயையினின்று முண்டாகும்.

அவை கண்ணில்லாதவன் தன்பா லன்புடையானொருவனுதவிய கோலைப்பிடித்துக்கொண்டேனும் செல்லும்வழி கருதிச்செல்வன். அதுபோல மூலமலத்தாற் றடைப்பட்ட ஞானக்கிரியைகளையுடைய ஆன்மாக்களும் மாசங்காரகருத்தாவாகிய இறைவனருளியவித்தை முதலிய தத்துவங்களாலுண்டான அற்பவறிவு மாயாபோகங்களை நிச்சயித்துக்கொடுக்க அவைகளை நுகர்ந்து ஆக்கையிற் போக்குவரவு புரியும்.

இவற்றினுண்மை யுணருமாற்றலின்றிய உலகாயதன் முதலிய பூர்வபக்ஷிகணிற்க சித்தாந்தபட்சமியாதெனின் :—

நுண்ணியதத்துவங்களாகிய சூக்குமதேகங்களுக்குக் காரணமாய் வியாபகமாயுள்ள அசுத்தமாயைக்கும் அதற்கு மேலாகிய சுத்தமாயைக்கும் அப்பாற்பட்ட வியாபகமாயுள்ளது. நிருமலையாகிய சிவசத்தி, அச்சிவசத்திக்குச்சிவன் வியாபகன். அந்த நின்மலையாகிய சத்தி வியாப்பியம் அச்சிவசத்தி ஆன்மாக்கட்கு வியாபகி. அவ்வான்மாக்கள் அச்சிவசத்திக்கு வியாப்பியம் அவ்வான்மாக்கள் தமது மலத்தோடுகூடிய ஆன்மசத்திக்கு வியாபகர். அவ்வான்மசத்தி அவ்வான்மாக்கட்கு வியாப்பியம் ஜகத்துக்கு ஆன்மசத்தி வியாபகம். ஆன்மசத்திக்குச் சகம் வியாப்பியம்.

ஆனால் ஆன்மப் பிரகாசமும், அப்பிரகாசத்தை மறைத்து இருளுமொளி யென்னுமாறிருண்ட ஆணவ மலமும் கூடி நிற்பது ஒன்றுக்கொன்றேற்றக்குறைவின்றி

பிரண்டு மொத்த வியாபகமாயிருக்கும். அவ்வான்மாவி னுடைய ஞானக்கிரியைகள் மலத்தாற்றடைப்பட்டால் அதிக விருத்தியுடையதல்ல. அதனைத் தடுக்கும் ஆணவ மலமும் நூனவிருத்தியை யுடையதல்ல. ஆகையால் ஆன்மசத்திக்கு வியாப்பியமாகாது. ஆனால் ஆன்ம சத்திக்கு ஆணவத்துக்கும் சமவியாத்தி எப்படி எனின் கண்ணிடத்துண்டாகிய சோதியும், இருளின் பிரகாச மும் துல்லியமாயிருக்கும். எதுபோலுமெனின் கண் ணொளியானது இருள் மேலிட்ட காலத்து ஒளி மறை ந்து நிற்கும். ஒளி மேலிட்டகாலத்து இருண் மறை ந்து நிற்கும். இதுபோல சிவன் மாயாகாரியமான தநு வாதிகளை ஆன்மாவுக்குக் கூட்டியகாலத்தும் ஆணவச த்தி மறைந்தவிடத்தும் ஆன்மசத்தி சற்றே பிரகாசமா யிருக்கும். மலமேலிட்டகாலத்து ஆன்மசத்தி மறைந் திருக்குமெனவறிக.

ஆனால் மேலாகிய சிவனும் அவனுடைய மேலாய ஞானசத்தியும் எல்லா வுயிர்களிடத்தும் கலந்திருக்கவும் இருளாகிய ஆணவம் பொருந்துவதெங்ஙன மெனின் வெம்மையுடைய அக்கினி தண்மையுடைய மாத்தின் அடிதொடுத்து முடிவரை வியாபித்திருப்பினும் அப்பாசு மரங்கள் வெந்தன வல்ல. முதிர்ந்து தனது பருவம் வந்த விடத்து கம்மிடத்துண்டாகிய தழலை யுதிப்பிக்கும். அவை தீக்கடைக் கோலாகிய கருவியும் அதுகொண்டு கடையுங் கருத்தாவு முதலாயின பழுதறவந்து பொரு ந்த அவ்விடத்து அழலுண்டாய் அம்மரங்கள் வெந்து விழுதலைச் செய்யும். அதுபோல ஆணவமும் தனக்குப் பருவம் வந்த விடத்து இறைவன திருவருளால் தனது வலிகெட்டு நிற்கும். அவை முதல்வனது சத்திமலபரி பாகம் வாராத ஆன்மாக்களிடத்துப் பசுமரத்தக்கினி போல் பிரகாசமின்றியிருக்கும். மலபரிபாகம் வந்த ஆன்மாக்களிடத்துப் பிரகாசித்து மலநாசஞ் செய்து ஆன்மப் பிரகாசத்தை யுண்டாக்கி இரட்சிக்குமென்க.

---

*ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிட வொன்றொளிக்கும், என்பதனானுணர்க.

உதையகாலத்தில் சூரியப் பிரகாசத்தின் முன்னர் இருள் நாசமடையாமல் மறைந்து நின்றதுபோல முதல்வனுடைய அநுக்கிரகத்தினால் ஆன்மாக்கள் பக்குவமாகிய ஆணவமலம் அதனுக்குப்பருவம்வந்தவாறே நாசமடையாது. உயிரின் ஞானக்கிரியைகளைத் தடுக்கும். வலிகெடும் மாயாகாரியங்களும் நாசமடைந்தனவுமல்லாமல் நிலைபெற்று நின்றனவுமல்லாமல் உறைந்திருந்த நெய் உருக்கினபோது கனங்குறைந்து நெய் கெடாதிருக்கின்றனபோல முத்திநிலையிலும் இந்த மலங்கள் கெடாமலும் ஆன்மாக்களைப் பந்தியாமலும் நிற்கும்.

மேலாகிய சிவன்முதல் கூறிய மலங்கள்வரை ஒன்றுக்கொன்று சூக்குமமாயிருக்கும். அவை சிவன் சிவசத்திக்குச் சூக்குமமாயிருப்பன். அச்சிவனுக்குச் சிவசத்திதூலமாயிருக்கும். அச்சிவசத்திஆன்மாக்களுக்குச் சூக்குமமாயிருக்கும் அச்சத்திக்கு ஆன்மாக்கள் அதிதூலமாயிருக்கும். அந்த ஆன்மாக்கள் தனது சத்திக்குச சூக்குமமாயிருக்கும். அந்த ஆன்மசத்தி ஆன்மாவுக்குத் தூலமாயிருக்கும. அந்தஆன்மசத்தி மும்மலங்களுக்குஞ் சூக்குமமாயிருக்கும். அந்த மும்மலங்களும் அந்த ஆன்மசத்திக்குத் தூலமாயிருக்கும்.

இவற்றின் ஆணவமலம் ஆன்மாக்களுக்குப் பெரிதாகிய பிணி. அப்பிணிக்கு மருந்தாகி மாயாகாரியங்களாகிய தனுகரணாதிகளும் அதனோடு அன்றே உள்ளது. அம்மருந்தினை யுதவிப் பிணிதீர்ப்பான் நின்மலனாகிய சிவனே. மருந்து தானேயறிந்தவந்து அடையாதெனவும் பெரிதாகிய ஆணவ நோயையுடையராகிய ஆன்மாக்கள் தாமே தம்பெருநோயைப் போக்கிக்கொள்ளும் மருந்தறிந்தாரல்லரெனவும் வசனித்திருத்தலால் அப்பிணி நீக்கம் வந்தடைவதன்று. பண்டிதனு நோயுடையானெனின் அந்நோயை நீக்கினனொருவ பண்டிதனுளனென இம்முறையே ஒருவன் பிணியை மாற்றுவானொருவனுளனாகத் தொன்றுதொட்டு அநவத்தையென்னுங் குற்றம் வரும்; ஆதலால் அநாதியே மலத்தினின்றும் விடப்பட

டவனை உயிர்களடைந்த ஆணவமென்னும் பிணியை நீக்கும் பண்டிதனாவான். இதற்கு இன்னும் ஆன்றோரருளியவற்றையுங் காண்க.

### சிவஞான வள்ளலார்.

விந்துமோகினி மானெனவிரிந்த
தத்துவக்காட்டிற் றனித்திடுமுயிரை
ஆணவவேங்கை யொருபாலடர்ப்ப
மாயைத்தடாவடி யொருபான்மயக்க
காமியக்கடமா வொருபாற்கறுவ
இருவினைமலைப்பாம் பொருபாலிழுக்க
ஆசையாமண்லை யொருபாலறைய
குலமெனுஞமலி யொருசார்குரைப்பக்
கல்விக்கான்யா றொருசார்கவர
சமயச்சூறை யொருசார்தாக்க
அவாவெனும்டுதீ அறிவைக்கொளுவ
மாயாவாத வனசரர்வெருட்ட
இன்னணமாவி இடருறுங்காலை
யுயிரிடையொளிபுக் கிருந்தவொருவர்த்
தாயினுஞ்சாலத் தயாநிதியிரங்கி
கட்கடைவாளாற் காடறமாற்றலும்
வுட்கினயாவு முயிர்பிழைத்தன்றே.

எல்லாமுநானேகா ணெனைவிடவேறில்லை
யெனுமலத்தாலார்ப்புண்டிங் கேந்திழைபொன்பூமி
நில்லாதபொருளெல்லாம் நிலையெனவேகருதி
நின்மலனைத் தனைவினையை நினையாதுமயக்கும்
பொல்லாத புலன்வழியிற் றிரிந்துதடுமாறி
புகழிகழா நல்வினையுந் தீவினைப்பொருந்தி
யொல்லாத யோனிதொறும் பிறந்துபிறந்துழல்வார்
உமைபாகனருள்கிடைக்கி னிரண்டினையுமொழிப்பர்.

### திருக்குறள்.

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிது.

வேண்டுதல் வேண்டாமை யிலானடிசேர்ந்தக்
கியாண்டு மிடும்பையில.

**சிவஞான சித்தியார்.**

அருளினா லுரைத்தநூலின் வழிவாரா தனைமருஞ்செய்வி
னிருளுலா நிரயத்துன்பத் திட்டிரும்பாவந் தீர்ப்பன்
பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புணியந்தீர்ப்பன்
மருளுலா மலங்கடீர்க்கு மருந்திவை வைத்தியநாதன்.

இதனால் ஆன்மாக்கட்குற்ற ஆணவாதிமலங்களைப் போக்கி அரியமுத்தியை அடைவிக்குமாறு கருணையினாலே வேதாகமங்களை யருளிச்செய்து அதன் விதிநெறி யொழுகுவோர்க்கு மேலாகிய சுவர்க்கமுதலிய பதங்களின் வைத்து அவை நீக்கி அரியமுத்தியளிப்பனெனவும் நிடேதநெறி யொழுகுவோர்க்கு கொடிய நரகாதிகளின் வைத்து அவைநீக்கி ஜனனமரணங்களை யளிப்பனெனவும் விளங்குகின்றன. அரியமனிதப்பிறப்பைப் பெறுதற்குப் பயன் துன்பத்திற்கும் நரகத்திற்கும் ஏதுவாகிய நிடேதநெறியைநீங்கி இன்பத்திற்கும்முத்திக்கும் ஏதுவாய விதிநெறி யொழுகுதலன்றோ ஆன்மாக்கள்கடமை. ஆதலால் இந்நூலின்கணுள்ள சன்மார்க்கமென்னும் நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டொழுகியும் பின் சன்மார்க்கம் என்னும் ஞானத்தினின்று பதி, பசு, பாசவிலக்கணங்களை யுணர்ந்தும் கடவுளை வழிபட்டுய்வோமாக. சுபம்.

சன்மார்க்கவியல்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவடிகளே சரணம்.

எட்வர்ட் பிரஸ்—திருவாரூர்.

ஓம்

ஸ்ரீ [illegible]

# தேவீமாஹாத்ம்யம்

மஹாமந்திரசாஸ்திரம்

முதல் முதல் தமிழில் வெளிவருவது

ஸ்ரீவேதவ்யாஸ பகவான் அருளிச்செய்த மார்க்கண்டேய புராணத்தில் அடங்கியிருப்பது இத்தேவீ மஹாத்மியம். இதற்கு 'ஸப்தசதீ' என்று மந்திரசாஸ்திரங்கள் பாராயணம் முதலியவைகளால் [illegible] உபாஸிக்கப்பட்டு வருகின்றது. இதில் ஒவ்வொரு அக்ஷரமும் ஒவ்வொரு மந்திரமென்று கூறுகின்றார்கள். இதை [illegible] இதில் மஹாதேவியானவள் [illegible] [illegible] தேவர்கள் [illegible] [illegible]

[illegible]

[illegible]

[illegible]

# தேவீ உபநிஷத் தீபிகை

(மஹா மந்திர சாஸ்திரம்)

முதல் பாகம்

இது

பலாஞூர் - பண்டித பிரும்மஸ்ரீ ஸ்ரீமத்
காமேச்வர சாஸ்திரிகளவர்களின் குமாரரும் சிஷ்யரும்
இதிஹாஸ புராண உபந்யாசகரும்
சென்னை
அடையாறு லைப்ரரியில் தலைமை ஸம்ஸ்கிருத பண்டிதருமான
ந. இராமநாத சாஸ்திரிகளால்
ஸம்ஸ்கிருதத்திலிருந்து
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

காப்பிரைட்
ரிஜிஸ்டர்ட்

சென்னை
[illegible]

விலை அணா 4,
தபால்கூலி வேறு

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீ

# முகவுரை

ஸ்ரீ பரதேவதையான மஹாதேவியின் அனுக்ரஹத்தால் பூர்த்தியான இந்த கிரந்தத்திற்கு 'தேவீ உபநிஷத் தீபிகை' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இதில் அஷ்டோத்தரசத (நூற்றெட்டு) உபநிஷத்துக்களில் தேவீ விஷயமாயுள்ள நான்கு உபநிஷத்துகளும் வேறொரு உபநிஷத்தும் ஸம்ஸ்கிருதத்திலிருந்து நேராகத் தமிழில் மொழிபெயர்த்து சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவையாவன :—


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | த்ரிபுரோபநிஷத் | 1 |
| 2. | தேவ்யுபநிஷத் | 10 |
| 3. | பஹ்வ்ருசோபநிஷத் | 19 |
| 4. | பாவனோபநிஷத் | 24 |
| 5. | ஸ்ரீசக்ரோபநிஷத் | 30 |


இதில் த்ரிபுரோபநிஷத்தானது மூன்று விதமான நமது சரீரத்திலும் இன்னும் மும்மூன்றாயுள்ள ஸகலத்திலும் மஹாதேவியின் அதிஷ்டானத்தையும் சித்சக்தியான தேவியே ஸகலத்திற்கும் காரணமென்றும், தேவீ உபநிஷத்தானது தேவியின் மஹிமையையும் காயத்ரீயையும் மஹாமந்திரமான ஆதிமூலவித்தையையும் இன்னும் தேவியின் அவதாரங்களான புவனேச்வரீ முதலியவர்களின் மந்திர விசேஷங்களையும், பஹ்வ்ருசோபநிஷத்தானது வேதஸ்வரூபமான தேவியை அவைகள் ஸ்தோத்திரம் செய்து தேவியின் மாஹாத்ம்யத்தை அவைகள் விளக்கிக் காட்டும் ரீதியையும் அப்படியே பாவனோபநிஷத்தானது நமது தேஹத்தின் ஸ்வரூபத்தையும் அதுவே ஸ்ரீசக்ரம் என்னும் பாவனையும் அது ஸம்பந்தமான விருத்திகளெல்லாம்

ஸ்ரீசக்ரத்திலுள்ள பரிவார தேவதைகளுடன் கூடின ஸ்ரீகாமேச்வரீஸஹித ஸ்ரீ காமேச்வரனுடைய ஆராதனங்களென்றும் அவ்விதமே நாம் செய்யும் பூஜோபசாரங்களெல்லாம் தத்துவார்த்தத்தோடு கூடியவையென்று பாவனை செய்யவேண்டுமென்றும் நன்கு விளக்கிக்காட்டுகின்றன. தவிர கடைசியிலுள்ள ஸ்ரீசக்ரோபநிஷத்தானது நூற்றெட்டில் சேராவிட்டாலும் மிக ப்ரஸித்தமாகவே கேழ்விப்படுகின்றது. இது ஸ்ரீசக்ரத்தில் ஸ்ரீ காமேச்வரீயோடு ஸ்ரீ காமேச்வரன் வீற்றிருப்பதையும் அவர்களை பூஜிக்கும் விதத்தையும் உலகில் சக்தியில்லாவிட்டால் ஒன்றுமே யில்லையென்றும் நன்கு உபதேசிக்கின்றது.

இவ்விதம் இவ்வுபநிஷத்துகள் நமக்கு ஸகல லோக மாதாவான மஹாதேவியின் மாஹாத்மியத்தையும் மஹாமந்திரங்களையும் உபாஸனாக்ரமத்தையும் நன்ருய் உபதேசிப்பதால் இவைகள் ஸம்ஸ்கிருதம் அறியாதவர்களுக்கும் மிகவும் பயன்படவேண்டுமென்று இவைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளிப்படுத்தலானேன். ஆதலால் இவைகளை புருஷர்கள் மாத்திரமல்லாமல் ஸ்திரீகளுங்கூட மிகுந்த பக்தி சிரத்தையோடு தினந்தோறும் பாராயணம் செய்து வந்தால் ஸந்தானம் முதலிய சகல ஸௌபாக்யங்களையும் நிச்சயமாய்ப் பெறுவார்கள். இவ்வாறு தினந்தோறும் பாராயணம் செய்ய அநுகூலப்படாவிட்டாலும் தேவீ உபநிஷத்தின் கடைசியில் கூறியிருக்கிறபடி செவ்வாய்க் கிழமைகளிலும் உலகில் பிரஸித்தமான வெள்ளிக்கிழமைகளிலும் ஸ்ரீ மஹாதேவியை ஆராதித்து இதைப் பாராயணம்செய்து வந்தால் ஸ்ரீ மஹாதேவியின் அநுக்ரஹத்தால் நமக்கு ஆயுள் ஆரோக்யம் ஐச்வரியம் முதலிய ஸகல க்ஷேமங்களும் அவசியம் உண்டாகும். சுபமஸ்து.

பலாசூர் - பண்டித - நா. ராமநாத சாஸ்திரி.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

# தேவி உபநிஷத் தீபிகை

## ருக்வேதத்தில்

# த்ரிபுரோபநிஷத்

## வாங்மே மநஸி—சாந்தி:

### சித்சக்தியின் ஸ்வரூபம்

இவ்வுலகை ரக்ஷிக்கும் ஸ்ரீசக்ரத்தில் அடங்கியிருக்கும் அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள அக்ஷரங்களையும் ஜீவாத்மாவினால் விகல்பிக்கப்பட்ட வ்யஷ்டிஸமஷ்டிபேதங்களோடு கூடின ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களாகிய மூன்று புரங்களையும் தேவயானம் பித்ருயானம் என்னும் பேதத்துடனுவது கர்ம காண்டம் உபாஸனு காண்டம் ஞானகாண்டம் என்னும் பேதத்துடனுவது அல்லது ஞானம் விஞ்ஞானம் ஸம்யக்ஞானம் என்னும் பேதத்துடனுவது கூடிய மூன்று மார்க்கங்களையும் ஜீவேசப்ரத்யக்ஸ்வரூபமாய் அதிஷ்

டானம் செய்துகொண்டு பிரும்மாதி தேவர்களுக்கும் ஸ்ருஷ்டி முதலிய ஸாமர்த்திய ரூபமான மஹிமையா யிருந்துகொண்டு கிழத்தன மற்றதாயும் மிகவும் மகத் தாயும் பிராசீனமாயுமிருக்கின்ற சித்சக்தியானது ஸர் வோத்கிருஷ்டமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சித்சக்தியை ஆச்ரயித்துக்கொண்டு மஹாத்ரிபுரஸுந்தரீ முதலிய ஒன்பது யோனிதேவதை களும் ஸர்வானந்தமயம் முதலிய ஒன்பதுசக்கிரங்களும் யமம் நியமம் முதலிய ஒன்பது யோகங்களும் அப் படியே ஒன்பது சக்ரங்களில் வசிக்கின்ற யோகினீ தேவதைகளும் தேவதாதாரங்களான ஒன்பது பூமி களின் சக்ராதி நாதர்களும் துவாரபால தேவதைகளும் காமேச்வரீ முதலிய பத்மைகளும் யோனி முதலிய ஒன்பது முத்ரைகளும் பிரகாசிக்கின்றன.

## சித்சக்தியைக் குறித்துப் பிரார்த்தனை

இவ்வித சக்தியானது முதலில் பிரதானமாயும் ஒன்றாயு மிருந்தது. அதுவே பத்ராதிகளான ஒன்ப தாயிற்று. பிறகு ஞானேந்திரியம் கர்மேந்திரியம் பிராணபஞ்சகம் அந்தக்கரணசதுஷ்டயம் என்னும் பேதத்தால் பத்தொன்பது தத்துவ சமூகத்திலிருந்து உண்டான சக்திகளாகவும் இதுவே ஆயிற்று. அப் படியே முற்கூறிய கர்மேந்திரியம் ஞானேந்திரியம் பிராணபஞ்சகம் அந்தக்கரணசதுஷ்டயம் இவைக ளுடன் கூடின பஞ்ச பூதங்களும் உபபிராணனகளு மாகிய இருபத்தொன்பது தத்துவ சமூகங்களிலிருந்து உண்டான சக்திகளின் ஸ்வரூபமாயும் இதுவே யிருக்

கின்றது. அப்படியே பிரஸித்தமான நாற்பது சக்திகளின் ஸ்வரூபமாயும் இதுவே யிருக்கின்றது. பிறகு நன்ருய் விருத்தியடைந்த ஞானக் கிரியா இச்சாரூபமான ஞானம் விஞ்ஞானம் ஸம்யக்ஞானம் என்னும் மூன்று சக்திகளும் தமது குழந்தைகளைக் குறித்து எப்போதும் க்ஷேமத்தையே கோரிக்கொண்டிருக்கின்ற தாயார்கள் போல பிரும்மபதவியையடைய முயற்சிசெய்துகொண்டிருக்கின்ற என்னை வியாபித்துக்கொண்டிருக்கட்டும். (அதாவது அஜடமான ஞானகிரியா இச்சா சக்திகள் என்னிடம் பிரவேசிக்கட்டும் என்பது கருத்து). வெளிப்படையான பிரபஞ்சத்தை விறகாய் ஆச்ரயித்துக் கொண்டு அதற்குமேல் ஜ்வலிக்கின்ற பிரத்யக்ஜோதி (ஞானரூபமான ஒளி)யானது அஞ்ஞான விருத்தி உதயமாவதற்கு முன்னுலேயே எப்போதும் என்னிடம் பிரகாசித்துக்கொண்டிருக்கட்டும். அதற்கு எதிரியான தமோகுணமும் ரஜோகுணமும தன்னுல் அடையப்பட்ட அஞ்ஞான விருத்தியை விட்டுவிட்டு சாச்வதமான பிரும்மம் ஆகட்டும். இவ்விதம் நானே பிரும்மமென்றும் என்னைவிட வேறொன்றுமில்லையென்றும் மேலான ஆனந்தத்தை யுண்டாக்குகின்ற பரமாத்மாவாகிய சந்திரனுடைய ஜோதியைவிட வேருக வேறொன்றுமில்லையென்றும் அதுவே நானுகவிருக்கின்றேன் என்றும் பிரும்ம பாவத்தை யடைந்த என்னை இந்த விருத்திகள் அலங்கரிக்கின்றன. (அவைகளும் பிரும்மத்தினிடம் லயிக்கின்றன. ஆதலால் பரமாத்மா அத்வைதரூபமாய் மிஞ்ஜி விடுகின்றது என்பது கருத்து.)

## காமேச்வரனுடைய ஸ்வரூபம்

ஜடமான ஞான கிரியா இச்சாசக்திகளான மூன்று ரேகைகளும் ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி துரீயங் களின் ஸ்தானங்களும் கண் கழுத்து ஹிருதயம் ஸஹஸ்ராரசக்ரம் ஆகிய ஸ்தானங்களும் பூர்புவஸ் ஸுவர் என்னும் மூன்று லோகங்களும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் மூன்று குணங்களும் இவைகளில் ஒவ் வொன்றும் மூன்றுவிதமாய் ஆகி இவைகளும், இன்னும் மும்மூன்றாய் உள்ள ஸகலமானவைகளும் எவளை ஆச் ரயித்து இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட மேலே கூறப்பட்ட ரேகை உலகம், குணம் என்று பெயருள்ள காமேச்வரீ முதலிய மூன்று சக்திகளும், பிராஹ்மீ முதலிய தனது சக்ராவரண தேவதைகளைக் காட்டி லும் பிரதானமானவைகள். இவ்விதம் அங்கங்களோடு கூடின ஆவரண தேவதைகளைத் தெரிந்து கொண்டு ஸ்ரீசக்ரத்தைப் பூஜிப்பவர்கள் மஹாதேவியின் ஸ்தான மான திரிபுரத்தை யடைகின்றார்கள். மந்திரங்களால் பரிபூர்ணமான ஸ்ரீசக்கிரத்தில் தனது பிரியையாயும் மத்யத்ரிகோண ரூபிணியாயும் உள்ள சித்சக்தியோடு கூட பிந்து ரூபியான காமேச்வரன் ஸர்வோத்கிருஷ்ட மாய் விளங்கிக்கொண்டிருக்கின்றார்.

அவர்களின் பரிவாரங்களான ஆவரண தேவ தைகளாகிய மதந்திகா, மாநிநீ, மங்களா, ஸுபகா, ஸுந்தரீ, ஸித்திமத்தா, லஜ்ஜா, மதி, துஷ்டி, இஷ்டா, புஷ்டா, லக்ஷ்மீ, உமா, லலிதா, லாலபந்தீ என்னும் இவர்கள் பஞ்சதச (பதினைந்து) நித்யைகள் என்று கூறப்படுகின்றார்கள்.

## சிவகாமஸுந்தரீவித்தையின் பலன்

இவ்விதம் பரிவார தேவதைகளால் ஸேவிக்கப்பட்ட சித்சக்தியானவள் அமிர்தத்திற் கொப்பான நல்ல தயையோடு கூடினவளாயும் ஸந்தோஷத்துடன் கூடினவளாயும் பரமசிவனுடன் உல்லாஸமாய் வீற்றிருக்கின்றாள். இவ்விதமுள்ள சிவகாமசுந்தரியின் ஸ்வரூபத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டவர்கள் இவ்வித ஞானம் உண்டானவுடனேயே இவளுடைய திவ்ய ஸ்தானத்தை யடைகின்றார்கள். இவ்விதம் அறிந்து கொள்ள சக்தியற்றவர்கள் நிஷ்காம புத்தியுடன் ஜீவித காலம் உள்ளவரை ஸ்ரீசக்ரத்தை தமது வர்ணாச்ரமங்களுக்குத் தகுந்தபடி பால் முதலியவைகளால் பூஜித்து திருப்தி செய்துகொண்டு வந்தால் பிறகு சரீரம் போனவுடன் பெரிய ஸ்வர்க்கத்தின் சமீபத்திலுள்ள ஸ்ரீபுரத்தில் ஞானப்யாஸம் செய்துகொண்டு பிரளயகாலம்வரை வஸிக்கின்றார்கள். பிறகு த்ரிபுரம என்னும் சிரேஷ்டமான ஸ்தானத்தை யடைந்து கிருதகிருத்தியர்களாகின்றார்கள்.

## ஆதிமூல வித்யா

மூலம்—காமோ யோநி: காமகலா வஜ்ரபாணி: குஹாஹஸா மாதரிச்வாப்ரமிந்த்ர:| புநர்குஹா ஸகலா மாயயாச புரூச்யேஷா விச்வமாதா திவித்யா ||

இதனால் ஆதிமூல வித்தை என்னும் மூலமந்திரம் உபதேசிக்கப் படுகின்றது. இது தேவ்யுபநிஷத்திலும் உபதேசிக்கப்பட்டிருக்கின்றது.

## விரக்தர்கள் ஆதிவித்யையை அறிவதின் பலன்

இந்த ஆதிமூல வித்யை யென்னும் மஹாமந்திரத்தின் ஆருவது அக்ஷரமாகிய சிவபீஜத்தையும் ஏழாவது அக்ஷரமாகிய சக்தி பீஜத்தையும் வஹ்நிஸாரதி யென்னும் காமேச பீஜத்தையும் ஆக மூலத்ரிகமென்னும் மூன்று அக்ஷரங்களையும் வெகு ரஹஸ்யமாய் ஜபம் செய்கிறவர்கள், ஸ்தோத்திரம் செய்யத்தகுந்தவராயும் ஸர்வஜ்ஞராயும் உலகங்களை யெல்லாம் ஸ்ருஷ்டி செய்கிறவராயுமிருக்கின்ற ஸ்ரீகாமேச்வரனை ஸ்தோத்திரம் செய்துகொண்டு கைவல்யத்தை யடைகின்றார்கள். (விதேஹ முக்தர்களாகின்றார்கள் என்பது கருத்து.)

## தேவியை யறிவதன் பலன்

பக்தர்களை யனுக்ரஹிப்பதற்காகவே சரீரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் லோகமாதாவின் சரீரத்தை நிஷ்காமமான புத்தியோடு த்யானம் செய்து தன் தனிஷ்டப்படி பலன்களை யடைகின்றான் என்பதால் அந்த மாதாவானவள் எவ்வித ரூபத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறாள் என்றால் அந்த லோகமாதாவானவள் த்ரிபுரத்தையும் ஆதிவித்தையின் ஸாரமான ரூபத்தையும் ஸௌர்ய மண்டல ரூபத்தையும் உயிரெழுத்துக்களுள் மத்தியமான அக்ஷரங்களின் ரூபத்தையும் தரிக்கின்றாள். அப்படியே ஒரு நிமிஷம் முதல் கல்பாந்தம் வரையிலுள்ள கால ரூபத்தையும் பதினைந்து திதிகளின் ரூபத்தையும் வாரம் நக்ஷத்திரங்கள் இவைகளின் ரூபத்தையும் தரிக்கின்றாள். நித்தியா தேவதைகளின் ரூபத்தை யடைந்து பதினைந்து திதிகளுடன்

கூட பதினாருவது திதியாகிய காமேச்வரனுடைய ரூபத்தையும் தரிக்கின்ருள். இவ்வாறு தேவதையின் சரீரங்களில் எங்கெங்கே மனதானது இச்சைப் படுகின்றதோ, அதனைப் பரதேவதா புத்தியோடும் நிஷ்காம சிந்தனையோடும் உபாஸிக்கின்றவன் சித்த சுத்தியால் நல்ல ஞானத்தை யடைந்து கிருதார்த்தனு கின்ருன்.

## மந்தாதிகாரிகளுக்கு தியான விசேஷம்

இல்லாவிட்டால் சந்திர சூரியாதி மண்டலங்களி லிருந்து உத்பத்தியானவளாயும் முகம் ஸ்தனம் முத லிய ஸர்வாங்கங்களிலும் பரிபூர்ண ஸௌந்தர்யமுள்ள வளாயும் ஸ்தூலம் ஸூக்ஷ்மம் காரணம் என்னும் மூன்று சரீரங்களிலும் வியாபித்திருக்கிறவளாயும் காமேச்வரனுடைய கலாரூபிணியாயும் பக்தர்களை யனுக்ரஹிப்பதற்காகத் தனது இஷ்டப்படி ரூபங்களை யெடுக்கின்றவளாயும் இருக்கின்ற சித்சக்தியைத் தியா னம் செய்கின்ற மனிதன் தனது இஷ்ட ஸித்திகளை யெல்லாம் அடைந்து இஷ்டமான ரூபங்களை யடையும் சக்தியுள்ளவனுகின்ருன்.

## அதமாதிகாரிகளின் அனுஷ்டானமும் அதன் பலனும்

இல்லாவிட்டால் நன்ருக பாகம்செய்யப்பட்ட மத் ஸ்யத்தையும் ஆட்டின் மாம்ஸத்தையும் மத்யம் முதலி யவைகளையும் அன்னங்களையும் மிகவும் சுந்தமான யோனிகளையும் மஹாதேவிக்கு நிவேதனம் செய்கிறவ னும் பிறகு இவைகளை உபயோகப் படுத்துகிறவனும் இவ்வுலகில் ஸகல ஸித்திகளையும் அடைகின்ருன்.

இவ்விதம் காம்யமான உபாஸனைகூட செய்யாமல் உலகில் இது எனக்கு வேண்டும் இது எனக்கு வேண்டாம் என்று எப்போதும் ஆசைப்பட்டுக்கொண்டு அலைந்து திரியும் மூடர்களை, வெண்ணிறமுள்ள ஸரஸ்வதியோடும் லோகமாதாவான லக்ஷ்மீதேவியோடும் கூடிய ஆதி சக்தியாயும் உலகங்களை ஸம்ஹாரம் செய்யும் சித்சக்தியாயும் இருக்கின்ற கௌரியான மஹாதேவியானவள் அஞ்ஞானமாகின்ற பாசங்களால் மூச்சுவிட முடியாதபடி நன்றாய்க்கட்டி ஸம்ஸாரமாகிய பெருங் கடலின் பெரிய சுழலில் தள்ளி விடுகின்றாள். மறுபடியும் அவர்கள் வெளியில் வராதபடி வில்லினாலும் ஐந்து அம்புகளினாலும் அடிக்கின்றாள். அவர்களை ஒருக்காலும் ஞானவான்களாய்ச்செய்வதேயில்லை.

## நிஷ்காமமாய் உபாஸிக்கின்றவன் பிரும்மமாகிறான்

சித்சக்தியான திரிபுராதேவியும் ஷட்குண ஐச்வரியங்களுடன் கூடிய பகவத் ஸ்வரூபமான காமேச்வரனும் ஆகிய இவ்விருவரும் சமமாய் பிரதானமானவர்களாயும் ஸமமாய் ஸத்வத்தை யுடையவர்களாயும் ஸமமாய் தயாமயமான சரீரத்தையுடையவர்களாயும் ஆகி, இவ்வுலகில் ஸமஸ்தமான ஸௌபாக்யங்களையும் கொடுக்கிறார்கள். அவர்களுக்குள் ஆதி சக்தியாயும் லோகமாதாவாயும் இருக்கின்ற சித்சக்தியாகிய மஹாதேவியானவள் மிகவும் தயாமயமான சரீர முடையவளாகி நிஷ்காமமான புத்தியோடு தனது பக்தன் ஸமர்ப்பிக்கும் ஹவிஸ்ஸினால் மிகவும் திருப்தியையடைந்து தனது பக்தர்களுக்கு அனுக்ரஹம்

செய்வதற்காக அவர்களின் விசேஷமாகிய ஆவரணத்தை (திரையை) நீக்கிவிட்டுப் பரமசிவனோடு தானும் அந்த பக்தர்கள்மயமாய் ஆகி விடுகின்றாள். பிறகு இந்த பக்தனும் இந்த பிரபஞ்சத்தில் வெறும் புள்ளவனாகி ஸமஸ்த உலகங்களையும் சிருஷ்டிக்கின்றவனும் காப்பாற்றுகின்றவனும் ஸம்ஹாரம் செய்கின்றவனும் பிரம்மா விஷ்ணு மஹேச்வர ரூபியாயும் ஆகிவிடுகின்றான். பிறகு விச்வரூபியான பிரும்மமாயும் ஆகின்றான். அக்ஷயமாயும் ஞானரூபியாயும் சித் சக்தியாயும் உள்ள இந்த மஹாதேவியானவள் ருக்வேதமே. யஜுர்வேதமே. மேலான ஸாமவேதமே. அப்படியே அதர்வ வேதமே. அன்றியும் மற்றுமுள்ள அறுபத்துநான்கு கலாரூபமான வித்தையே. இந்த தேவியை மேலான வாக்குகளால் நன்கு ஸ்தோத்திரம் செய்யும் இந்த மஹா உபநிஷத்தானது பிரும்மத்தையே பிரதிபாதனம் செய்கின்ற (விளக்கிக் காட்டுகின்ற) பிரம்மவித்தையாகி நன்கு விளங்கிக்கொண்டிருக்கின்றது.

இவ்விதமான மஹாதேவியின் சரீரம் எப்படியிருக்கின்றதென்றால் ஓங்கார ரூபமாயும் (சித்ஸ்வரூபமாயும்) ஹ்ரீம்கார ரூபமாயும் (சக்திஸ்வரூபமாயும்) இரண்டும் சேர்ந்து ஓம் ஹ்ரீம் ரூபமாய், சித்சக்தி ரூபமாய் எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. சுபமஸ்து.

த்ரிபுரோபநிஷத் முற்றிற்று.

ஸ்ரீ :

ஸ்ரீ மஹாதேவ்யை நம :

அதர்வணவேதத்தில்

# தேவ்யுபநிஷத்

## (தேவீ—உபநிஷத்)

பத்ரம் கர்ணேபி:—சாந்தி :

### சித்சக்தி எல்லாவற்றிற்கும் ஆத்மாவாயிருப்பதால் பிரும்மமென்பது

ஸமஸ்தமான தேவர்களும் மஹாதேவியை ஸ்தோத்திரம் செய்து ஹே மஹாதேவி! நீர் யார்? என்று கேட்டார்கள். அதற்கு மஹாதேவி பதில் கூறியதாவது:—'நான் பிரும்மஸ்வரூபமானவள். பிரகிருதி புருஷரூபமானதாயும் சூன்யமும் அசூன்யமுமாகிய இவ்வுலகம் என்னிடமிருந்தே உத்பத்தியாகின்றது. ஆனந்தமும் நானே; ஆனந்தமற்றதும் நானே. நல்ல ஞானமும் நானே; அஞ்ஞானமும் நானே. பிரம்மமும் நானே; பிரும்மமல்லாததும் நானே யென்றறிய வேண்டும். நானே பஞ்ச பூதங்களும், பஞ்ச பூதங்களல்லாதவைகளும். நானே ஸமஸ்தமான உலகம். வேதமும் நானே, வேதமல்லாததும் நானே. வித்தையும் நானே, அவித்தையும் நானே. பிரம்மாவும் நானதான், பிரும்மாவல்லாததும் நான்தான். மேலேயிருப்பதும் கீழே யிருப்பதும் குறுக்கே யிருப்பதும் நான்

தான்' என்று அதர்வண வேதஸ்வரூபிணியாகிய மஹா தேவி அனுக்ரஹித்தாள்.

## சித்சக்தி எல்லாவற்றிற்கும் ஆதாரம்

நான் ஏகாதச ருத்ரர்களாகவும் அஷ்டவஸுக்களாகவும் பன்னிரண்டு ஆதித்யர்களாகவும் விச்வேதேவர்களாகவும் உலகில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறேன். நான் இருவர்களான மித்ராவருணர்களையும் இந்திராக்னிகளையும் அச்வினிதேவதைகளையும் அவ்வாறே ஸோமனையும் த்வஷ்டாவென்னும் தேவனையும் பூஷ தேவதையையும் ஆறுவித ஐச்வரியங்களையும் என்னிடம் தரித்துக்கொண்டிருக்கிறேன். அப்படியே மேலான பராக்ரமத்தையுடைய விஷ்ணுவையும் பிரஜாபதியென்னும் பிரும்மாவையும் என்னிடம் தரித்துக்கொண்டிருக்கிறேன். நல்ல ஹவிஸ்ஸை ஹோமம் பண்ணுகிறவனையும் அதனால் துஷ்டமான சித்தம் நசித்து பிரத்யங்முகமான (கீழ் நோக்கிய) சித்தத்தையுடையவனையும் நன்கு ஸ்தோத்திரம் செய்கிறவனையும் இருக்கிற யஜமானனுக்கு அவனிஷ்டப்படி தனத்தையாவது அல்லது நல்ல ஞானத்தையாவது கொடுக்கிறேன். நான் அஷ்ட வஸுக்கள் ஸஞ்சரிக்கின்ற தேசமாயிருக்கின்றேன். இவ்வுலகத்திற்குச் சிரமாகிய நான் இவ்வுலகிற்குப் பிதாவான ஈச்வரனையும் உண்டு பண்ணுகிறேன். ஸமுத்திரத்தின் மத்தியிலுள்ள ஜலத்தில், எனது உத்பத்தி ஸ்தானம். (அதாவது ஸமஸ்த பிராணிகளின் உள்ளேயுள்ள ஹிருதய கமலத்திலும் ஜலம் முதலிய பஞ்ச பூதங்களிலும் ஜீவ சிவ

ரூபமாக எனது ஸ்வரூபம் இருக்கின்றது என்பது கருத்து.) இவ்விதம் அறிந்து கொள்ளுகிறவன் தேவியின் ஸ்வரூபத்தை யடைகின்றான்.

## தேவர்கள் தேவியை ஸ்தோத்திரம் செய்தல்

தேவியின் முகத்திலிருந்தே தேவியின் தத்வத்தை நன்கு தெரிந்து கொண்ட தேவர்கள் அவளை நமஸ்கரித்து பின் வருமாறு ஸ்தோத்திரம் செய்கிறார்கள்:—சர்வரின் பத்னியாயும் த்ரிமூர்த்திகளையும் உண்டாக்குகின்ற மஹா தேவியாயும் மங்கள ரூபிணியாயும் இருக்கிற உமக்கு எப்போதும் நமஸ்காரம். பிரகிருதி ரூபமாயும் உலகங்களுக்கு க்ஷேமரூபமாயு மிருக்கிற உம்மை நிச்சயமாய் வணங்கி யிருக்கின்றோம். அக்னியின் ஒளிபோன்ற ஒளியை யுடையவளாயும் தவத்தினால் ஜ்வலித்துக்கொண்டிருக்கிறவளாயும் தனது தேஜஸினால் அதிகமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறவளாயும் கர்மங்களின் பலன்களில் ஸம்பந்தப்பட்டவளாயும் இருக்கிற துர்கா தேவியை நாம் சரணமடைகின்றோம். நம்மிடம் ஏற்பட்டிருக்கும் உமது அதர்சனத்தால் ஏற்பட்ட அஞ்ஞான ரூபமான மிகுந்த இருளை நாசம் செய்யவேண்டும். தேவர்கள் எந்த அசரீர வாக்கை யுண்டுபண்ணினார்களோ அதை ஸகல ஜந்துக்களும் இவ்வாறு பேசுகின்றன. காதுகளுக்கு இனிமையான வாக் ரூபிணியாக எந்த தேவியிருக்கிறாளோ அவள் நமக்கு இஷ்டங்களையும் அன்னத்தையும் கறக்கிற தேனுவாயிருந்துகொண்டு நம்மை யடையட்டும். அதனால் வாக்விபூதிகள் நமக்

குண்டாகட்டும்; அஞ்ஞானத்திற்குக் காலராத்ரியாயும் பிரம்மாவினால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவளாயும் வைஷ்ணவியாயும் ஸ்கந்த ஸ்வாமியின் தாயாராயும் தக்ஷப்ரஜாபதியின் பெண்ணாயும் பரிசுத்தமாயும் அதிதியாயும் மங்களகரமாயும் இருக்கிற ஸரஸ்வதி தேவியை நமஸ்காரம் செய்கின்றோம். 8

## தேவியின் காயத்ரீ

மூலம்—மஹா லக்ஷ்மீஸ்ச வித்மஹே ஸர்வஸித்தி ஸ்ச தீமஹி தந்நோ தேவீ ப்ரசோதயாத்.

அர்த்தம்—மஹாலக்ஷ்மீயென்று நன்றாய் அறிந்து கொள்ளுகிறோம். ஸர்வஸித்தி யென்று நன்றாய் தியானம் செய்கிறோம். ஆகையால் மஹாதேவியானவள் நம்மை நன்கு நடத்தக் கடவாள்.

தாக்ஷாயணியாகிய உம்மிட மிருந்து இங்கு அதிதி உண்டானாள். ஆகையால் இந்த அதிதி உமது பெண். அவளிடமிருந்து க்ஷேமத்தை யுண்டாக்கக் கூடியவர்களும் அமிர்த பானம் செய்தவர்களாயும் உள்ள தேவர்கள் உண்டானார்கள். ஆதலால் நாங்கள் (தேவர்கள்) உமது பெண்ணின் பிள்ளைகளென்று எண்ணி எங்களை அஞ்ஞானத்திலிருந்து விடுவிக்கக் கடவது.

## ஆதிவித்தையின் ஸ்வரூபம்

மூலம்—காமோ யோநி: காமகலா வஜ்ரபாணி: குஹா ஹஸா மாதரிச்வாப்ரமிந்த்ர:। புனர் குஹா ஸகலா மாயயாச புருச்யேஷா (புன: கோசா) விச்வ மாதாதிவித்யோம். ||

இதனால் பிரணவ ஸ்வரூபமாயும் ஆதிமூல வித்தையுமாகிய 'பஞ்சதசாக்ஷரீ மஹா மந்திரம்' உபதேசிக்கப்படுகின்றது.

## ஆதிவித்தையின் மகிமை

இந்த ஆதிவித்தையே ஆத்ம சக்தி. உலகங்களை மோஹிக்கக்கூடிய ரூபமுள்ள இந்த வித்தை பாசம் (கயிறு) அங்குசம் (மாவெட்டி) வில்லு அம்பு ஆகிய ஆயுதங்களை தரித்துக் கொண்டிருப்பவள். இவள்தான் ஸ்ரீ மஹாவித்தை. இதை நன்றாய் அறிகின்றவன் துக்கங்களைத் தாண்டுகிறான். பகவத்ஸ்வரூபிணியான ஏ அம்மா! உம்மை எப்போதும் நமஸ்கரிக்கின்றோம். நம்மை எவ்விதத்திலும் எப்போதும் காப்பாற்ற வேண்டும். இவளே அஷ்டவஸுக்கள், ஏகாதசருத்ரர்கள், த்வாதச ஆதித்யர்கள். இவளே விச்வே தேவர்கள். ஸோமபானம் பண்ணுகிறவர்களும் பண்ணாதவர்களும் இவளே. இவளே ராக்ஷஸர்கள், அஸுரர்கள், பிசாசர்கள், யக்ஷர்கள், ஸித்தர்கள். இவளே ஸத்வம் ரஜஸ் தமஸ், என்னும் மூன்று குணங்கள். இவளே பிரஜாபதி, இந்திரன், மனுக்கள். இவளே நவக்ரஹங்கள், இருபத்தேழு நக்ஷத்திரங்கள், இன்னும் ஸகல நக்ஷத்திரங்கள். இவளே கலை காஷ்டை என்னும் கால ரூபமாய் உலகிலுள்ளவள். அப்படிப்பட்ட மஹாதேவியை நாம் நித்தியமும் நன்றாய் நமஸ்காரம் செய்கின்றோம். இன்னும் ஸகல தாபங்களையும் போக்கடிக்கின்றவளாயும் போகம் மோக்ஷம் இவைகளை நன்கு கொடுப்பவளாயும் அந்தமற்றவளாயும்

ஜயங்களைக் கொடுப்பவளாயும் மங்களங்களைக் கொடுப்பவளாயும் சுத்தமானவளாயும் இருக்கிற மங்களகரமான மஹாதேவியை சரணம் அடைகின்றோம்.

## புவனேச்வரியின் ஏகாக்ஷரீ மந்திரம்

மூலம்—வியதீகாரஸம்யுக்தம் வீதிஹோத்ரஸமந்விதம் । அர்த்தேந்துலஸிதம் தேவ்யா பீஜம் ஸர்வார்த்தஸாதகம் ॥

இது புவனேச்வரி என்னும் தேவி அவதாரத்தின் பீஜ மந்திரம். இது ஸகல காரிய சித்திகளையும் உண்டாக்கக் கூடியது. இவ்விதம் இந்த ஏகாக்ஷரீ மஹா மந்திரத்தை சுத்த மனதுடன் கூடியவும் மேலான ஆனந்த ஸ்வரூபமாயும ஞானத்திற்குக் கடலாயும் இருக்கிற மஹான்கள் எப்போதும் தியானம்செய்து கொண்டிருக்கிறார்கள்.

## மஹாசண்டியின் நவாக்ஷர வித்தை

மூலம்—வாங்மயா ப்ருஹ்மபூஸ்தஸ்மாத் ஷஷ்டம் வக்த்ரஸமன்விதம் । ஸூர்யோ வாமச்ரோத்ரபிந்து: ஸம்யுதாஷ்டத்ருதீயகம் ॥ நாராயணேந ஸம்யுக்தோ வாயுஸ்சாதரஸம்யுத:। விச்சே நவார்ணகோர்ண: ஸ்யாந் மஹதானந்ததாயக: ॥

இந்த நவாக்ஷர மந்திரமானது மேலான ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது.

ஹிருதய கமலத்தின் மத்தியில் வீற்றிருக்கிறவளாயும் காலை சூரியனுக் கொப்பான காந்தியை யுடையவளாயும் பாசம் அங்குசம் இவைகளை தரித்துக்

கொண்டு இருக்கிறவளாயும் நல்லவளாயும் கைகளால் வரங்களையும் அபயத்தையும் கொடுப்பவளாயும் மூன்று கண்களை யுடையவளாயும் ரக்த வஸ்திரத்தை யுடைய வளாயும் பக்தர்களின் காமங்களைப் பூர்த்தி செய்கிற வளாயும் தயா ரூபிணியாயும் இருக்கிற மஹாதேவியை நான் ஸ்தோத்ரம் செய்கின்றேன்.

ஹே மஹாதேவி! மஹா பயத்தைப் போக்குகிற வளாயும் பெருங் கஷ்டங்களையடக்குகிறவளாயும் பெருங் கருணை ரூபமாயும் உள்ள உம்மை நான் எப் போதும் நமஸ்காரம் செய்கிறேன்.

பிரும்மா முதலிய தேவர்களும் எவளது ஸ்வரூபத் தை யறிய மாட்டார்களோ அதனால் 'அஜ்ஞேயா' வென்று சொல்லப்படுகிறாள். எவளுக்கு அந்தமானது கிடையாதோ அதனால் 'அனந்தா' வென்று சொல்லப் படுகிறாள். எவளை கிரகிக்க முடியாதோ அதனால் 'அலட்சியா' வென்று சொல்லப்படுகிறாள். எவளுக்கு உத்பத்தி கிடையாதோ அவள் 'அஜா' வென்று கூறப்படுகிறாள். எங்கும் ஒருவளாகவே யிருப்ப தால் 'ஏகா' வென்று கூறப்படுகிறாள். ஒருவளே லோக ரூபமாயிருப்பதால் 'நைகா (அநேக ரூபிணி-பகு ரூபிணீ)' என்று சொல்லப்படுகிறாள். ஆகையா லேயே 'அஜ்ஞேயா, அனந்தா, அலக்ஷ்யா, அஜா, ஏகா, நைகா' வென்று கூறப்படுகிறாள். மஹாதேவி யானவள் மந்திரங்களுக்கெல்லாம் மாதாவாகவும் சப் தங்களின் ஞான ஸ்வரூபமாயும் ஞானங்களுக்குள் சின்மயத்தைத் தாண்டியவளாயும் சூன்யங்களுள் சூன்யத்தைப் பார்க்கிறவளாயும் இருக்கிறாள். எவ

ளைக் காட்டிலும் மிகவும் மேலானது கிடையாதோ அவள் துர்க்கை என்று கூறப்படுகிருள்.

## துர்க்கா தேவியின் மந்திரம்

மஹாதேவியானவள் கஷ்டங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறபடியால் துர்க்கை என்று சொல்லப்படுகிருள். இந்த துர்க்கா தேவியை சரணம் அடைகின்றேன். ஹே துர்க்கா தேவி! கஷ்டங்களைப் போக்கடி. (தும் துர்க்கே துரிதம் ஹர). ஸாதாரணமாய் அடையமுடியாதவளாயும் துராசாரங்களைப் போக்கடிக்கிறவளாயும் ஜனன மரண ரூபமான ஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்றுகிறவளாயும் இருக்கிற அந்த துர்க்கா தேவியை ஸம்ஸாரக் கடலிலிருந்து மிகவும் பயமடைந்த நான் நமஸ்காரம் பண்ணுகிறேன்.

## இந்த வித்தையை ஜபிக்கும் பலன்

இந்த அதர்வண சிர்ஷத்தை அத்தியயனம் செய்கிறவன் நாராயணம் முதலிய ஐந்து அதர்வ சிர்ஷங்களைப் படித்த பலனை யடைகிருன். இந்த அதர்வ சிர்ஷ உபநிஷத்தை நன்கு தெரிந்துகொண்டு பூஜையை யேற்படுத்த வேண்டும். இதை நூறு லக்ஷந்தடவை ஜபித்தாலும் பூஜையின் சித்தியை யடையமாட்டான். ஏனெனில் இதற்கு நூற்றெட்டு தடவை புரஸ்சரண விதி ஏற்பட்டிருக்கிறது. அதை செய்தால்தான் ஸித்தி ஏற்படும். பிறகு நூறு தடவை படிப்பவன் உடனே பாபங்களால் விடப்படுகிருன். மஹாதேவியின் அனுக்ரஹத்தால் பெரிய கஷ்டங்களையுந் தாண்டுகிருன்.

காலையில் படிப்பவன் ராத்திரி செய்த பாபத்தைப் போக்குகிறான். மாலையில் படிப்பவன் பகலில்செய்த பாபத்தைப் போக்குகிறான். காலையிலும் மாலையிலும் படிப்பவன் எவ்வளவு பாபியானாலும் பாபமற்றவனாகின்றான். ராத்திரியில் நான்காவது ஜாமத்தில் ஜபித்தால் வாக்ஸித்தி யுண்டாகும். புதிய விக்ரஹத்தினெதிரில் ஜபித்தால் தேவதை பிரத்யக்ஷமாகும். பிராணபிரதிஷ்டை செய்யும்போது ஜபித்தால் தேவதைகளுக்குப் பிராணங்கள் ஸ்திரமாய் ஏற்படுத்தப்படுகின்றன. அச்விநீ நக்ஷத்ரத்திலும் செவ்வாய்க்கிழமைகளிலும் மஹாதேவியின் ஸந்நிதானத்தில் இதை ஜபம் செய்தால் மஹாமிருத்யுவைத்தாண்டுகின்றான். இவ்விதம் நன்றாய் அறிகிறவன் மஹாதேவியின் அனுக்ரஹத்தால் ஸகல மங்களங்களையும் அடைகின்றான். சுபமஸ்து.

தேவ்யுபநிஷத் முற்றிற்று.

உ

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

ருக்வேதத்தில்

# பஹ்வ்ருசோபநிஷத்*

## வாங்மே மநஸி—சாந்தி:

### சித்சக்தியின் ஸ்வரூபம்

ஓம்! மஹாதேவியான சித்சக்தியே உலக ஸ்ருஷ்டிக்கு முன் ஒருவளாகவே இருந்தாள். அவள் தானே பிரும்மாண்டத்தை ஸ்ருஷ்டித்தாள். அவளே காம கலையென்று அறியப் படுகின்றாள். அவளே ஸ்ருங்காரகலையென்றும் அறியப்படுகிறாள். (அகார உகார மகாரங்களுக்கு சிகரம் போல் அர்த்த மாத்ரை இருப்பதால் அந்த ரூபமான இவள் ஸ்ருங்கார கலையாய் இருக்கின்றாள் என்பது கருத்து.)

### சித்சக்திதான்
### பிரம்மா முதலிய ஸ்தாவரங்களுக்கும் காரணம்

அவளிடமிருந்தே பிரம்மா உண்டானார். விஷ்ணு உண்டானார். ருத்ரன் உண்டானார். ஸகல தேவ கணங்களும் உண்டானார்கள். கந்தர்வர்களும் அப்ஸர

---

* மஹா தேவியானவள் சகல வேதஸ்வரூபமாய் இருப்பதோடு அவைகளால் நன்கு ஸ்தோத்திரம் செய்யப்படுவதால் 'பஹ்வ்ருசா' என்றழைக்கப்படுகிறாள். அவளது மகிமையைப் பிரகாசப் படுத்துவதால் இதற்கு 'பஹ்வ்ருசோபநிஷத்' என்று பெயர் வந்தது.

ஸ்திரீகளும் கின்னரர்களும் வாத்யம் வாசிப்பது முத லிய கானம் செய்யும் தேவர்களும் எங்கும் உண்டா னார்கள். ஸகல போக்யங்களும் உண்டாயின. சக் தியின் ஸம்பந்தத்தால் எல்லாம் உண்டாயிற்று. முட் டையிலிருந்து உண்டாவதும் வியர்வையிலிருந்து உண் டாவதும் பூமியிலிருந்து உண்டாவதும் கர்ப்பத்தி லிருந்து உண்டாவதும் ஆகிய ஸ்தாவர ஜங்கம ரூப மான மனுஷ்யன் முதலிய பிராணிக் கூட்டங்களும் உண்டாயின.

## சித்சக்தியை சப்தமாயும் அதன் அர்த்தமாயும் தியானம் செய்தல்

இவள்தான் பராசக்தி. இவள்தான் சாம்பவீவித் யை. ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ மஹா மந்திரத்தில் முதல் கண்டமாகிய காதிவித்யை யென்றும் இரண்டாம் கண்டமாகிய ஹாதிவித்யை யென்றும் மூன்றும் கண்ட மாகிய ஸாதிவித்யை யென்றும் கூறப்படுகின்றாள். இவளே ரஹஸ்யமான பரப்பிரும்மஸ்வரூபமாயும் பிர ணவமாயு மிருக்கின்றாள். பிரணவமான ஓம் காரத்தி லிருந்துண்டான வாக்ரூபமாயும் அதன் அர்த்த ரூபமா யும் இருக்கின்றாள்,

சித்சக்தியாகிய இவளே வியஷ்டி ஸமஷ்டி என் னும் பேதத்தோடு கூடிய மூன்று புரங்களையும் ஸ்தூல சூக்ஷ்ம பீஜமென்னும் மூன்று சரீரங்களையும் வியா பித்துக்கொண்டு உள்ளேயும் வெளியிலேயும் பிரகாசப் படுத்திக்கொண்டு தேசம் காலம் வஸ்து இவைகளில் ஒன்றும் ஸம்பந்தப்படாமல் இருப்பதால் மஹாத்ரி

புரஸுந்தரீ (மூன்றுவித சரீரங்களிலுமுள்ள அவித்யையை முழுவதும் நாசமாக்குவதால் திரிபுரசுந்தரீ, இவ்விதம் மஹத்தாய்இருப்பதால் மஹாத்ரிபுரசுந்தரீ). இவளே மேலான ஞானரூபிணீ.

## சித்சக்தி இரண்டற்றது

இவளே ஆத்மா. இவளைத் தவிர மற்றவை ஸத்யமல்ல. ஆதலால் ஆத்மாவல்ல. ஆகையால் இவள் பிரம்மஞான ரூபம். உண்டு இல்லை யென்றும் கலையில்லாத ஞான ரூபமாகிய வித்யை. இரண்டற்றதான பிரும்மத்தின் அறிவு. ஸத் சித் ஆனந்தம் இவைகளின் பிரவாஹமே மஹாத்ரிபுரசுந்தரி என்னப் படுகின்றாள். உள்ளேயும் வெளியிலேயும் பிரவேசித்துத் தான் ஒருவளாகவே விளங்குகின்றாள். எது இருக்கின்றதோ அதுவே ஸத்து. எது பிரகாசிக்கின்றதோ அதுவே சித்து. எது பிரியமானதோ அது ஆனந்தம்

ஆகையால் இவ்விதம் ஸர்வ ஸ்வரூபமுள்ளவளாய் மஹாத்ரிபுரசுந்தரி விளங்குகின்றாள். நீயும் நானும் ஸமஸ்தமான உலகங்களும் ஸகல தேவதைகளும் மற்றவையெல்லாமும் மஹா த்ரிபுரசுந்தரீதான். லளிதா வென்னும் பெயருள்ள வஸ்து ஒன்றுதான் உண்மை. அது இரண்டற்றதாயும் அகண்டமான அர்த்தமுள்ளதாயுமுள்ள பரபிரும்மம்.

பிரும்மத்தைத் தவிர வேறொன்றுமில்லை யென்னும் ஞானத்தால் ஸதாசிவம் முதலிய பஞ்ச பிரம்ம ரூபங்களும் லயத்தை யடைவதால் அவைகளால் ஏற்பட்ட ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்களும் ஸமகாலத்

தில் நாசமடைவதால் இவைகளுக்கு அதிஷ்டான மான மேலான தத்துவமான மஹத்தான பதார்த்தம் ஒன்றுதான் ஸத்தாக மிஞ்ஜுகின்றது.

## பிரத்யக் பிரசித் ஒன்றென்று பாவனை

உத்தமாதிகாரிகளால் 'பிரஞ்ஞானம் பிரும்மம்' என்றும் அவாந்தர வாக்கியத்தால் 'நான் பிரும்மமாயிருக்கின்றேன்' என்றும் சிஷ்யர்களின் அநுபவ வாக்கியத்தால் சொல்லப்படுகின்றது. ஆசார்யர்களின் அநுபவ ரூபமாக 'தத்த்வமஸி' என்றும் கூறப்படுகின்றது. 'இந்த ஆத்மா பிரும்மம்' என்றும் 'நான் பிரும்மமாயிருக்கிறேன்' என்றும் 'பிரும்மமே நான்' என்றும் கூறப்படுகின்றது.

## அம்பிகை முதலிய ரூபங்களால் சித்சக்தியைத் தியானம் செய்தல்

நான் எதுவென்றும் நான் அதுவென்றும் இது எதுவோ நான் அதுவென்றும் எவள் தியானம் பண்ணப்படுகிறளோ அவளே ஷோடசீ. ஸ்ரீவித்யை, பஞ்சதசாக்ஷரீ, ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரீ. அவளே பாலையென்றும் அம்பிகையென்றும் பகளையென்றும் மாதங்கி என்றும் ஸ்வயம்வரகல்யாணி என்றும் புவனேச்வரீ என்றும் சாமுண்டாவென்றும் சண்டா என்றும் வாராஹீ என்றும் திரஸ்கரிணீ என்றும் ராஜமாதங்கி என்றும் சுகச்யாமலாவென்றும் லகுச்யாமலாவென்றும் அச்வாரூடை என்றும் பிரத்யங்கிராவென்றும் தூமாவதியென்றும் ஸாவித்ரீ என்றும் ஸரஸ்வதீ

என்றும் காயத்ரீஎன்றும் பிரும்மானந்தகலே யென்றும் தியானம் பண்ணப்படுகிறாள்.

## பிரும்மத்தையே முக்கியமாய் அறியவேண்டும்

ருக் யஜுர் முதலிய வேதங்கள் மேலானதாயும் அழிவற்றதாயும் ஆகாச ரூபமாயுள்ள பரமாத்மாவி னிடத்தில் ஆச்ரயித்திருக்கின்றன. எந்த பரமாத் மாவினிடத்தில் ஸமஸ்தமான தேவர்களும் ஆச்ரயித் திருக்கின்றார்களோ, அந்தப் பரம்பொருளை எவன் அறியவில்லையோ, அவன் அந்த வேதங்களால் என்ன செய்வான் (இவ்விதம பரம்பொருளை யறியாதவனுக்கு ஸகல வேதங்களும் பயன்படமாட்டா.)

எவர்கள் வேதங்களில் கூறியபடி கர்மாநுஷ்டா னம் செய்து சித்த சுத்தியையடைந்து யதோக்தமான ஸாதனங்களுடன் கூடச் செய்யப்பட்ட வேதாந்தச் சரவணம் முதலிய நல்ல ஞானத்தால் அந்தப் பரம் பொருளை (பிரும்மத்தை) நன்கு அடைகின்றார்களோ அவர்கள் ஆத்ம மஹிமையில் நன்கு பிரகாசிக்கின் றார்கள். (அதாவது கிருத கிருத்யர்களாகி பிரும்ம மாகவே ஆகின்றார்கள். மஹாதேவியானவள் பர பிரம்ம ரூபமாதலால் இவளை நன்கு உபாஸிக்கின்றவர் கள் ஸகல ஸௌபாக்கியங்களையும் அடைந்து பிறகு பிரும்மமாகவே யாகின்றார்கள் என்பது கருத்து.) சுபமஸ்து.

பஹ்வ்ருசோபநிஷத் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

## அதர்வண வேதத்தில்

# பாவநோபநிஷத்

## பத்ரம் கர்ணேபி:—சாந்தி:

### ச்லோகம்

*பிந்து த்ரிகோண வஸுகோண தசாரயுக்ம*
*மந்வச்ர நாகதள ஸம்யுத ஷோடசாரம் ।*
*வ்ருத்த த்ரயம்ச தரணீ ஸதனத்ரயம்ச*
*ஸ்ரீசக்ரமேததுதிதம் பரதேவதாயா: ॥*

*ஸ்ரீபரதேவதையான மஹாதேவியின் ஸ்ரீசக்ர ரூபமாய் நமது தேகத்தையும் உபசார ரூபமாய் சேஷ்டாவிருத்திகளையும் பாவிக்க வேண்டுமென்று இது நமக்கு உபதேசிப்பதால் இதற்கு 'பாவநோபநிஷத்' என்று பெயர் உண்டாயிற்று.*

*அகண்டமாயும் மண்டலாகாரமாயுமுள்ள ஸகல பிரம்மாண்டத்தையும் வியாபித்துக் கொண்டிருக்கும் ஸ்வயம் பிரகாசமான பரமாத்மாவைத் தியானம் செய்யவேண்டும். ஓம். நமது அஞ்ஞானமாகிய இருளை நீக்கிவிட்டு நல்ல ஞானமாகிய பிரகாசத்தை யுண்டாக்கும் பரமசிவனே ஸ்ரீகுருநாதன். அவருக்கு ஸிருஷ்டி ஸ்திதி, ஸம்ஹாரம் முதலியவைகளுக்கெல்லாம் முக்கிய காரணமாயிருப்பது பராசக்தி. இந்த சக்தியின் ஸம்பந்தத்தாலேயே அவர் ஈச்வரன் ஆகின்றார்.*

## அத்யாத்மம் முதலிய மூன்று சரீரங்களிலும் ஸ்ரீசக்ரம் என்னும் பாவனை

இந்த பாவனை எதனால் ஏற்படுகிறது? தேகமும் ஒன்பது த்வாரங்களையுடையது. ஸ்ரீசக்ரமும் விமலாமுதல் ஈசானம் வரையிலுள்ள ஒன்பது சக்திகளையுடையது. ஆதலால் இவ்விரண்டிலும் ஒன்பது என்பது ஸமமாய் இருப்பதால் இந்த பாவனை ஏற்படுகின்றது. இவ்விதம் ஸ்ரீசக்ர ரூபமாயிருக்கின்ற இந்த தேஹத்திற்கு வாராஹீ தேவதை தகப்பனார். குருகுல்லா பலீ என்னும் தேவதை தாயார். தேகத்தை ஆச்ரயித்த தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்னும் புருஷார்த்தங்கள் சமுத்திரங்கள். இந்த தேஹமானது நவரத்ன மயமான தீவு. யோநி முத்ரை முதல் ஸர்வ ஸம்க்ஷோபிணீ வரையிலுள்ள முத்ரைகளில் வீற்றிருக்கும் மஹாத்ரிபுரஸுந்தரீ முதல் த்ரிபுரா வரையிலுள்ள தேவதைகள் இந்த தீவுக்கு ஆதாரசக்திகளாகின்றார்கள். தசை முதலிய எழு தாதுக்களோடும் இன்னும் மற்ற விகாரங்களோடும் கூடிய ஸங்கல்பங்களை கல்பவிருக்ஷங்கள். சரீரத்திற்கு தேஜஸ்ஸையுண்டாக்குகிற ஜீவனே உத்தியானம். நாக்கினால் அறியப்படுகின்ற தித்திப்பு, புளிப்பு, கசப்பு, உரைப்பு, துவர்ப்பு, உப்பு முதலிய ரஸங்களே ஆறு ருதுகள். கிரிய சக்தி என்பது பீடம். குண்டலினீ என்னும் ஞானசக்தியானது கிருகம். இச்சாசக்தியே மஹாத்ரிபுரஸுந்தரீ அறிகிறவன் ஹோதா (யஜமானன்). அறிவு என்பது அர்க்கியம். அறியப்படுவது ஹவிஸ். அறிகிறவன் அறிவு அறியப்படுவது இவைகளை அபேதமாய் என்

ணுவதுதான் (போக்கடிப்பதுதான்) ஸ்ரீசக்ரபூஜை. அளவுடன்கூடின சிருங்காரம் முதலான ஒன்பது ரஸங்கள் அணிமா முதலிய ஐச்வரியங்கள். காமம் கோபம் பேராசை அஞ்ஞானம் மதம் பொறாமை புண்யம் பாபம் ஆகிய இவை பிராம்மீ முதலிய எட்டு சக்திகள். பூமி ஜலம் தேயு வாயு ஆகாசம் காது தகை கண் நாக்கு மூக்கு வாக்கு கைகால் பாயு உபஸ்தம் மனம் முதலானவைகளின் விகாரங்கள் காமாகர்ஷிணீ முதல் சரீராகர்ஷிணீ வரையிலுள்ள பதினாறு சக்திகள். பேசுதல் வாங்குதல் போதல் விடுதல் சுகம் அனுபவித்தல் கொடுக்கல் வாங்கல் அலக்ஷயம் செய்தல் என்னும் இந்த எண்ணங்கள் அநங்ககுஸுமா முதல் அநங்காமலினி வரையிலுள்ள எட்டு சக்திகள். அலம்புஸா குஹூ விச்வோதரீ வருணா ஹஸ்திஜிஹ்வா யசஸ்வதீ அச்விநீ, காந்தாரீ பூஷா சங்கினீ ஸரஸ்வதீ இடா பிங்களா ஸுஷும்நா என்னும் பதினான்கு நாடிகள் ஸர்வஸம்க்ஷோபிணீ முதல் ஸர்வ த்வந்த்வ க்ஷயங்கரீ வரையிலுள்ள சதுர்தசார (பதினான்கு அரத்திலுள்ள) தேவதைகள். பிராண அபான வ்யான உதான ஸமான நாக கூர்ம க்ரிகர தேவதத்த தனஞ்ஜய மென்னும் பத்து வாயுக்கள் ஸர்வ ஸித்திப்ரதா முதல் ஸர்வஸௌபாக்யதாயினீ வரையிலுள்ள பஹிர் தசார (வெளியேயுள்ள பத்து அர) தேவதைகள். இந்த பத்து வாயுக்களின் சேர்க்கையின் வித்தியாஸத்தால் ரேசகம் பூரகம் சோஷகம் தாஹகம் ப்லாவகம் என்று பிராண வாயுவின் முக்ய கார்யமாய் ஐந்துவித மிருக்கின்றது. க்ஷாரகம் தாரகம் க்ஷோபகம் மோஹகம்

ஜிரும்பகம் என்று அபானவாயுவின் முக்ய கார்யமாய் ஐந்துவித மிருக்கின்றது. அதனால் மோஹகமும் தாஹகமும் பக்ஷ்யம் போஜ்யம் லேஹ்யம் சோஷ்யம் பேயம் என்னும் மனிதர்களின் நான்குவித ஆகாரத்தையும் பக்வம் செய்கின்றது.

இந்த பத்து அக்னி கலேகள் ஸர்வஜ்ஞத்வம் முதல் ஸர்வேப்ஸிதபலப்ரதம் வரையிலுள்ள அந்தர்தசார (உள்ளேயுள்ள பத்து அர) தேவதைகள். குளிர்ச்சி உஷ்ணம சுகம துக்கம் இச்சை ஸத்வம ரஜஸ் தமஸ் என்னும் குணங்கள் வசினீ முதல் கௌளினீ வரையிலுள்ள எட்டு சக்திகள். சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம என்னும் ஐந்து தன் மாத்திரைகள் ஐந்து புஷ்ப பாணங்கள். மனதானது கரும்பினால் செய்யப்பட்ட வில்லு. வசமாயிருப்பது பாணம். ஆசையே பாசம். விரோதமானது மாவெட்டி. அவ்யக்தம், மஹத் தத்வம், அஹங்காரம் இவைகள் காமேச்வரி, வஜ்ரேச்வரி, பகமாலினீ என்னும் உள் த்ரிகோணத்திலுள்ள தேவதைகள். பதினைந்து திதிகளின் ரூபமாய்க் காலஞ் செல்வதைப் பார்த்துக் கொண்டிருப்பது பதினைந்து நித்யா தேவதைகள். மிகவும் மேலான சிரத்தையே அதி தேவதை. இவ்விருவருள் முக்கியமான காமேசுவரியானவள் எப்போதும் ஆனந்தம் நிரம்பியவளாயும் பூர்ணமாயுமுள்ள ஆத்ம ஐக்கிய ரூபமான தேவதை.

## தேவதைக்கு ஆவாஹனம் முதலிய உபசாரங்களை பாவனை செய்தல்

ஜலம் என்பது சுகத்தை யுண்டாக்கக் கூடிய பதார்த்தம். செய்யவேண்டும்செய்யவேண்டாம் என்று

பாவனையுடன் கூடியிருப்பது உபசாரம். இவ்விதம் பிரும்மம் இருக்கின்றது, இதைத்தவிர வேறானது இல்லையென்று அநுஸந்தானம் செய்வதும் உபசாரம். உள்ளேயும் வெளியேயும்உள்ள இந்திரியங்களுக்கு உருவத்தை கிரஹிக்கும் சக்தியுண்டாகட்டும் என்பது ஆவாஹனம். அப்போது இந்த இந்திரியங்களுக்கு ஒரேவிதமாய் விஷயங்களை கிரஹிக்கும் சக்திதான் ஆஸனம். சிவப்பு வெளுப்பான ஸ்தானங்களை யொன்றாய்ச் செய்வது பாத்யம். எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறஸந்தோஷத்தோடும் ஆனந்தத்தோடும் தான் இருந்துகொண்டு சிஷ்யர்களுக்குத் தனது சித்தாந்தத்தைச் சொல்லிக்கொடுப்பதே அர்க்கியமாகும். பிரும்மமானது மிகவும் சுத்தமானதென்பதும் தானேயுண்டானதென்பதுமே ஆசமனீயம். எல்லா அவயவங்களும் சித்சந்திர மயமான பெருக்கையுடையவை யென்று எண்ணுவது ஸ்நானம். ஞானாக்னி ஸ்வரூபமான பரமானந்த சக்தியானது தோன்றுவதே வஸ்திரம். தனித்தனியாய் இருபத்தேழாய்ப் பிரிந்து இச்சை ஞானம்கிரியா ரூபமாயும் பிரும்மமுடியையுடையவும் ரஸமயமாயும் நூல்போன்றவுமான பிரும்ம (ஸுஷும்நா) நாடியே பிரும்ம ஸூத்ரம் (பூணூல்). தன்னைத் தவிர வேறு வஸ்துக்களில் பற்றற்றிருப்பதான எண்ணம் ஆபரணம். ஆத்மா மிகவும் சுத்தமென்றும் பரிபூர்ணமென்றும் தியானம் செய்வது கந்தம் (சந்தனம்). ஸகலமான உலக விஷயங்களையும் மனதால் ஸ்திரமாய் தியானம் செய்வதே புஷ்பம். அவைகளை எப்போதும் அப்படியே அடைவது தூபம். காற்

றுடன்கூடி உயரே எறிந்துகொண்டிருக்கும் நல்ல ஞானமயமான சுடருக்கு இடங் கொடுத்திருக்கும் தேகமானது தீபம் என்னப்படும்.

ஆத்மாவைத் தவிர மற்ற விஷயங்களில் போக்கு வரத்தில்லாமலிருப்பது நைவேத்யம். ஜாக்ரத் ஸ்வப்நம் ஸுஷுப்தி யென்றும் மூன்றவஸ்தைகளேயும் ஒன்றுகச் செய்வது தாம்பூலம். மூலாதாரத்திலிருந்து பிரும்மரந்திரம் வரையிலும் பிரும்மரந்திரத்திலிருந்து மூலாதாரம் வரையிலும் போய்க்கொண்டும் வந்து கொண்டுமிருப்பது பிரதக்ஷிணமாம். துரீயம் என்னும் அவஸ்தை நமஸ்காரம். தேஹமில்லாமல் ப்ரமாதாவாயிருப்பதில் மூழ்கியிருப்பது பலி போடுதல். ஸத்வமான பதார்த்த மிருக்கின்றது, அதைத் தவிர செய்ய வேண்டுவதுமில்லை செய்ய வேண்டாததுமில்லை என்று உதாஸீனமாய் இருந்துகொண்டு ஆத்மாவை லயிக்கும்படி செய்வது ஹோமம். தானே அந்த குருவினுடைய (முற்கூறிய பரம சிவனுடைய) பாதுகைகளில் மூழ்கிக் கிடப்பது பரிபூர்ணமான (மிகவும் நிறைந்த) தியானம்.

## பாவனை செய்வதின் பலன்

இவ்விதம் மூன்று முகூர்த்தம் ஆழ்ந்து பாவனை செய்பவன் ஜீவன்முக்தனுகின்றான். அவனுக்கும் தேவதையின் ஆத்மாவுக்கும் ஒற்றுமையானது ஸித்திக்கின்றது. நினைத்த காரியங்கள் கஷ்டமில்லாமலே மிகவும் லகுவாய் ஸித்திக்கின்றன. அவனே சிவயோகி யென்று சொல்லப்படுகின்றான். சுபமஸ்து.

பாவநோபநிஷத் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

# ஸ்ரீசக்ரோபநிஷத்

ஸ்ரீசக்ரமானது பதினைந்து நித்யா தேவதைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. அதில் ஸ்ரீ காமேச்வரனோடு வீற்றிருக்கும் ஸ்ரீகாமேச்வரியை வேதமந்திரங்களால் ஆவாஹனம்செய்து ஆயிரம் கலசங்களாவது அல்லது நூறுவது அல்லது ஒன்பதாவது அல்லது ஒரு கலசமாவது பிரதிஷ்டைசெய்து பூர்ணாபிஷேகம் செய்யவேண்டும். அறுபத்துநான்கு உபசாரங்கள் செய்யவேண்டும். அல்லது பஞ்ச பஞ்சகமாவது செய்ய வேண்டும். ஒன்றுமில்லாவிட்டால் நூறு தடவை பூஜிக்கவேண்டும். இவ்வாறு செய்தால் மோக்ஷத்தை யடைகின்றான். ஸ்ரீசக்ரத்தில் நியாஸம் செய்யவேண்டும். அவன் வியாபகனுகின்றான். மூலாதாரத்திலிருந்து பிரும்மரந்திரம் வரையில் வரிசையாய் நியாஸம் செய்யவேண்டும். இதில் ஸ்வராட் சக்ரத்தையும் விராட்சக்ரத்தையும் ஸம்ராட்சக்ரத்தையும் விராஜ்யசக்ரத்தையும் விச்வரூப சக்ரத்தையும் சத்ருஜித் சக்ரத்தையும் வரிசையாய் ஏழு கலாமயமாய் நியாஸம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்பவன் சிவன் ஆகிறான். கவியாகிறான். ஸர்வ சித்திகளுக்கும் ஈச்வரனுகிறான். நவநாதர்களால் வியாபிக்கப்பட்டவனுகிறான். உலகங்களால் பூஜிக்கப்படுகின்றான். விகல்ப

மற்ற மனதோடு பூஜை செய்பவன் சக்தியின் தேஹத்தையுடையவனாய் காளி ரூபமுடையவனாகிறான். சக்தியில்லாவிட்டால் மோக்ஷமில்லை ஞானமில்லை ஸத்தியமில்லை தர்மமில்லை தபஸ்இல்லை விஷ்ணு சிவன் பிரும்மா இவர்களும் இல்லை. ஆதலால் எல்லாம் சக்தியோடு கூடினதாய் இருக்கின்றது. ஆதலால் இந்த பராசக்தியை எப்போதும் இந்த ஸ்ரீசக்ரத்தில் ஆராதிப்பதால் ஸித்திகளுக்கெல்லாம் ஈச்வரன் ஆகின்றான். சுபமஸ்து.

ஸ்ரீசக்ரோபநிஷத் முற்றிற்று.

தேவீ உபநிஷத் தீபிகை முற்றிற்று.

உ

ஸ்ரீ

*சென்னை அடையாறு லைப்ரரியில் தலைமை ஸம்ஸ்க்ருத பண்டிதரான*

## பலாசூர் - ராமநாத சாஸ்திரிகளின்

# கிரந்தங்கள்

---

**ஸ்ரீமான் நீலகண்ட தீக்ஷிதரவர்கள் இயற்றிய**

## சாந்தி விலாசம்

ஸம்ஸ்கிருத ச்லோகங்களும் தமிழ்மொழிபெயர்ப்பும் கூடியது. பக்திமார்க்கத்தை நன்றாய்ப் பிரகாசப்படுத்துவது. எல்லாருக்கும் அவச்யமானது. இரண்டாம் பதிப்பு. விலை அணா 4.

---

## உபநிஷத் பஞ்சகம்

இதில் கர்ப்பம், ஜாபாலி, வாஸுதேவம், யோக தத்வம், ஸந்யாஸம என்னும் ஐந்து உபநிஷத்துக்கள் ஸம்ஸ்கிருதத்திலிருந்து நேராகத தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. எல்லாருக்கும் அவச்யமானது. இரண்டாம் பதிப்பு. விலை அணா 6.

---

## ஸ்ரீ ராமகிருஷ்ண உபநிஷத்

### தமிழ் மொழிபெயர்ப்பு

**முதல் முதல் வெளிவருவது**

ஸ்ரீமத் ஸர்வேச்வரர்களான ஸ்ரீராமகிருஷ்ண பரமாத்மாக்களுடைய அபார மஹிமையையும் இவர்களின் சரித்திரங்களிலுள்ள அத்புதமான ரஹஸ்யங்களையும் பிரகாசப்படுத்தும் இந்த உபநிஷத்துக்களைத் தெளிவாய்த் தமிழில் மொழி பெயர்த்து முதல் முதல் வெளியிடப்பட்டிருக்கிறது. எல்லாருக்கும் அவச்யமானது. விலை அணா 2.

**எல்லாவற்றிற்கும் தபால் கூலி வேறு.**

**பலாசூர் - பண்டித - நா. ராமநாத சாஸ்திரி.**

*"க்ஷேகேச்வா விலாசம்", மயிலாப்பூர், சென்னை.*

உ

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

# ஸ்ரீலலிதோபாக்யானம்

## மஹாமந்திரசாஸ்திரம்

### முதல் முதல் தமிழில் வெளிவருவது

ஸ்ரீவேதவ்யாஸ பகவான் அருளிச்செய்த பிரம்மாண்ட புராணத்தின் உத்தரகண்டத்தில் அடங்கியிருப்பது இந்த உபாக்யானம். இதில் ஸ்ரீ லலிதாதேவியின் உத்பத்தியும், ஸ்ரீ காமேச்வரனோடு விவாகமும் தேவராஜ்ய பட்டாபிஷேகமும், பரிவார தேவதைகளோடு தேவராஜ்யபாரமும், அப்போதைக்கப்போது அசுரர்களின் வதமும் நன்றாய் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்திராதி தேவர்கள் செய்யும் 'ஸ்ரீ லலிதாஸ்தவராஜம்' முதலான ஸ்தோத்திரங்களும், தேவியின் அதிஷ்டானமான ஸ்ரீபுரவர்ணனமும், அதை ஆராதிக்கும் ரீதியும் வெகுவான மந்திர யந்திர ஸ்வரூப வர்ணனமும், இதர பரிவார தேவதைகளின் சக்தி முதலியவைகளும், ஸ்ரீ லலிதாம்பாவின் அபார மஹிமையும் ஆகிய இவைகள் நன்றாய் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இதை நமது ஸ்திரீகள் முதல் ஸகலரும் மிகுந்த பக்தி சிரத்தையோடு தினந்தோறும் பாராயணம் செய்து நல்ல பலன்களை யடையுமாறு நல்ல தமிழில் மொழி பெயர்த்து வெளிப்படுத்தியிருக்கிறேன். அனைவரும் இதனை யாதரிப்பார்களாக.

விலை ரூபா 3. தபாற் செலவு வேறு.

பலாகூர் - பண்டித - நா. இராமநாத சாஸ்திரி,
"நாகேச்வர விலாசம்", மயிலாப்பூர், சென்னை

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

# மஹாமந்திரசாஸ்திரகிரந்தங்கள்

தமிழில் முதல் முதல் வெளியாகின்றன

## தேவீ உபநிஷத் தீபிகை (முதல் பாகம்)

*இதிலுள்ள ஐந்து உபநிஷத்துகளில் தேவியின் மஹிமை மந்திர விசேஷம் உபாஸனைக்கிரமம் ஸ்ரீசக்ரத்தில் ஸ்ரீகாமேச்வரீ காமேச்வர பூஜாவிதி உபசாரங்களின் தத்வார்த்தம் முதலியன நன்கு வர்ணிக்கப்பட்டிருக்கின்றன.* விலை அணா 4.

## தேவீமாஹாத்ம்யம்

*மார்க்கண்டேயபுராணத்திலுள்ள 'ஸப்தசதீ' என்னுமிந்த மந்திர சாஸ்திரத்தில் தேவியானவள் அஸுரர்களை ஸம்ஹரிப்பதும் தேவர்களை அனுக்ரஹிப்பதும் தேவர்கள் மஹாதேவியை ஸ்தோத்திரம் செய்வதும் நன்கு வர்ணிக்கப்பட்டிருக்கின்றன.* விலை ரூபா

## ஸ்ரீலலிதோபாக்யானம்

*பிரும்மாண்ட புராணத்திலுள்ள இதில் ஸ்ரீலலி தேவியின் அவதாரம் ஸ்ரீ காமேச்வர விவாஹம் மெ யிைல் அஸுர ஸம்ஹாரம் வெகு மந்திர யந்தி விரிவாய் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன.* விலை

**எல்லாவற்றிற்கும் தபாற்கூலி வேறு**

*இவைகளை ஸ்திரீ புருஷர்கள் யாவரும் படி பயனடையலாம்.*

பலாசூர் பண்டித கா. இராமநாத சாஸ்திரிகள்,

*அடையாறு லேப்ரரி தலைமை ஸம்ஸ்கிருத*

*'காமேச்வர விலாஸம்,' மயிலாப்பூர் செ*

இந்துகலாபிவிருத்திச் சங்க இலவச வெளியீடு 5.

அருணகிரிநாத சுவாமிகள்

அருளிச்செய்த—10

# கதிர்காமத் திருப்புகழ்



இந்துகலாபிவிருத்திச் சங்கம்,
175, செட்டியார் தெரு
கொழும்பு.
வியய வைகாசி.

சிவமயம்.

அருணகிரிநாத சுவாமிகள்

அருளிச் செய்த

# கதிர்காமத் திருப்புகழ்.

இந்துகலாபிவிருத்திச் சங்க

இலவசப் பிரதி—10,000

இந்துகலாபிவிருத்திச் சங்கம்,
175, செட்டியார் தெரு
கொழும்பு

பதிப்பாளர்:—S. C. சாமி & சன்ஸ்,
சௌகார் பேட்டை சென்னை.

விய௵ வைகாசி௴



செல்வரங்கன் பிரஸ், *for* Q. H. M.S. *971*-C. 10,000-10-6 46.

சிவமயம்.

அருணகிரிநாதசுவாமிகள் அருளிச்செய்த

# கதிர்காமத் திருப்புகழ்.

௧ தனதனன தான தனதனன தான
தனதனன தான தானாத தனதான.

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரள மீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

௨ தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன தனதான.

அலகின் மாறு மாருத கலகி பூத வேதாளி
அடைவிலெ ஞாளி கோடாளி அறுபேய
அழலி கோளி நாணது புழுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடாய மருளாகி
பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு
பருவ மேக மேதாரு வெனயாதும

பரிவு றாத மாபாதர் வரிசை பாடி யோயாத
பரிசில் தேடி மாயாத படிபாராய்
இலகு வேலை நீள்வாடை யெரிகொள் வேலை மாசூரி
லெறியும் வேலை மாறாத திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார
விறைவி கான மால்வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை யாறு சூழ்சீத
கதிர காம மூதூரில் இளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேருவே தேவர் பெருமாளே.

௰. தனன தான தந்த தனதான தனன தான தத்த தனதான.

எதிரிலாதபத்தி தனமேவி இனியதாளிணைப்பையிருபோதும்
இதய வாரி திக்குள் றவாகி எனது ளேசி றக்க அருள்வாயே
கதிரகாமவெற்பிலுறைவோனே கனகமேருவொத்தபுயவீரா
மதுரவாணியுற்றகழலோனே வழுதிகூனிமிர்த்தபெருமாளே

௲ தனதன தனதன தனதன தனதன
தானத் தனந்த தனதான.

கடகட வருவிகள் தபவரி யதிர்கதிர்
காமத் தரங்க மலைவீரா
கனகத நககுலி புணரித குணகுக
காமத் தனஞ்சம் புயனோடே
வடசிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனென
வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடிமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே
அயிலவ சபரிசெய் கவிபுகல் தருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே

# கதிர்காமத் திருப்புகழ்

இடமொரு மரகத மயிலிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினு மகமொழி பகரினும்
ஏழைக் கிரங்கும் பெருமாளே.

௫ தனனதன தானத்த தனனதன தான
தனனதன தானத்த தனதான தானன.

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போலு லாவியே
சரியைக்ரியை யோகத்தின் வழிவருந்து பாசத்தர்
தமையுணர ராகத்தின் வசமாக மேவியே
உமதடியு ருருக்கு மனுமரண மாயைக்கு
முரியவர்ம காதத்தை யெனுமாய மாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்கிரு பாசித்தம் அருளகூர வேணுமே
இமகிரிகு மாரத்தி யநுபவைப ராசத்தி
எழுதரிய காயத்ரி யுமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவித்த முருகாவி சாகனே
அமரர்சிறை மீள்விக்க அமாசெய்துப்ர தாபிக்கு
மதிகவித சாமர்த்ய கவிராஜ ராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த
அரியகதிர் காமத்தில் உரியாபி ராமனே.

௬ தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா தனதான.

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றான் இருகூறாச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்

**இ**றைச்சே வல்பெற்றுய் வலக்கார முற்றுய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே

**புரத்தார்** வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது

**பொறுத்தார்** பரித்தார் சிரித்தார் எரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேபின்

**கரித்தோ** லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனைக்

**கரிக்கோ** லவிட்டார் கணுக்கா னமுத்தே
கதிர்கா மமுற்றுர் முருகோனே.

எ தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத் தனதனா.

**சரி**யையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட்ட ரிதாய

**சம**யபே தத்தினுக் கணுகோண மெய்ப்பொ ருட்
டருபரா சத்தியிற் பரமான

**துரி**யமே லற்புதப் பரமஞா னந்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு

**துகளில்சா** யுச்சியக் கதியையீ றற்சொற்
சுகசொரு பத்தையுற் றடைவேனே

**புரி**சைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்

**புரள**வேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே

**கரி**யயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்

**கதலி**கூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிர்காம மக்கிரிப் பெருமாளே.

# கதிர்காமத் திருப்புகழ்

அ தானதன தத்தத்த தானதன தத்தத்த
தானதன தத்தத்த தனதான.

பாரவித முத்தப்ப டீரபுள கப்பொற்ப
யோதரநெ ருக்குற்ற இடையாலே
பாகளவு தித்தந்த கீதமொழி யிற்புட்ப
பாணவிழி யிற்பொத்தி விடுமாதர்
காரணிகு ழற்கற்றை மேல்மகர மொப்பித்த
காதில்முக வட்டத்தில் அதிமோக
காமுகன கப்பட்ட வாசையைம றப்பித்த
கால்களைம றக்கைக்கும் வருமோதான்
தேரிரவி யுட்கிப்பு காமுதபு ரத்திற்றெ
சாசிரனை மர்த்தித்த அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்நத்ரி
கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபியெயி னச்சிக்கு
மேகலையி டைக்கொத்தின் இருதாளின்
வேரிமழை யிற்பச்சை வேயிலரு ணக்கற்றை
வேல்களில் கப்பட்ட பெருமாளே.

கூ தனதன தத்த தனதன தத்த
தனதன தத்த தனதான.

மருவறு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனனும்
மதில்கள்தா வுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கு மதனனும்
இருகணுல் முந்த முதிரயா மந்தி
னிரவினல் நித்த மெலியாதே
இடருறு மெய்த்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா

கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறைவோனே
முருகனே பத்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகிமே விட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமாளே.

௧0 தானதன தானத் தனதான தானதன தானத் தனதான.

மாதர்வச மாயுற் றுழல்வாரும் வாதவமை ணுமைற் றிரிவாரும்
நீதகலவோதிப் பணியாரும் நீரக மீதிற் றிகழ்வாரே
காதலொளி யேநற் குணசீலா நாரியிருவோரைப்புணர்வேலா
சோதிசிவஞானக்குமரேசாதோமில்கதிர்காமப்பெருமாளே.

௧௧ தனன தான தான தத்த தனன தான தான தத்த
தனன தான தான தத்த தனதான.

முதிரு மார வார நட்பொ டிலகு மார வார மெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
முடிவி லாத தோர்வ டக்கில் எரியு மால மார்பி டத்து
முழுகி யேறி மேலெ றிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்து மதுர ராக நீடி சைக்கும்
வினைவி டாத தாய ருக்கு மழியாதே
வினையு மோக போக முற்றி யளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்கு ளெதிரி லாத வேல்த ரித்த
கடவு ளேக லாப சித்ர மயில்வீரா
கயலு லாம்வி லோச னத்தி களப மார்ப யோதரத்தி
ககன மேவு வாளொ ருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடையி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாச கத்தை யருள் வோனே
அகில லோக மீது சுற்றி யசுரர் லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே.